வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12;

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.



மில்க்வைற் நீலசோப்

பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1994 சித்திரை திங்கள் 15-ம் நாள் (28—4—1963) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 3 | இதழ் 48

# திடீர்த் தேர்தல் வருமா?

## தமிழ் பேசும் தொழிலாளர் ஒற்றுமையே நமது இலட்சியம்

### இனவேற்றுமை கடந்த வர்க்க உறவு கற்பனை வாதம்

### எழுது வினைஞர் சங்கத்தின் மேதினச் செய்தி

இனவேற்றுமை கடந்த தொழிலாளர்ஒற்றுமை பொய்யாய், பழங் கதையாய், கனவாய்ப் போய்விட்டது எனவே தமிழ் பேசும் தொழிலாளர் ஒற்றுமையே எமது புதிய கோட்பாடாகவும், இலட்சிய முழக்கமாகவும், இதய நிதமாகவும் இருக்கட்டும்.

இவ்வாறு அரசாங்க எழுது வினைஞர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. இ. பால சுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு விடுத்த மே தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் அச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

தொழிலாள வர்க்கத்தின் உரிமை வேட்கையை, இலட்சியத்தை, இதயகீதத்தை உலகுக்கு முதல் முதல் பறையறிவித்த இம் மே நன்னாளில், சென்ற ஆண்டு—

மொழி வழி பிரிந்தால்-
வாழ்வோம்!
இன்றேல் வீழ்வோம்!

என்ற புதிய கோட்பாட்டை நாம் செய்தியாகத் தமிழ் பேசும் தொழிலாளருக்கு விடுத்திருந்தோம்!

இப்புதிய கோட்பாடு எம் மக்களின் கருத்தில், சிந்தனையில் குடிகொண்டு விளங்குவதைக் காண்கிறோம். இதன் எதிரொலியாக மொழி வழி பிரிந்து புதிதாகத் தொழிற் சங்கங்கள் முகிழ்ந்திருப்பதைக் காண மகிழ்ச்சியடைகிறோம், பெருமைப்படுகிறோம்.

#### வரலாறு தரும் பாடம்

கடந்த கால வரலாற்றில் நாம் கற்றுக்கொண்ட படிப்பினையும், தெரிந்துகொண்ட கசப்பான உண்மைகளுமே தொழிலியக்கத் துறையில் இனவேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமை என்னும் கோட்பாட்டில் எம்மை முற்றாக நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டது. இதன் விளைவாகவே கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக இந்த இன வேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமை என்னும் போலிக் கோட்பாட்டை தகர்த்தெறிந்து, தமிழ் பேசும் தொழிலாளர் மொழிவழி பிரிந்து ஒற்றுமைப்படல் வேண்டும் என்ற இயற்கையான கோட்பாட்டை முன்வைத்து சங்கம் பணி புரிந்து வருகிறது.

( 9-ம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சிக்கு பல நெருக்கடிகள்

### சாதனை பற்றி அறிக்கை

சுதந்திரக் கட்சி ஆட்சி பீடம் ஏறிய பின்னர் செய்த சாதனைகள் பற்றி அறிக்கை தயார் செய்வதாகவும், அடுத்த பட்ஜெட் சென்ற வருடத்தைப் போல இரு மடங்கு துண்டு விழுமென்று அரசாங்கம் எதிர்பார்ப்பதாலும், அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனேகர் எதிர்க்கட்சிக்குச்செல்லும் சாத்தியக் கூறுகள் ஏற்பட்டிருப்பதாலும் திடீரென்று பொதுத் தேர்தல் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காகவே ஆட்சியாளர் பிரஸ்தாப அறிக்கையை தயார் செய்வதாக அரசியல் வட்டாரத்தில் பேசிக்கொள்ளப்படுகிறது.

அரசாங்கம் ஆட்டம் கண்டுள்ளது. நெருக்கடிகள் பல அதன் மென்னியைப் பிடித்துள்ளன. ஓர் "அதிர்ச்சி வைத்தியம்" செய்தாலன்றி சுதந்திரக் கட்சி இனிமேல் ஆளும் கட்சியாக இருக்க முடியாதென்று அரசியல் அவதானிகள் திடமான அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

#### அன்றுட செலவுக்கே......

அடுத்த ஆண்டில் அரசாங்க இலாகாகளின் அன்றுடச் செலவுக்கே திண்டாட வேண்டிய நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளதாகவும் அரசாங்கத்தின் அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் இவ்வருடம் துண்டு விழுந்த தொகைபோல இருமடங்கு தொகை துண்டு விழுமென்றும், அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் "அரோகரா" ஆகிவிடுமென்றும், இதனால் நாட்டிலே பெரும் கிளர்ச்சியும் கொந்தளிப்பும் ஏற்பட்டு, அரசாங்கம் தலை சாய

(9-ம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில்

## தமிழ் தொழிலாளரின் மாபெரும் அணி

### எழுது வினைஞர் சங்கம் நடாத்தும் மேதின விழா

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் சார்பில், யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் 1-5-63 பிற்பகல் ஆறுமணிக்கு மே தினம் பிரமாண்டமான முறையில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் நடைபெற்றுவருவதாக நமது யாழ் நகர் நிருபர் அறிவித்துள்ளார்.

சுருட்டு உற்பத்தியாளர் சங்கம், இலங்கைத் தொழிலாளர் கழகம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், சீமெந்து கூட்டுத்தாபன உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை அருந்ததியார் சங்கம் போன்ற தொழிலாளர் இயக்கங்கள் உட்பட, மற்றும் கலாச்சார இயக்கங்களான இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், தமிழ் எழுத்தாளர் மன்றம் கொழும்பு, ஈழத்து இளம் கலைஞர் இயக்கம், அகில இலங்கை உரிமை குறைந்த தமிழர் அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங்குபற்றுவார்கள் என்று அறியப்படுகிறது.

விழாவிற்கு முன்னர் ஊர்வலம் ஒன்றை நடாத்துவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

விழா ஒழுங்குகளைக் கவனிப்பதற்காக எழுது வினைஞர் சங்க உறுப்பினர்கள் பலர் யாழ்நகர் சென்றுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## மலையகத்தில் விடுதலை முழக்கம்

### அட்டன் நகரில் இ. தொ. க. வின் மேதினப் பெருவிழா

உரிமைகள் அனைத்தும் இழந்த தொழிலாளர்கள், தொழிலாளர் தினத்தை அட்டன் மாநகரில் பெரும் விழாவாக எடுக்கிறார்கள். தொழிலாளர் உரிமைத்தினம் மலையக மக்களின் விடுதலைப் போர் பிரகடனத்தினமாக அமையப்போகிறது. அரசியல், தொழில் உரிமைகள் அனைத்தையும் இழந்த மலையக மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மே. தின விழா, மே முதலாம் நாள் அட்டன் நகரிலுள்ள பௌத்த ஆலயத்திற்கு அருகாமையில் கழகத் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

மலையகத்தில் பல்வேறு தொழிற் சங்கங்களுக்கு மத்தியிலும் கழகம் அமைக்கப்பட்ட தன் நோக்கத்தையும், மலையக தொழிலாளர்களின் நிலை உயர கழகம் காட்டும் வழி என்ன என்பதையும் விழாவில் கலந்துகொள்ளும் தலைவர்கள் எடுத்துக் கூறுவார்கள்.

தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் உட்பட கழகத் தலைவர்கள் உரை நிகழ்த்துவார்கள்.

கூட்டத்திற்கு முன்னர் ஒரு மாபெரும் ஊர்வலமும் இடம் பெறும்.



சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

றோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'றோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரயம்பதி

# மக்களின் அறப்போர்

## வரலாற்றை அசைபோடும் நிகழ்ச்சி

## படகுப்படையெழுச்சி கண்ட பாவலன் முரசு

**1961**ம் ஆண்டு, பங்குனித் திங்கள், எட்டாம் நாள், ஈழத் திரு நாட்டிலே, தமிழினத்தவரின் மொழி உரிமைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த நாள்.

மண் தூவினுல் மண் கீழே விழாத நிலையில் ஆண்களும், பெண்களும் திரள் திரளாகக் குழுமி நின்று மட்டக்களப்புக் கச்சேரி முன் மறியல் செய்து மானம் காத்த நாள்.

உள்ளத்தால் ஒருவராகவும், உடலினுல் பலராகவும் நின்று, உரிமைப் போர்க் குரலெழுப்பியநாள். உரிமை உணர்ச்சி வெள்ளம் ஊற்றுக் கண் திறந்து பரவிப் பாய்ந்த நாள்.

அன்று, அறநெறி தவறிய ஆட்சிக் குழுவினரின் ஆணைக்கு அமைந்து, அதிகாரம் செலுத்தி, எம்மை ஆளவந்த அரசாங்க அதிபர், அவர் தம் துணை ஊழியர்களுடன், அரசகரும அலுவலகம் அமர்ந்து செயலாற்றி அறப்போரைச் சிதறடிக்க அந்தரங்க ஆயத்தங்கள் செய்திருந்தார்.

எட்டவும், கிட்டவும் முடியாத தன் நுட்பமான திட்டத்தைச்செயலாக்கி, அதை நாளிதழ்களின் கொட்டை எழுத்துகளில் பார்த்து மகிழ மனக்கோட்டை எழுப்பியிருந்தார். எட்டுத்திசையும் தன் கெட்டித்தனத்தைப் பற்றிச் செய்தி பரவும் என எதிர்பார்த்திருந்தார்.

அவரது அந்தரங்கத் திட்டம்:- நீல வாவியை நீர் அரணுக உடைய மட்டுநகர்க் கச்சேரியினுள் எதிர்பாராத வேளையில், எதிர்பாராத இடத்திலிருந்து இயந்திரப் படகேறி இரகசியமாக, இலகுவாகப் பின்னுல் நுழைவது.

பொழுது விடிந்தது. இரகசியத் திட்டம் இருந்த இடம் தெரியாது பொலுபொலுத்து நொருங்கியது. மூவர்ணக்கொடி சூடி, மட்டுநகர்க் கோட்டையின் நீர்ப்பரப்பை முற்றுகையிட்டிருந்தது படகுப்படை. படகுப் படையைப் பார்த்த அரசாங்க அதிபர் அதிர்ச்சியுற்று மௌனியானுர்.

பரம்பரை பரம்பரையாகப் பைந்தமிழ் வாழும் பாடும் மீன் நாட்டவரை, வெறும் பதுமைகள் என்று எண்ணியவர்களின் எண்ணத்தில் மண் விழுத்திய நிகழ்ச்சி இது.

படகேறிச்செல்ல முயன்ற ஆட்சிக் குழுவினரின் அதிகாரச் சின்னமாகிய அரசாங்க அதிபரின் அரும் பெரும் முயற்சியை முறியடித்து, முற்றுப் புள்ளியிட்டு அணைத்துலகப் புகழ்பெற்ற நிகழ்ச்சி இது.

அறப்போரின் ஆரம்ப கர்த்தா அண்ணல் காந்தியடிகள் கூட நடத்தாத—சலத்தின்மேல் நடந்த—சத்தியாக்கிரக நிகழ்ச்சி இது.

ஈழத் தமிழினத்தவரின் மொழி உரிமைப்போராட்ட வரலாற்றிலே, ஆரயம்பதி மகள் நடத்திய நிகழ்ச்சி, வரலாற்று முதன்மை பெற்றுத் திகழும்.

[இப்படகுப் படைக்குத் தலைமை தாங்கிய கவிஞர் ஆரையூர் அமரன் அன்று தன் உணர்ச்சியில் தோன்றிய சொல்லோவியத்தை உங்கள் முன் கவிதையாக நிறுத்தியிருக்கிறுர்.]

ஆ-ர்

### பதியூர்ப் படகுப் படை எழுச்சி

—ஆரையூர் அமரன்—

அஞ்ச நெஞ்சர் ஆரையூர்க் காரர்
வெஞ்சமர் செய்யும் வேங்கைநாண் வீரர்
வெள்ளிக் கிரிவரை வென்றமர் தீரர்
வெண்திரைக் கடலிடை சென்றவர் பேரர்

கடற்போர் செய்தார் கடாரம் வென்றுர்
கால்முளை வந்தார் கலமொடு சென்றுர்
கண்ணுய்த் தமிழைக் காத்திட நின்றுர்
எண்ணுர் உயிரை இழப்போம் என்றுர்

அறப்போர் முரசின் ஒலி கூட்டி
அணியாய்த் தமிழர் படகோட்டி
ஆட்சிக் கபாய நிறம் காட்டி
அடைந்தார் எழுவான் திசை பூட்டி

பண்டைத் தமிழன் கடற் படையைப்
பார்க்க நேரில் இடம் கிடைக்கப்
பறக்கும் வண்ணக் கொடி குடைந்து
பகலோன் கதிர்கள் ஒளி படைக்க

நுரைத்து வாவிதான் திரை எதிய
இரைத்து மீன்கள்போய்க் கரை திரிய
நிரைத்து வந்தவர் பட கறிய
விறைத்து நின்றனர் அர சதிபர்

கலசலத்து வாவிநீர் சத்தம் காட்ட
சடசடத்துக் கொடிகள் ஓசை கூட்ட
சங்கத் தமிழின் அரசை நாட்ட
சிங்க நாதமே செய்தார் கேட்க

களப்பூர் கோட்டைச் சலப் பரப்பைக்
களவாய்த் தாண்டும் உள நினைப்பைக்
கல்வீழ் களிமண் கல கலக்கிக்
கண்டார் வெற்றிக் கலம் செலுத்தி

கரிய காக்கை கரைநீ துரைக்கப்
பெரிய கூட்டம் விரைந் திரைப்ப
தெரிந்த தோற்றத் திரள் நிரைப்ப
உரிமைப் பேரிடை ஓடம் நிறைந்ததே

படுத்த சிங்கம் துயில் விட்டுப்
பசியில் பாயும் நிலைக் காட்சி
பதியூர்ப் படகுப் படை காட்டப்
பயந்தார் ஆட்சி நடை போட்டு

பத்தியும்—சக்தியும்—மொத்தமாய் கூட்டும்
சத்தியும்—பத்தியுமே வெற்றியைக் காட்டும்
பத்தரின் சத்தியும் புத்தொளி ஊட்டும்
தித்திக்கும் செந்தமிழ் திக்கெட்டும் கேட்கும்

### மலைநாட்டு இளைஞர் கழகம்

எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த எக்லாஸ் தோட்ட இளைஞர்களின் ஒத்துழைப்பால் இளைஞர் முன்னேற்றக் கழகம் என்ற புதுப் பெயருடன் ஓர் மன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி மன்றத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

இயக்குநர்: திரு. எஸ். பி. சுப்பையா, தலைவர். திரு. எம். இராமையா, உப-தலைவர்: திரு. எம். பச்சமுத்து, செயலாளர்: திரு. கே. வைத்திலிங்கம், உப-செயலாளர்: திரு. எஸ். ரெங்கையா, பொருளாளர்: திரு. எஸ். அரிகிருஷ்ணன், உப-பொருளாளர்: திரு. வி. ஜெயராம்.

## நாணமும் வீரமும் கொண்ட கிள்ளியின் களிறு

—)o(—

— 'அல்வையூர் அம்பலவி' —

வரலாற்றுப் பெருமை பெற்ற நம் தமிழர்கள் வீரத்திற்கும் விவேகத்திற்கும் விளக்கேற்றி விளங்கினுர்கள் என்பதற்கு விளக்கம் பல காட்ட நாம் சங்க காலத் தமிழ் இலக்கியத்தில் இலங்கும் வீரஞ் செறிந்த கவிதைகள் பலவற்றை அள்ளி அள்ளி அளிக்கலாம்! மறத் தமிழர் மத்தியில் வாழ்ந்த மாவீரர்களின் வீரத்திற்கு நாம் சிறிதும் சளைத்தவர்களில்லை என் புதை எடுத்தியம்புவதுதான் முத்தொள்ளாயிரப் பாடல்களில் பொதிந்திருக்கும் களிறுகளின் வரலாறு!

கருங்கற்களால் கட்டப்பட்டு, இரும்பு ஈட்டிகளால் பொருத்தப்பட்ட பெரிய பெரிய இரும்புக் கதவுகளையெல்லாம் தூள் தூளாக நொருக்கி, எறிந்து, மறத் தமிழர்களின் மாவீரத்திற்கு, தான் எவ்வகையிலும் சளைத்தவனில்லை என்பதைக் காட்டியது கிள்ளியின் களிறு! சீற்றம் பொங்கிய யானைக்கு எதிரி என்று தெரிந்தவர்கள் எவரும் தப்பியதே கிடையாது. ஆகா! யானைக்கா இவ் வீரம் என்று எண்ணிவிடாதீர்கள்.

இவ்வகையான வீரஞ் செறிந்த கிள்ளியின் களிறு சென்றது, வென்றது என்ற பெயருக்கு இலக்காகுமே தவிர்த்து, தோற்றது, திரும்பியது என்ற சொல்லுக்கு இடம் வைக்காது!

போரில் வெற்றி வாகை சூடினுன் கிள்ளி! அந்தப் புரத்தை அடைந்தான் அழகு நங்கை காதலியிடம்! வீரமும் ஆண்மையும் செறிந்த வீரர்கள் தம் தம் காதலியையும் மனைவியையும் காணச்சென்றனர்!

ஆனுல் கிள்ளியின் களிறு... காதலியைக் காண நாணமுற்றது, ஏன்?

வெற்றிக்கு அடித்தளமாக இருந்த கோட்டையை உடைக்குங்கால், மதிலிலே மோதும்போது தந்தம் சிறிது உடைந்து, எதிரி மன்னனைக் கொல்லுங்கால் கால் நகம் சிறிது சிதைந்தது. இப்புண் உள்ளத்தை அரிக்க, வெற்றி பெற்ற பெருமையை மறந்து காதலியைக் காண நாணமுற்றது, ஆண்மை மிக்க கிள்ளியின் களிறு!

'கொடிமதில் பாய்ந்திற்ற
கோடும் அரசர்
முடிஇடறித் தேய்ந்த
நகமும் - பிடிமுன்பு
பொல்லாமை நாணிப்
புறங்கடை நின்றதே
கல்லார்தோள் கிள்ளி
களிறு.'

(முத்தொள்ளாயிரம்)

தண்ணென இருந்த கிள்ளியின் கண்கள் தணலென எரிந்தன. புடை சூழ்ந்தது, புறப்பட்டான் போர்க்களம்! உரிமை முழக்கம் எட்டுத்திக்கும் கேட்டது! பலவிதப் போர்ப் படைகள் புறப்பட்டன! போர் முரசம் கேட்டது! வீரர்கள் வீறு கொண்டெழுந்தனர்! கிள்ளியின் களிறு மன்னனைப் பார்த்துப் பணிந்தது. "மன்னாதி மன்னு! எனதொரு கால் காஞ்சியில் வைத்துவிட்டேன், மற்றொரு கால் தஞ்சையில் பதித்து விட்டேன், மறத் தமிழர் மாவீரம் காட்ட, சிறுமதி படைத்த சிங்களவர்களை அடக்க மூன்றுவது காலை ஈழத்தில் வைத்துவிட்டேன், மற்றொரு காலை மாமன்னன் கிள்ளியின் உல்லாச வாசி என்பதை நிலைநாட்ட- இதோ பாருங்கள்" என்றவாறு இன்முகத்தால் கிள்ளியை நோக்கி, மதிப்போடு கால்களைத் தூக்கி நின்றதாம் களிறு!

இந்தக் காட்சியைக் கண்ட கிள்ளியின் கண்கள் புன்னகையால் புதுமலராக, உள்ளம் பெரு மகிழ்ச்சியால் துள்ளாமல் என்ன தான் செய்யும்?

கச்சி ஒருகால் மிதியா,
ஒருகாலால்
தத்துநீர்த் தணதஞ்சை
தான்மிதியாப் பிற்றையும்
ஈழம் ஒருகால் மிதியா
வருமே, நம்
கோழியர்கோக் கிள்ளி
களிறு."

(முத்தொள்ளாயிரம்)

யானைக்கே இவ்வீரம் என்றுல் மாவீரர்க்கு எவ்வாறு என்பதை எடுத்தியம்பவா வேண்டும்?

ஆனுல் நாம் இன்று, கோழைகள், மோழைகள், கொத்தடிமைகள், ஆமைகள், ஊமைகள் என்று கூறத்தான்......?

## மக்கள் குரல்

### கிளர்ச்சி செய்க!

"அறுபது வயதை இம்மாதம் திரு. எஸ். யூ. சோமசேகரம் அடைகிறுர். அரசாங்க உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறுவார்; தமிழ் பேசும் மக்கள் சிறிது நிம்மதியாக வாழலாம்' என்று தமிழ் பேசும் மக்களும் அவர்களிற் சிறப்பாக ஆசிரியர்களும் எண்ணினர்.

திரு. சோமசேகரத்தின் சேவையை நன்கு பயன்படுத்தும் சிங்கள அரசாங்கம் அவருடைய சேவைக் காலத்தை நீடித்துத் தமிழ் பேசும் மக்களைத் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டதே!

சேவையில் தொடர்ந்து இருக்க எண்ணி அரசாங்கத்தை மகிழச் செய்வதற்குத்தான் திரு. சோமசேகரம் அவர்கள் சிங்களத்தை ஏன் தமிழர்கள் படிக்கக்கூடாது என்று பகிரங்கமாகப் பிரசாரம் நடத்தத் தொடங்கி விட்டாரோ?

திரு. சோமசேகரத்திடம் தமிழ்பேசும் மக்கள் கொண்டுள்ள வெறுப்பை இச் சிங்கள அரசாங்கம் உணரத் தக்கதாக இனித் தமிழ் பேசும் மக்கள் செயலாற்ற வேண்டிய சூழ்நிலை வந்துவிட்டது. இதற்குப் பல வழிகள் உண்டு. இவற்றுள் ஒன்று திரு. சோமசேகரத்தைச் சிங்கள மாகாணம் ஒன்றுக்கு மாற்றுமாறு கிளர்ச்சி செய்தலேயாகும். தமிழ் பேசும் மக்கள் திரு. சோமசேகரத்தை மாற்ற இயக்கம் ஒன்றைத் தொடங்க உடனே முயலவேண்டுமென்பதே என் கருத்து. இந்த இயக்கத்தை மூன்று வகையாகச் செய்யலாம். முதலாவது கையெழுத்துக்களைச் சேர்த்து கல்வி மந்திரிக்கு அனுப்புவது. இரண்டாவது பொதுக் கூட்டங்களில் தீர்மானங்களை நிறைவேற்றுவது. மூன்றுவது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்டு பாராளுமன்றத்தில் அவரை மாற்றும் விடயத்தைப் பிரஸ்தாபிக்கச் செய்வது.

பொ. தி. அரசு

யாழ்ப்பாணம்

### தமிழ் மொழியிற் காசோலை

யான் 22-2-63 இல் இலங்கை வங்கியில் சிறியவோர் கணக்கை வைக்க விரும்பிச் சென்றேன். ஆங்கில விண்ணப்பத்தை நிரப்பினேன், கையொப்பம் தமிழில் இட்டேன். ஆங்கில விண்ணப்பத்தில் கையெழுத்துத் தமிழில் இட்டதால் அத்தாட்சிப்படுத்த இன்னுமொருவர் தேவைப்பட்டது. ஆங்கிலத்தில் கையொப்பமிட அன்பாய் வற்புறுத்தவும்பட்டேன். புதிதாக வந்த, பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை முகாமையாளரும், தென்னிலங்கைச்சகோதரருமான அவர், தமிழில் விண்ணப்பத்தைத் தராது, நான் போன நோக்கத்தை நிறைவேற்றப் பார்த்தார்போலும். யான் முகாமையாளரை நோக்கி "ஐயா. யான் தென்னிலங்கையில் சில பல சிங்களச் சகோதரர்களுடன் படிப்பித்திருக்கிறேன். அவர்களிற் சிலர் வங்கி அலுவலையும், காசோலையையும் தனிச் சிங்களத்தில் எழுதியதையும், கண்டேன். யான் தமிழ்ப் பகுதியிலே தமிழ் மொழியில் எழுதவும் கணக்கு வைக்கவும் ஏன் முடியாதென அறியேன்." அதன்

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமதி பத்மாசனி,
பருத்தித்துறை.

கே: இலக்கியக் காதலுக்கும் இக்காலக் காதலுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: முன்னேயது கற்பனைக் காதல்—பின்னேயது சினிமாக் காதல்.

கே: கனிக்கும் கன்னிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: இன்னன்ன...

ஃ

து. சிறிதரன், நீர்கொழும்பு.

கே: மன்றுரில் இரண்டொருவர் கூடி நடத்தும் தமிழரசு எதிர்ப்பு இயக்கம் என்று கூறப்படுவதை தமிழர் எதிர்ப்பு இயக்கம் என்ருல் பொருந்துமா?

ப: இல்லே, "காணி பிடி இயக்கம்" என்பதுதான் பொருத்தமான பெயர்.

ஃ

சா. பத்மினி, நுகேகொடை.

கே: தமிழ் மொழி உரிமை கிடைக்கும் வரை கலியாணம் செய்வதில்லேயென்று சில த. அ. க. வாலிபர்கள் கூறுகின்ருர்களே, இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: தமிழ் மொழிப் போராட்டத்திலே சிந்தனையையும் செயலேயும் ஈடுபடுத்தியிருப்பதால் கலியாணம் பற்றி எண்ணுவதற்குக் கூட அவர்களுக்கு அவகாசமில்லே. நேத்தாஜி நிலேயும் இம்மாதிரித்தானே இருந்தது.

ஃ

வை. எம். சரீப், சைனபே.

கே: மூதூர் முதல் எம். பி. போகிற இடத்திற்கு ஏன் இரண்டாவது எம். பி. போவதில்லே?

ப: முகத்தில் கரி பூசிக் கொள்ள விரும்பாததால்.

ஃ

இரா. வெ. அழகர்சாமி,
பண்டாரவளே.

கே: இன்று புதிதாக வெளிவந்துள்ள காசுகளில் சிங்களத்தில் மட்டும் பெரிய எழுத்துகளாகப் பொறித்திருக்கிருர்களே, ஏன், சிங்கள மக்களுக்குச் சரிவரக் கண் தெரியாதோ?

ப: இல்லே, சிங்களத்தைப் பெரிதாகக் காட்டி பணப் பெருக்கத்தை மறைக்கும் தந்திரம் இது.

ஃ

ஹென்றி மணி, மஸ்கெலியா.

கே: எதிர்வரும் பொதுத் தேர்தலில் மலேயகத்தில் தமிழரசுக் கட்சி எத்தனே தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெறும்?

ப: அதற்கு முன்பு மலேயகத் தமிழ் மக்கள் வாக்குரிமை பெற்று விட்டால், மலேயகத் தொகுதிகளில் பெரும்பாலானவை கட்சியின் கைக்கு வந்துவிடும்.

கே: கடந்த வாரம் நான் தமிழ் மொழியில் எழுதி அனுப்பிய ஒரு சுந்தி ஆங்கிலத் தந்தியாக மாறி கம்பனியில் கிடைத்திருக்கிறதே! இதில் அடங்கி இருக்கும் நயத்தை உங்களால் கூற முடியுமா?

ப: அது சிங்களமாக மாறிக் கிடைக்காதிருந்ததே! அந்த மட்டில் நன்மைதான்.

ஃ

ஜி. எஸ். பிள்ளே, பொறனே,

கே: குயுக்தி மாமா, நான் உமது மனேவியுடன் படம்பார்க்கச் சென்றதாக நேற்றிரவு கனவு கண்டேன். இதன் அர்த்தம் என்ன?

ப: அர்த்தம் அனர்த்தம் தான் நினேவின் பிரதிபலிப்பே கனவு.

ஃ

ரவுப்டீன் சூடீன்,
அம்பாந்தோட்டை.

கே: சிறிமா பண்டாரநாயக்காவின் அரசாங்கத்திலிருந்து திரு. அசோகா கருணரத்ன விலக்கப் பட்டதன் காரணம் என்ன?

ப: அரசாங்கத்தின் ஊழல்களே அம்பலப்படுத்தியது தான் குற்றமாம், ஊழல்களே நீக்குவதற்குப் பதிலாக அவரையே நீக்கிவிட்டார்கள்.

பொ. விசுவலிங்கம், காரைநகர்.

கே: தமிழர் பிரச்சினே தீர்வதற்கான ஒரு வழி கூறுங்கள்?

ப: இன்றுள்ள நிலேமையில் அறப் போராட்டமே சிறந்த வழி.

ஃ

க. பரமநாதன், மருதானே.

கே: குயுக்தியாரே! இப்படி மாற்றினுல் என்ன? "இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினக்கள் குப்பைக் கூடையில் போடப்படும்"

ப: தவறில்லே. ஏனெனில் அதனே ஒட்டியனுப்பினுலும் தகுதியற்ற கேள்விகளுக்குத் தகுந்த இடம் குப்பைக் கூடைதானே!

கே: எங்கு பார்த்தாலும் "ஜீனி"யைப் பற்றியே கதைக்கிருர்களே! என்ன காரணம்?

ப: இனிக்க இனிக்க கதைக்க முடியுமென்பது தான் காரணம்.

ஃ

தமிழரசு அபிமானி,
இராமநாதபுரம்.

கே: தமிழரசுக் கட்சியினர் சத்தியாக்கிரகம் செய்வதென்ருல் அரசாங்கம் பரபரப்படைவதின் காரணமென்ன?

ப: தமிழரசார் சத்தியத்தையெல்லாம், ஆக்கிரகம் செய்து விட்டால் அரசாங்கத்திடம் மிஞ்சுவது அசத்தியம் மட்டுமே. அவர்கள் பரபரப்பு அடைய இது ஒரு காரணம்.

ஃ

ஆ. நா. சுந்தரலிங்கம்,
நெடுந்தீவு.

கே: தமிழன் இழந்த உரிமைகளேப் பெறும் முறை பற்றி எடுத்துக் கூறுவீர்களா?

ப: அந்த முறைதான் அடக்கு முறையை எதிர்த்து நிற்கும் முறை.

ஃ

குமாரச்செல்வன், ஏழாலே.

கே: பதவி எ[illegible] தலைப்பா அரிச்சந்திரா வந்தி ரேத்து அரசியல் சாம்பார் பானையில் விழுந்தடித்துக் கொண்டு போய் விழ்ந்ததன் மர்மம் என்ன?

ப: மூழ்கிக் கொண்டிருப்பவன், கையில கபபட்ட துரும்பிலும் தொங்கப் பார்ப்பானும்!

ஃ

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

'அரங்கரசன்' கொக்குவில்.

கே: திரு. சு. நடேசன் மந்திரியாவாரா?

ப: அது அவர் தமிழரசு இயக்கத்தை எதிர்க்கும் தீவிரத்தைப் பொறுத்த விஷயம்!

ஃ

"மறத்தமிழ் மகன்",
கொழும்பு-8.

கே: பாராளுமன்றச் சட்ட மூலம் தமிழ் மொழியின் தரத்தைத் தாழ்த்திய சுதந்திரக் கட்சியின் நியமனத்தை முதவைக்குப் பெற்றுள்ள "பெரியார்," களனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் ஐ. தே. கட்சியின் மந்திரி சபையில் இருந்து ஏன் விலகினுர்?

ப: இம்மாதிரிக் கேள்விகளேக் கேட்டு சாயத்தைப் போக்காதீர். கடைசி காலத்தில் 'சங்கரா சங்கரா' என்று ஒரு பதவியாவது கிடைக்கட்டுமே!

ஃ

[illegible] கொக்குவில்.

கே: தமிழ் மொழிப் பிரச்சினே தலைப்பாவுடன் திருமா? அல்லது வட்டமேசை மேதைகளால் திருமா?

ப: அவர்கள் கலங்கிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சி செய்பவர்கள். போராட்டத்தால் மட்டுமே தீரும் பிரச்சினே மொழிப் பிரச்சினே. இது அனுபவம்.

கே: தமிழியக்கம் ஆரம்பித்த பின்பும் ஆங்கில மோகங் கொண்டலேயும் என் நண்பனே என்னவென்றழைப்பது?

ப: தாய் மொழி மோகத்தைவிட, தன் மொழியின் மீது ஒரு தமிழனே மோகம் கொள்ளச் செய்துவிட்டானே ஆங்கிலேயன், அவனேச் சொல்லுங்கள்.

ஃ

சாணுதாணு, அல்வையூர்.

கே: 22-4-63-ந் திகதி தினகரன் பத்திரிகையில் "நேயர் குரல்" பகுதியில் "ஜி. ஜி. பொன்னம்பலத்தின் சொற்பொழிவில் முரண்பாடுகள்" என்ற தலைப்பிட்டு தவத்துறை ஆனந்த ரஞ்சன் என்பவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இக் கட்டுரையாளரின் வயது மூன்று என்று சொல்லப்படுவது உண்மையா?

ப: சொந்தப் பெயரில் எழுதத் துணிவில்லாத பயந்தாங்கொள்ளி ஒருவர் சிறு குழந்தையின் பின்னல் மறைந்து நிற்கிருர். அவர்களின் அறிவும் குழந்தைப் புத்தி அளவுதான்.

ஃ

சி. வரதன், கொழும்பு-10.

கே: இலங்கை இராணுவத்தினருக்கு அதிகமான துப்பாக்கிகள் கொடுக்கப் போகிருர்களாம். உண்மைதானு?

ப: அதிக உணவு கொடுப்பதற்குப் பதிலாக குண்டுகளைக் கொடுக்கலாம் என்ற எண்ணம் போலும்!

ஃ

கே. காங்கேசன், யாழ்ப்பாணம்.

கே: கடந்த சத்தியாக்கிரகத்தின் போது தமிழ் மக்களே இராணுவத்தினர் அடித்து இம்சித்த போது திரு. ஜி. ஜி. அவர்கள் எங்கே, என்ன செய்துகொண்டிருந்தார்?

ப: இரு வழக்குகளே வைத்துக்கொண்டு எந்த வழக்கில் பேசினுல் தனது வங்கிக் கணக்கு வீங்கும் என்று ஆராய்ந்து கொண்டிருந்தாராம்.

ஃ

ஆர். மாதவன், மகாதோவை.

கே: குயுக்தியாரே, தமிழரசுக் கட்சியைத்தவிர்த்து ஏனேய கட்சிகளே ஏன் தாக்குகிறீர்? அதன் மர்மம்தான் என்ன?

ப: தமிழ் பேசும் மக்களின் உரிமைகளே அங்கீகரிக்க மறுக்கும் கட்சிகள் அனேத்தும் எனது எதிரிகள்!

ஃ

செல்வி எஸ்.எல். மரியா,
மதுகாமம்.

கே: மணமான சினிமா நடிகைகளின் கழுத்தில் மாங்கலியத்தை எப்போதும் காணலாமா?

ப: கன்னியாக நடிக்கும் போது அதனேக் காண முடியாது.

கே: தாங்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்?

ப: எல்லா மதமும் எனக்குச் சம்மதமே!

ஃ

கு. தியாகமணி, மாவநெல்ல,

குயுக்தியாரே! அதிகம் சிரிப்பவர்களேச் சந்தேகம் மிக்கவர்களென்றும், அறிவாளிகளென்றும், ஏமாற்றுக்காரர்களென்றும் அறிஞர்கள் பலப் பல விதமாய்க் கூறுகிருர்கள். அதிற் தாங்கள் எந்த விதத்தைச் சேர்ந்தவர்?

ப: இவைகளில் எதிலும் சேர்ந்தவனல்ல நான். வெறும் வெள்ளே உள்ளத்தை வெளிப்படுத்துவதே எனது சிரிப்பு.

# எல்லாந் தமிழில்!

—சிற்பி—

வெள்ளி நிலா ஒளி வெள்ளத்திலே உளம் துள்ளி
மகிழ்கையிலே
கள்ளமிலாச் சிறு மின்னல் சிரிப்பொடு பிள்ளே தவழ்கையிலே
கிள்ளே மொழியுடன் கொள்ளேயின்பம் தரும் பெண்களேக் காண்
கையிலே
தெள்ளு தமிழினிற் தேனமுதச் சுவைக் கீதம் பிறக்குதம்மா!

★


வண்ணப்பூஞ் சோலேகள், வாவி, அருவிகள், வையத்துக்
காட்சிகளும்
எண்ணற்று, வானத்தில் எங்கும் நிறைந்திடும் எழிலுமிழ்
மீன்களும் என்
கண்கள் எறங்கினும் கற்பனே உள்ளத்தைக் கட்டியிழுத்துவிடும்
அன்னே மொழியினில் அமிழ்தத் தமிழினில் அவற்றினே நான்
வடிப்பேன்.

★

புன்னகையோடுயர் பொன்னகையோடெழில் அன்ன நடை
பயிலும்
கன்னல் நிகர்த்திடு கன்னியர் தந்திடும் காதல் கனிரசத்தில்,
இன்னல் கலேந்திட, இதயம் களித்திடும் இளேஞர்களின்
செயலில்,
என்னே மறந்திடுவேன் இனி என்றுமே இன் தமிழ்ப்
பாட்டிசைப்பேன்!

★

அன்னே மொழி நல்ல அமிழ்தத் தமிழ் மொழி
அன்பினுக்கோர் மொழியே
கன்னல் சுவை மொழி கற்கண்டு சேர் மொழி காதலுக்கோர்
மொழியே
பண்பினுக்கோர் மொழி, படிப்புக்கு மோர் மொழி,
பக்திக்குமம் மொழியே
எண்ணிடுவோம் இனி என்றுமே நாம் செய்வோம் எல்லாம்
தமிழ் மொழியில்!




ராஜ பீடி ஸ்பெஷல்
இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்து பலனடையுங்கள்
ராஜாபீடி கம்பனி
கொழும்பு-14.
டெலிபோன்: 2739

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

## "தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

கடந்த வாரம் கொழும்புத் தமிழ்ச் சங்கப் பணிமனையில் கூடிய கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றம் தமிழியக்கத்தைத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பரப்புவதற்குப் புதிய ஒரு முறையை மேற்கொண்டுள்ளார்கள்.

### தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் வேண்டுகோள்

வருமான வரி செலுத்தும் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் தமிழ் வருமான வரி விண்ணப்பப் பத்திரங்களை உபயோகிக்கும்படி தனித் தனிக் கடிதம் அனுப்பப்போகிறார்களாம். அவர்களின் இந்த முயற்சியை நாம் நிச்சயம் பாராட்டாமலிருக்க முடியாது. இவர்களின் முன் மாதிரியை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய ஏனைய பொது மன்றங்களும், கழகங்களும் பின்பற்றித் தமிழ் பேசும் மக்களைச் சகல துறைகளிலும் தமிழ் மொழியை உபயோகிக்கும்படி பிரசாரம் செய்தால் அது நல்ல பலனைத் தரும். இவர்களின் முன் மாதிரியை ஏனைய இயக்கங்களும் பின்பற்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

### வருமான வரிப் பத்திரங்கள்

வருமான வரி செலுத்தும் தமிழ் பேசும் மக்களுக்கு ஆங்கிலப் படிவங்களே கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. ஆங்கிலப்படிவங்களைப் பெற்ற அனேகர் அதைத் திருப்பி அனுப்பித் தமிழ் படிவங்களை அனுப்பி வைக்கும்படி வருமானவரித் திணைக்களத்தாருக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் நாம் அறிந்துள்ளோம்.

தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தனக்குக் கிடைத்த ஆங்கில விண்ணப்பப் பத்திரத்தைத் திருப்பி அனுப்பித் தமிழ்ப் படிவம் பெற்றிருக்கிறார்.

இப்படி ஆங்கிலப் படிவங்களைத் திருப்பி அனுப்பித் தமிழ்ப் படிவங்கள் வேண்டு பதாகக்கூறி அதை ஏற்க மறுத்து விட்டாராம். திரும்பவும் அந்தக் கடிதம் இரு தினங்களுக்குப் பின்னர் அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. திரும்பவும் அவர் பழைய முறையையே கையாண்டுள்ளார்.

### தமிழ் பேசும் மக்கள் கடன்

இந்த முன்மாதிரியைக் கொழும்பில் உள்ள ஒருவரே செய்யும்பொழுது, வட—கிழக்குப் பகுதிகளில் உள்ளோர் தயங்குவது மதியீனம். தமிழ் பேசும் ஒருவர் எங்கு வாழ்ந்தாலும் இதைச் செய்தே ஆகவேண்டும். இது தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரதும் கடமை என்பதை மறந்துவிடக்கூடாது.

### படிவங்கள் நிரப்பும் முறை

கட்டளைகள், பத்திரங்கள், படிவங்கள் சிலவற்றை நிரப்புவதில் சில கஷ்டங்கள் இருப்பதாக பல தொண்டர்களும், பொது மக்களும் நமக்கு எழுதியுள்ளார்கள். அடுத்த வாரம் முதல் இப்பகுதியில் மாதிரி படிவங்களும் அவற்றை நிரப்பும் முறையும் விபரிக்கப்படும். தொண்டர்கள் அவற்றைக் கத்தரித்துவைத்துக் காப்பாற்றவேண்டும். அப்படி அவற்றைக் கத்தரித்து வைத்திருந்தால் பொது மக்களுக்குச் சந்தேகம் ஏற்படும் பொழுது உதவுவதற்கு வசதியாக இருக்கும்.

### மணவினை மடல்

இரு வாரங்களுக்கு முன்னர் மணவினை நிகழ்ச்சிக்கு அனுப்பக்கூடிய திருமணம், திருமண மடல், திருமணத் திரு இதழ், திருமண அழைப்பு, திருமணத் திருமுகம், மன்றல் அழைப்பு மலர், மன்றல் அழைப்பு இதழ், வாழ்க்கைத் துணை ஒப்பந்தம், பகுத்தறிவுத் திருமணம், பதிவுத் திருமணம்.

மாதிரித் திருமண அழைப்பு இதழ் ஒன்று.

### திருமண இதழ்

உயர் திரு ............ அவர்களுக்கும் அவர்தம் அருமைத் துணைவியர் அவர்களுக்கும்.

அன்புமிக்கீர்,

எங்கள் தவப் புதல்வன் நம்பி......கும் உயர் திரு......
......தவப் புதல்வி நங்கை...
.........கும் 1965ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 7ம் நாள் புதன் கிழமை காலை 8 மணிக்குமேல் 9-30 மணிக்குள் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வந்திருந்து மா மணமக்களை நாமணக்க வாழ்த்தியருள வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

................ ......................

......................

15—4—1965

தொடர்ந்து மேலும் இது போன்ற மாதிரி அழைப்பிதழ்களும், வாழ்த்து மடல்களும் இப்பகுதியில் இடம் பெறும்.

தொண்டர்கள் எண்ணிக்கை தினமும் பெருகி வருகிறது. இதுவரை தொண்டர்களாகப் பதிவு செய்து கொள்ளாதவர்கள், இன்றே இப்பொழுதே ஒரு தபால் அட்டையில் உங்கள் பெயர், முகவரி, வயது, தொழில் முதலியவற்றைக் குறித்து தமிழியக்கம் மே/பா சுதந்திரன் த. பெ. இல. 1183, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

### நமக்குள்ளே நடப்பவை

இடமின்மையால் இம்முறை வெளிவரவில்லை. அடுத்த வாரம் வழக்கம் போல் வெளிவரும்.

### தமிழுக்காகவே உயிர்விடு! வா!!

''ஜெயம்''

நோய்க்கும் நொடிக்கும் இலக்காகி
நொந்து மாண்டோர் கோடியே!
காய்க்கும் கனிபோல் வாழ்ந்து பின்
கழன்றுவிட்டார் ஓடியே!
வாய்க்கும் சரித்திர ஏட்டினிலே
வளமாய் உன்பெயர் வாழணுமா?
தாய்க்கும் தந்தைக்கு(ம்) எதிர்ப்பெனினும்
தமிழுக்காகவே உயிர்விடு! வா!!

மென்று கோரியுள்ளவர்கள் தங்கள் பெயரையும் முகவரியையும் நமக்குத் தெரிவித்தால் இப்பகுதியில் அவர்களின் பெயர்கள் இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### திருப்பி அனுப்புங்கள்

தமிழ் பேசும் மக்கள் சிலருக்கு அரசாங்கத் திணைக்களங்களிலிருந்து வரும் கடிதங்கள் சில சிங்களத்தில் முகவரியிட்டு அனுப்பப் படுவதாக அறிகிறோம். சிங்களத்தில் முகவரியிட்டு அனுப்பப்படும் கடிதங்களை உடனே திருப்பி அனுப்பிவைக்க வேண்டியது ஒவ்வொரு தமிழ் பேசும் மகனுடைய தலையாய கடன் என்பதை மறந்துவிடக் கூடாது.

### முன் மாதிரி

கடந்த வாரம் கொழும்பில் உள்ள ஒருவருக்குச் சிங்களத்தில் முகவரி எழுதப்பட்ட கடிதம் ஒன்று, ஒரு அரசாங்க திணைக்களத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது. அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் முகவரியைப் படிக்க முடியாது இருப் சில வாழ்த்துச் செய்திகள் குறிப்பிட்டிருந்தோம். தொண்டர்களின் அவசர வேண்டுகோளுக்கு ஏற்ப அதைக் குறிப்பிட்டிருந்தோம்.

இப்பொழுது மணவினை அழைப்பிதழ் எழுதும் முறைபற்றி சிறு குறிப்புக்கள்.

திருமண அழைப்பிதழ் எழுதுவதில் சிலர் தெரிந்தோ அல்லது தெரியாமலோ பெரும் பிழை ஒன்றைப் புரிகின்றனர்.

'எனது மகன்' அல்லது 'எனது மகள்' என்று குறிப்பிடுகிறார்கள். இது தவறு. அஃறிணைப் பொருட்களையே இவ்வாறு குறிப்பிடலாம். 'எனது புத்தகம்' 'எனது நாய்' என்று குறிப்பிடுவது சரி. ஆனால் 'மகன்' 'மகள்' போன்ற உயர் திணைப் பெயர்ச் சொற்கள் முன் 'எனது' என்று குறிப்பிடுவது தவறு. எனவே 'என் மகன்' 'என் மகள்' என்றே குறிப்பிட வேண்டும்.

திருமண அழைப்புத் [illegible] புக்கள் சில இதோ:- தமிழர்

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

## ஆடுமேய்க்க வந்தவன் ஆசானானன் கட்டிக் கொள்ளப் பெண் கொடுப்பரோ?

அதிட்டம் என்றால் இது தான் அதிட்டம் என்று கூற வேண்டும் என்று கூறி வயிறு குலுங்கச் சிரித்தார் அம்மான். என்ன விடயம் என்று கேட்டேன். சொல்லுகிறேன் மருமகனே என்றார்.

இரண்டாம் மூன்றும் வகுப்புப் படித்த ஒரு சிங்கள வாலிபன் ஒரு ஆசிரியரான கதை. உத்தியோகம் கிடைக்காமல் அலைந்த வாலிபனுக்கு மீசாலை வடக்கில் ஒரு தோட்டத்தைக் கவனித்துக்கொள்ளும் உத்தியோகம் கிடைத்தது. அவனும் ஆடுமாடுகளைப் பார்த்து வந்தான்.

சிங்களம் படிக்கும் யோசனை மீசாலை வடக்கில் சிலரிடம் தொத்திக்கொண்டது. படிக்கவழியறியாது திகைத்தவர்களுக்கு இந்த வாலிபனின் எசமான், கண்ணாடி போட்ட ஒரு சாமி, ஆசிரியர், வழி கூறினார்.

விரைவில் வகுப்புகள் ஆரம்பித்தன. வாலிபனும் தனக்கிருந்த மதிப்பை அவதானித்து, தனது எசமான் தொட்டு அங்குவந்த மானங்கெட்டவர்வரை தன் சீடர்களாக தொட்டாட்டு வேலைகள் செய்ய வைத்தான். சில உண்மையான சீடர்கள் அரைப் படிப்பு ஆசானை வணங்கிய பின்தான் வீடு செல்வார்களாம். அது மட்டுமா? ஒருநபர் தனது மகளை இந்த இளைஞனுக்கு மணம் செய்து கொடுக்க விரும்புகிறாராம். என்னே அடிமைப் புத்தி! என்னே அவ்வாலிபனுக்கு உள்ள அதிட்டம்!

அன்புள்ள
அ. கு. அம்மானுக்கு,

சுப்பையா நடேசபிள்ளைக்கு நீங்கள் எழுதிய கடிதத்தைக் கண்டேன். அதில் இறுதியில் 'உங்கள் தலைப்பாகை கழராதிருந்தால் போதும்' என்று கூறியிருந்தீர்கள். அப்படி தலைப்பாகை கழன்றால் அவரது வெள்ள குடுமிக்கு ஒரு சீப்பு வைத்துக் கொண்டாரானால் அவர் ஓர் அசல் சிங்களவராகக் காட்சியளிப்பார் என்பது எனது தாழ்மையான எண்ணம்.

இப்படிக்கு,
இராமநாதன் கல்லூரி
மாணவி.

## கூலியில்லா மாரடிப்பு

தமிழியக்கம் செழிக்கச் செய்யப் பலர் முயன்று வருகையில் சில வயிற்றுப்போக்கு வாதிகளும் வேறு சிலரும் அதனைத் தடுக்கப் புறப்பட்ட செய்தி அம்மானுக்கு எட்டியதாம். உடனே தேச சஞ்சாரம் புறப்பட்ட அம்மான் செட்டிப்பாளையத்தில் சில அன்பர்களைச் சந்திக்க வாய்ப் பேற்பட்டது.

மறத்தமிழ் மாணவர் படை ஓட்டிச் சென்ற சுவரொட்டிகளைக் கூலியில்லாமல் கிழித்தெறிய முற்பட்டனர் சில.........இவர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று விசாரித்தபோது தண்ணி சப்ளை செய்து கிராமச் சங்க அங்கத்தவரான ஒருவரும், ஒரு பரிகாரியாரும், ஒரு மன்ன சிங்கக்குட்டியும், மக்களால் விரட்டப்பட்ட கிழக்கு மாகாண அரசியல்வாதி ஒருவரைப் பிடித்து கிராம சேவைப் பதவி பெற்ற ஒருவரும், சொந்தத் தாய் மொழியை அழிப்பதில் மும்முரமாக நின்றதைக் கண்டாராம்.

இவர்களைப் பற்றி விசாரித்ததில் ஊரிலுள்ளவர்கள் சுவையான பல விடயங்கள் கூறினார்கள். ஓகோ இதனால் தானோ இவர்களுக்கு இந்த கூலியில்லா வேலை என்று கூறிக் கொண்டார் அம்மான். விரைவில் இவ்விடயங்களைச் சந்திக்கு அனுப்புவாரென்று அம்மான் கூறியுள்ளார்.

## சைவ பக்தியா, சிங்கள பக்தியா?

சிங்களப் பகுதிகளில் இருக்கும் சைவ வழிபாட்டிடங்கள் பௌத்த சிங்கள வழிபாட்டிடங்களாக மாறுவதைக் கண்டு இது பற்றி அம்மானிடம் விசாரித்தேன். அதற்கு அம்மான் தன்னுடன் வைத்திருந்த பொட்டலத்தை அவிழ்த்து அதன் உள்ளிருந்து இரண்டு தபாலட்டைகளை வெளியிலெடுத்துக் காட்டினார்.

சிவாயம் முன்சுவரக் கோவில் குருக்கள் ஒருவர் வெளியிட்ட இந்த இரண்டு தபாலட்டைகளில் ஒன்று ஆங்கிலத்திலும் [illegible] ளத்திலுமிருந்தது. ஆனால் தமிழில் தபாலட்டை இல்லை. தமிழ் மொழி பேசும் சைவ மக்களுக்கு நிதி திரட்ட அனுப்பும் இந்தத் தபாலட்டை. சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் உருவெடுத்தால் விரைவில் இவ்விடமும் சிங்கள வழிபாட்டிடமாவதில் சந்தேகமென்ன!

சாகும் போதும் செனெட்டராகச் சாக வேண்டும்—
என் உடல்
வேகும் போதும் சிறிமா வாழ்த்துப் பாடவேண்டும்.

இயற்றியது:
"நடேசதாசன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே தினச் சங்கற்பம்

# தமிழ் பேசும் தொழிலாளர் உரிமைகளை வற்புறுத்துவதாக அமையட்டும்

# சிங்களத் தொழிலாளர்களே!

## வகுப்புவாதிகளை முறியடிக்க முன்வாரீர்

மே தினம் தொழிலாளர் தினம். அன்று அவர்கள் செய்யும் சங்கற்பம் மிக முக்கியமானதாகும். அத் தீர்மானம் தமிழ் பேசும் தொழிலாளரின் உரிமைகளை வற்புறுத்துவதோடு, அவற்றைப் பெற உதவுமாறு இதர தொழிலாளர் சகோதரர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதாகவும் அமைய வேண்டும்.

மே தினம் உழைப்புச் சக்தியை விற்று உயிர்வாழும் உழைப்பாளிகள் தினம். ஒவ்வொரு நாட்டையும் ஒவ்வோர் இனத்தையும்சேர்ந்த பாட்டாளி மக்கள் பொதுவாகக் கொண்டாடும் ஒரே தினம் மே தினமே.

அன்று (1886ல்) அமெரிக்க தொழிலாளர் 8 மணி நேர வேலைக்காக பெரும் போராட்டத்தை நடத்தி உயிர்த் தியாகம் செய்த தியாகத் திருநாளை பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள இலங்கைத் தொழிலாளர் இன்று கொண்டாடுகின்றனர்.

காரணம் உழைப்புச் சக்தியின் அடிப்படையிலே தொழிலாளர்களிடையே 'வர்க்கம்' என்ற சகோதர பாசம் ஏற்பட்டிருப்பதே. பல்வேறு நாடுகளை, வேறு இனங்களைச் சேர்ந்த உழைப்பாளி மக்களிடையே ஒரு சகோதர பாசம் இருக்கவேண்டியது மிக அவசியமே.

மே தினம் உழைப்பாளர்களுக்கு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததென்றால், அன்று அவர்கள் ஒரு சங்கற்பம் செய்துகொள்கின்றனர். அந்த சங்கற்பத்தை இன்னுயிரீந்தேனும் நிறைவேற்றி வைக்கின்றனர்.

### இரு அம்சங்கள்

இச் சங்கற்பம் இரு அம்சங்களைக் கொண்டது.

ஒன்று அரசியற் சங்கற்பம்-மற்றது பொருளாதார சங்கற்பம்.

ஆயினும் அரசியற் சங்கற்பத்திலிருந்து பொருளாதார சங்கற்பத்தைப் பிரிக்க முடியாது என்பதை நாம் உணரவேண்டும்.

உழைப்பாளியின் அரசியல் தான் பொருளாதாரம்—பொருளாதாரம்தான் அரசியல்.

மலையகத் தொழிலாளரைப் பொறுத்த வரையில் இந்த உண்மை மிகத் தெளிவாகத் தெரிகிறது.

'பிரஜாவுரிமை இன்றேல் வேலையில்லை' என்கிறார்கள் ஆட்சியாளர். வேலை கிடைக்கப் பிரஜாவுரிமை வேண்டும். வேலை வேண்டும் என்பது பொருளாதாரக் கோரிக்கை— பிரஜாவுரிமை வேண்டும் என்பது அரசியல் கோரிக்கை.

இவ்விரண்டும் ஒன்றாக இணைவது கண்கூடு. அவற்றைத் தனித் தனியாகப் பிரிக்கச் சிலர் முயன்றாலும் அரசாங்கம் அவற்றை ஒன்றாக இணைத்துவிடும்.

### வேலை நிறுத்தம்: அரசியல் நடவடிக்கை

இவ்வாறு தொழிலாளரின் ஒவ்வொரு பொருளாதாரக் கோரிக்கையும் அரசியலுடன் இணைக்கப்பட்ட கோரிக்கையே. பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான ஒவ்வொரு வேலை நிறுத்தமும் அரசியல் அம்சங்களையும் உள்ளடக்கியதே.

சுருங்கக்கூறின் ஒவ்வொரு வேலை நிறுத்தமும் அரசியற் தன்மை வாய்ந்ததாகும்.

இதனை மறுப்பவர்களும், தொழிற் சங்கங்கள் அரசியற் கலப்பற்றதாக இருக்க வேண்டுமென்று கூறுபவர்களும் கலப்பற்ற சுயநலமிகளே!

ஆகவே மே தினத்தன்று உழைப்பாளர் செய்யும் அரசியற் சங்கற்பமும், பொருளாதார சங்கற்பமும் அவற்றை அமுல் நடத்தும்போது ஒன்றாக இணைந்த அரசியல் நடவடிக்கையாகவே இருக்கும்.

இவ்வருடம் மேதினப் பிரதிக்ஞையிலே முக்கிய புதிய அம்சமொன்று சேர்க்கப்பட வேண்டுமென்பதே எமது அவா.

### இன உணர்ச்சி வேண்டும்

இலங்கைத் தொழிலாளர் உழைப்பால் ஒரு வர்க்கம். ணய உரிமையைவற்புறுத்துவது எப்படி வகுப்புவாதமாகும்? அது சர்வ தேசத் தொழிலாளர் அங்கீகரித்துள்ள நடவடிக்கையல்லவா?

ஆதலின் தமிழ் பேசும் இனத்தை சேர்ந்த தொழிலாளர் இவ்வாண்டு மே தின சங்கற்பத்திலே தங்களின் சுய நிர்ணய உரிமையை வற்புறுத்தும் கோரிக்கையையும் சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இன்று தமிழ் பேசும் தொழிலாளருக்கு வாக்குரிமையில்லை, குடியுரிமையில்லை, மொழியுரிமையில்லை, பிரதேச உரிமையில்லை. இந்த உரிமைகளை அவர்கள் பெற்றேயாக வேண்டும். அவர்களின் பொருளாதார மேம்பாடும் இந்த உரிமைகளுடன்தான் இணைந்திருக்கிறது.

வர்க்க ரீதியில் அவர்களிடம் சகோதரத்துவம் கொண்ட பிறிதொருஇனத்தைச் சேர்ந்த ஒரு தொழிலாளர் பகுதியும் இந்நாட்டில்

### மே தினம்...?

—ஈழக்குமார்—

விடுமுறை யாக்கி 'மே'முதல் நாளென
மேடையில் முழங்கி விட்டால்—நாம்
படுந்துய ரொழிந்து மகிழ்வது பொங்கி
பசிப்பிணி அடங்கிடு மா?

நாட்டின் உயிரெனில் உழைப்பவ ரேஎன
நெடுங்குர லெழுப்பி விட்டு—மலைத்
தோட்டத் தமிழர்க்கு தொல்லை கொடுத்திடல்
தொண்டா மேதி னத்தில்?

நாளும் உழைத்திந்த நாட்டை வளர்த்தவர்
நாடற்ற பேர்க ளென்றால்—இங்கு
ஆளும் வர்க்கத்தார் மேதினம் கூட்டுதல்
அகிலத்தை ஏய்க்க வல்லோ?

குருதியும் கொட்டி உயிர்பல கொடுத்து
கொண்ட மேதி னத்தில்—பாட்டாளி
பெருமைகள் ஓங்க வாழ்வளம் உயர
பணிசெய உறுதி கொள்வோம்!

ஆனால் இனத்தால் இரு பகுதியினர்.

வேறு வார்த்தைகளிற் கூறின், தொழிலாளருக்கு வர்க்க உணர்ச்சி இருப்பதோடு, இன உணர்ச்சியும் இருக்க வேண்டுமென்பது தான்.

வர்க்க உணர்ச்சியைச் "சர்வ தேசியம்" என்று சிலர் கூறுகின்றனர். அதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதே மூச்சில் இன உணர்ச்சியை வகுப்புவாதம் என்றும் கூறிவிடுகின்றனர். அதனை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

### வகுப்புவாதமா?

இலங்கையில் சிங்களவரும் தமிழரும் இரு தேசிய இனங்கள்—வகுப்புகளல்ல. இரு தேசிய இனங்களுக்கும் சுய நிர்ணய உரிமை உண்டு. இதனை உலகம் முழுதுமுள்ள தொழிலாளர் வர்க்கம் அங்கீகரித்துள்ளது.

எனவே வர்க்க உ[illegible] கொண்ட தொழிலாளி [illegible] தனது இனத்தின் சுய நிர்

உண்டு. அவர்கள்தான் சிங்கள தேசிய இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள்.

அவர்கள் தங்களின் தமிழ் பேசும் சகோதரத் தொழிலாளர்கள் தங்களின் பிறப்புரிமைகளைப் பெற ஏன் உதவிசெய்யக் கூடாது?

அந்த உதவியைச் செய்யாவிட்டால் அவர்கள் எப்படி வர்க்க அடிப்படையில் தமிழ் பேசும் தொழிலாளரின்சகோதரர்களாக இருக்க முடியும்? வர்க்க ஒற்றுமையும் எப்படி ஏற்பட முடியும்?

சகோதரத் தொழிலாளர்கள் உரிமைகள் பெற அவர்கள் உதவி செய்தேயாக வேண்டும்.

அடுத்து மற்றொரு பிரச்சினை!

### செய்வது எப்படி? பெறுவது எப்படி?

சிங்களத் தொழிலாளர் தங்களின் சகோதரத் தொ[illegible] தொழிலாளர் அந்த உதவியைப் பெறுவதுதான் எப்படி?

அவர்களின் மேதின அரசியற் தீர்மானம் அதற்கு வழி காட்ட வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் தொழிலாளர் அரசாங்கமல்ல என்பதையும், அது ஒரு வகுப்புவாத அரசாங்கமென்பதையும் வர்க்க உணர்ச்சிகொண்ட சிங்களத் தொழிலாளர் உணரவேண்டியது மிகமிக அவசியமாகும்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததுமுதல் வகுப்புவாதத்தையே வளர்த்து வந்திருப்பதோடு, சிங்களத் தொழிலாளர் உட்பட தொழிலாளர் எல்லோரது போராட்டங்களையும் நசுக்கி வந்திருப்பது சிங்களத் தொழிலாளருக்குத் தெளிவாகத் தெரியும்.

சிங்களத் தொழிலாளர் சிங்கள வகுப்புவாத அரசாங்கங்களை எதிர்த்துப் போராடினாலன்றி வகுப்புவாதத்தை ஒழிக்கவோ, பொருளாதார, அரசியற் சலுகைகளைத் தாங்கள்பெறவோ முடியாது. தமிழ் பேசும் தொழிலாளரோ பிறப்புரிமைகளுக்காக அரசாங்கத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

வகுப்புவாத அரசாங்கத்தை எதிர்க்கும் இந்த முனையில்தான் தமிழ் பேசும்தொழிலாளர்களுக்குச் சிங்களத் தொழிலாளர் உதவிசெய்ய முடியும். சுருங்கக் கூறின், தமிழ் பேசும் தொழிலாளர் நடத்தும் அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களில் சிங்களத் தொழிலாளரும் கலந்து கொள்ளுவதே அவர்கள் சகோதரத் தொழிலாளருக்குச் செய்யும் உதவியாகும்.

இது சாத்தியமில்லைஎன்று சிலர் கூறுகின்றனர். அது தவறு. காரணம் சிங்களத் தொழிலாளரில் பெரும்பாலோர் இந்த அரசாங்கத்துக்கு மாறாக இருப்பது தான்.

சிங்களத் தொழிலாளரிடையே வகுப்புவாதத்தைப் பாய்ச்சி, அவர்களை தமிழ்த் தொழிலாளர்களுக்கு எதிரான முகாமில் கொண்டு போய்ச் சேர்க்க சில சிங்கள வகுப்புவாத வெறியர்கள் பெரு முயற்சி செய்கின்றனர். இந்த முயற்சியை முற்றாக முறியடிக்க வேண்டும். அந்தப் பொறுப்பும் சிங்களத் தொழிலாளர் கையில் தான் இருக்கிறது.

ஆகவே இவ்வாண்டு தமிழ் பேசும் தொழிலாளரின்—குறிப்பாக மலையகத் தொழிலாளரின் மே தினத் தீர்மானம் தங்களின் ஜீவாதாரமான உரிமைகளுக்காக உக்கிரமாகப் போராட சங்கற்பம் செய்து கொள்வதாக இருப்பதுடன், வகுப்புவாத அரசாங்கத்தை எதிர்த்து நடத்தும் தங்களின் உரிமைப் போராட்டத்தில் உதவுமாறு சிங்களத் தொழிலாளர் சகோதரர்களை அழைப்பதாகவும், ராஜரத்தின கும்பல் போன்ற வகுப்புவாதச் சக்திகளைத் தொழிலாளர் மத்தியிலிருந்து விரட்டியடிக்கச் சிங்களத் தொழிலாளர் முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுப்பதாகவும் அமைய வேண்டுமென்பதே எமது அவா.

ஓங்குக தமிழ்பேசும் தொழிலாளரின் உரிமைப் போராட்டம்!


ஒழிக வகுப்புவாதம்! வாழ்க தமிழ், சிங்களத் தொழிலாளர் சகோதரர்கள்!


வீட்டிற்கு ஒரு ஆஸ்தி!

"மினேர்வா"

தையல் மெஷின்

தரத்திலும் உழைப்பிலும் எவற்றிற்கும் சளைத்ததல்ல!



MINERVA 126

அழகிய வேலைப்பாடு!
நுணுக்கமான தயாரிப்பு!
3 லாச்சிகள் கொண்ட கபினெட்
விலையில் புதிய வரி இடம்பெறவில்லை

ஏக விநியோகஸ்தர்கள்:—

சென்ற் அந்தனீஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
516, ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு,
கொழும்பு-10.
டெலிபோன்: 4261—2, 3.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டியில் சிங்கள இயக்கம்!

## வயிற்றுப் போக்கு வாதிகளின் கூத்து

சென்ற வியாழன் 11.4.63 தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளெங்கும் பரவி வந்த தமிழியக்கம் அளவெட்டியிலும் ஆரம்பிக்கப்பட்டது. தமிழரசுத் தந்தையும், மல்லாகம் திரு. நடராசாவும்வந்து இயக்கத்தை ஆரம்பித்து வைத்த பின் மற்ற இடங்களுக்கு சென்று விட்டனர். இயக்கத்தை தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் அளவெட்டிக் கிளை வாலிபர்கள் நடத்தி வந்தனர்.

அப்போது இந்த வயிற்றுப்போக்குச் சாதி வெறியர்கள் முன்வந்து வேண்டுமென்றே தங்களின் குருநாதருக்கு ஆங்கிலத்தில் முகவரியிட்டு சில கடிதங்களை போடமுற்பட்டனர். இதனை அவதானித்த தொண்டர்கள் தமிழில் செய்யும்படி வேண்டிக்கொண்டனர்.

தமிழ் காக்கும்படி விடப்பட்ட வேண்டுகோளுக்கு சில மார்க்சிய தத்துவங்கள் (தூஷணம்) வெளியாகினவாம். அத்துடன் நிற்கவில்லை. தேர்தலில் போட்டியிடுபவரின் நெருங்கிய உறவினர் — சாதி வெறியர்— அரைகுறைப் பரத நாட்டியம் கற்றவர் போலக் கையையும் காலையும் ஆட்டிக் குதித்து தனது கொம்யூனிசத்தைப் (தூஷணம்) பறைசாற்றினாராம்.

"எங்களைப் பற்றித் தெரியுமா? நாங்கள் வயிற்றுப் போக்குவாதிகள்இப்போதே டயல்பண்ணிப் பொலீசைத் தருவித்து உங்கள் எல்லோரையும் கைதுசெய்விப்பேன்' என்று உருவேறியவர் போலக் கத்தினாராம். இது வரை நேரமாகப் பொறுமையாக இருந்த தொண்டர்களில் ஒருவர் அப்பொழுதுதான் சிறிது பொறுமை இழந்தவராக "சரி எங்கே பொலீஸ் வரட்டும் பார்க்கலாம்" என்று சாவால் விட்டாராம். தனது பயமுறுத்தல் பலியாதது கண்ட இச்சாதி வெறியர் கரப்பன் பூச்சி போட்டு பதப்படுத்தப்பட்ட கசிப்பு வெறியேறினவர் போல மேலும் மார்க்சிய தத்துவ ஞானம் விளாசினாராம். கழுதைக்கு எங்கே கற்பூர வாசனை தெரியப்போகிறது என்று தொண்டர்கள் இவரைக் கவனியாது தங்கள் வேலையில் ஈடுபட்டார்களாம்.

கம்யூனிஸ்டு பெரிய புள்ளிகளின் இனத்தவர், கத்திக் களைத்த பின், அங்கிருந்து வெளியேறி வேறு சில வயிற்றுப் போக்குகளை அழைத்து வந்து தமிழியக்கத்திற்கு மாறான ஓர் ஆங்கில இயக்கத்தை நடத்தினராம். இவர்களில் ஒருவர் தங்கள் தலைவருக்குச் சிங்களத்தில் விலாசமிட்ட ஒரு கடிதத்தை அனுப்பினாராம். இவ்வியக்கத்தில், முன்னர் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணிக் கூட்டத்தைக் குழப்ப முயன்று தோல்வி கண்ட காலிகள் முன் நின்றனராம்.

ஆங்கிலேயர் ஏகாதிபத்திய வாதிகள், அவர்களுடைய தூசுகூட இந்நாட்டில் இருக்கலாகாது என்று கூறும் கொம்யூனிஸ்டுகள், ஆங்கில இயக்கம் நடத்தியது, அவர்கள் சுய உருவத்தை வெளிப் படுத்தியதே தவிர இயக்கமோ.15 நிமிடங்களில் பிசுபிசுத்துவிட்டது. பொது மக்களோ தங்கள் கருமங்களைத் தமிழில் நடாத்தினர். தமிழியக்கம் வலுவடைந்தது.

# காணிக்கச்சேரி யாழ்ப்பாண மாவட்டம்

வவுனிக்குளம் அக்கராயன் குளம் கரியாலை நாகபடுவான் ஆகிய குடியேற்றத் திட்டங்களுக்கு:

1. விண்ணப்பஞ் செய்யக்கூடியவர்கள்:- யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கீழ்க்காணும் வகுப்பினரைச் சேர்ந்த கிராமவாசிகள்:

(அ) விவாகம் செய்த உண்மை விவசாயிகள்.

(ஆ) சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பிலோ அன்றி உயர்ந்த வகுப்பிலோ படித்த இளைஞர்களும், கிருஷிக அதிகாரியால் நடத்தப்படும் கிருஷிக பாடசாலையில் பயின்ற இளைஞர்களும்.

(இ) அபிவிருத்தித் திட்டங்களில் 500 நாட்களுக்குக் குறையாமல் வேலைசெய்த தொழிலாளர்கள்.

2: விண்ணப்ப முடிவு நாள்:- 1963ம் ஆண்டு, மே மாதம் 20ந் திகதி, இத்திகதிக்குப் பிந்தாமல் யாழ்ப்பாண மாவட்ட அதிகாரிக்குப் பதிவு செய்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப உறையில் இடது மேற்கோணத்தில் காணி கோரும் திட்டத்தை எழுத வேண்டும்.

3. விண்ணப்பத்தில் கொடுக்கப்பட வேண்டிய விபரங்கள்:- காணிக் கச்சேரி நடைபெறும் இடங்களும் நேரமும், அரசாங்கத்தால் கொடுக்கப்படும் சலுகைகள் முதலிய விபரங்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் 20.4.63ந் திகதித் தினகரனில் இரண்டாம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விளம்பரத்தைப் பார்க்கவும். அன்றியும் தத்தம் பிரிவுக் காரியாதிகாரியின் அலுவலகங்களிலோ அல்லது யாழ்ப்பாணக் கச்சேரியிலோ தத்தம் பகுதிக் கிராம அதிகாரிகளிடமோ, அஞ்சல் அலுவலகங்களிலோ கிராம அபிவிருத்தி அதிகாரிகளிடமோ விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும். கிளிநொச்சித் தொகுதியில் கிராம முன்னேற்றச் சங்கங்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

## தொகுதிப் பண்ணைகள்

காங்கேசன்துறை, உடுவில் தேர்தற் தொகுதிப் பண்ணைகளுக்கு தொழிலாளர்கள் தேவைப்படுகிறது. சேர விரும்புவோர் யாழ்ப்பாண மாவட்டம், தொழில் உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும்.

# கண்ணதாசன் அழைக்கிறார்

## முற்போக்குவாதிகள் முழிக்கிறார்கள்

ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்களால் ஏகோபித்து வரவேற்கப்பட்ட 'எல்லாம் தமிழ் இயக்கத்தை' எளனப்படுத்தி எள்ளிநகையாடுகிறார்கள் மாஸ்கோ கைகோலிகளான முற்போக்குவாதம் பேசும் பிற்போக்குவாதிகளான கொம்யூனிஸ்டுகள்.

அண்மையில் அவர்கள் நடத்தவிருக்கும் இலக்கிய மாநாட்டிற்கு அழைத்திருக்கும் கவிஞர் கண்ணதாசன் தமிழியக்கத்தைப்பற்றிக் கூறியதை நமது பிற்போக்குவாதக் கொம்யூனிஸ்டு நண்பர்களுக்கு ஈண்டு நினைவுபடுத்துவது நல்லதென்று நம்புகிறோம்.

கவிஞரின் அழைப்பை இந்தச் சோற்றுப் பிண்டங்கள் ஏற்றுக் கொள்வார்களா? அல்லது கவிஞரையும் வகுப்புவாதிஎன்று வைவார்களா?

இதோ மொழிகாக்க முன் வாரீர் எனக் கவிஞர் விடுத்த அழைப்பு:-

"தமிழ் கற்ற பெரியோரே! அன்னை மாரே!
தன்மானத் தோழர்களே! 'ரஷ்யா' என்னும்
சுமைதாங்கிச் சலித்தோரே! தமிழனுக்கும்
சூடுண்டாம் என்றுரைக்க நல்ல வேளை!
அமைவான போராட்டம் நடத்த வாரீர்!
அதற்கும் இவர் இசையார் என்றாகிவிட்டால்
இமை மூடித் திறவாமுன் வடவர் நாட்டை
இடுகாடாய் ஆக்கிடுவோம்! தமிழைக்காப்போம்!"

"தமிழைக் காப்போம்"
கண்ணதாசன் கவிதைகள்.




# ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

**15 நாள் டின் ரூபா 3-00**
**30 நாள் டின் ரூபா 5-75**

தபால் செலவு /-95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு.


# கவிதைப் பூங்கா

# விடை கொடுமினே!

—எருவில் மூர்த்தி—

தமிழன் என்பவனெத் தடையும் வெல்லுமறத்
தலைவன் என்றுபுவி போற்றவே
அமிழ்தை வென்றகனி அதரம் விண்டுகளம்
அடைய இன்றுவிடை கொடுமினே!

எந்தை செல்வர்படை எதிரில் வந்தபகை
எதையும் வென்றுகொடி நாட்டவே
சிந்தை கொண்டதமிழ்ச் சேய்க ளோடுகளம்
சென்று மீளவிடை கொடுமினே!

அந்தி கண்டுவிழி அல்லி காதல்மொழி
அறைய நாடுமலர்ச் சோலையே
முந்தி உன்றனவன் முனையில் நின்றுபடை
முடுக்க இன்றுவிடை கொடுமினே!

அண்ணல் காந்திமுனி அறிந்து சொன்னதனி
அகிம்சை என்றவழி நின்றுநீள்
மண்ணில் மூத்தமொழி மதுரை காத்தமொழி
மறைதல் நீக்கவிடை கொடுமினே!

# கவிதை நெஞ்சம்

**யூ. எல். தாவூத்**

இயல் 4

முழங்கிற்று வாழ்த்தொலிகள் சாலை எல்லாம்
முடிமன்னர் மஹ்மூது வாழ்க என்று
வழங்கிற்று பேரோசை கவிஞர் கோமான்
வாழ்கபல் லாண்டிந்தப் படியி லென்று
எழுந்திற்று பலநாதம் மறுகு தோறும்
எம்நாட்டின் ஷாஹ்நாமா வெல்க என்று
மகிழ்ந்திற்று இதுகேட்டு கவிஞ ருள்ளம்
மகிபரின் பரிசினைக் காண்போ மென்று.

மன்னரசின் செயலறியாக் கவிஞர் கோமான்
மகிழ்வோடு பொன்னினை நோக்கி நின்றார்
பன்னரிய கவிசெய்த பிர்தவ் ஸின்
பாரகா வியத்தையே ஏற்று வாழ்த்தி
மன்னரது பரிசளிக்க அஹ்மத் என்னும்
மந்திரியார் பரவார மொழிஎ மூப்ப
பண்ணரசின் மனையினையே வந்த டைந்து
பாக்களது பெரும்புகழைச் சாற்றி நின்றார்.

விள்ளரிய ஷாஹ்நாமா சமைத்த புலவ!
விண்புகழாய்க் கொள்ளாதீர்! அரிய கவி
வள்ளலே! நம்நாட்டின் கவிப் பூங்காவில்
மலர்ந்திட்ட நறுமலரா யுயர்ந்து நிற்கும்
எள்ளளவும் மாசற்ற பாக்கள் கொண்ட
இப்பெரிய காவியம்யாம் கண்ட தில்லை;
உள்ளமே யுவகையுற எமத ரசர்
உவந்திடும் பரிசிலினைப் பெறுவி ரென்றார்

புவியாளும் புரவலரின் அமைச்சர் தந்த
புகழுரையால் புந்திலொ மின்பம் பொங்க
கவியாளும் பிர்தவ்ஸ்; "காவியத் தின்
கவின்நயக்கும் காவலனுக் கெனது நன்றி
நவிலுவீர் முதலமைச்சே! அரச ளிக்கும்
நற்பரிசை மகளுக்கு ஈவீர் நானே
சுவையாளும் காவியத்தை வேந்தி டத்தில்
சுணங்காது நேரினிலே வழங்கி டுவேன்;

திருமகளே உன்கரத்தால் பரிசிலேற்று
சிறப்புட னேகுவாய்" என்று கவிஞர்
பரிவோடு நல்கிட்ட மொழிகள் கேட்டு
பரங்கேஸ் பண்பாக பரிசில் வாங்கி
விரைவாக பரிசுதரும் பைய விழ்த்தாள்
வெள்ளியே ஆயிரமிருக்கக் கண்டு
பரபரென விழித்திட்டாள்; நெஞ்ச மெல்லாம்
பதைப்புற்றே தந்தையை நிமிர்ந்து பார்த்தாள்.

அலைமோதி வருகின்ற உணர்ச்சி தன்னை
அடக்கவே முயன்றிட்டாள்; சிறிது நேரம்
சிலையாக நின்றிட்டாள்; விழியில் கண்ணீர்
சிந்தினாள்; உள்ளத்தி னுள்ளே ஏக்கம்
மலையாக மோதவே, தந்தை எண்ணம்
மாய்ந்ததே எனவெண்ணி மெய் முழுதும்
குலுங்கவே அழுதிட்டாள்; உள்ள மெல்லாம்
குமையவே பரிசினை தரையு திர்த்தாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் மாண்ட படையினர் தொகை 2400

## தொண்டர் தொகை 56

### அரங்கம் 23

அயர்நாடு முழுவதும் இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. தலைவர்கள், தொண்டர்கள், உதவியாளர்கள், அனுதாபிகள் ஆகியோரைக் கைது செய்யும்படியான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

இராணுவத்தினர் பேயாட்டம் ஆடத் தொடங்கினர். வீடுகளுக்கு நெருப்பு வைத்தனர். பொருட்களைக் கொள்ளையடித்தனர். வீடுகளில் நுழைந்து பெண்களைப் பலாத்காரமாகக் கற்பழித்தனர். மறுத்தவர்களின் அங்கங்களை வெட்டித் துண்டு துண்டாக வீசினர். மது வெறியில் சென்ற அவர்

கம்பிகளால் அடைத்து அதனுள் அவர்கள் எல்லோரையும் மிருகங்களைப் போல் அடைத்து வைத்தனர். தங்கள் ஆத்திரம் எல்லாவற்றையும் வைத்துக் காட்டுமிராண்டித்தனமாக அவர்களைச் சித்திரவதை செய்தனர். கைதிகளைச் சித்திரவதை செய்தவர்களுள் ஒருவர் அயர் நாட்டைச் சேர்ந்த இராணுவ அதிகாரியான வில்சன். கைது செய்யப்படாமல் இருந்த தொண்டர்கள் சிலர் அவரை இரகசியமாகச் சுட்டுக் கொன்றனர்!

எனினும் அயர் கட்சியின் பாராளுமன்றத் தலைவரான றெட்மண்ட் அம் மரண தண்டனைகளுக்கு எதிராக வாதாடுவார் என நாட்டு மக்கள் எண்ணினர். ஆனால் தலைக்கனம் பிடித்த றெட்மண்டா அதைச் செய்வார்?

டனை விதிக்கப்பட்டது. தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அரசாங்கத்திடம் அனுமதி பெற்று அவர், தான் காதலித்த பெண்ணைச் சிறைச்சாலையிலேயே மணஞ் செய்தார்.

அடுத்த நாள், பிளங்கேயும் தோமஸ் கிளாக்கின் மனைவியின் சகோதரரான எட்வேட் டேலியும் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களைத் தொடர்ந்து சேனுபதி பியேஸின் இளவலான விலியம் பியேஸும் மைக்கேல் ஓகன்ராகனும் சுடப்பட்டனர்.

னும் அயர்நாட்டில் ஆங்கில ஆட்சியினர் செய்து வரும் அட்டூழியங்கள் அமெரிக்க அரசாங்கத்திற்கு வெறுப்பை உண்டாக்கியது.

இங்கிலாந்தில் வாழ்ந்த ஆங்கில மொழிக் கவிஞரும் அயர் இனத்தவருமான ஜோர்ஜ் பேனட் ஷோ பத்திரிகைகள் மூலம் ஆங்கில அரசாங்கத்தின் மிருகத்தனத்தை வெகு கடுமையாகக் கண்டித்தார். அதே நேரத்தில் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் வாழ்ந்த அயர் மக்கள் வீர மரணம் எய்திய புரட்சியாளர்கள், சிறையில் வாடும் தலைவர்கள், தொண்டர்கள், பொது மக்கள் ஆகியோரின் குடும்பத்தினரைப் பாது

'கோமகன்'
'மாமல்லன்'

புரட்சித் தலைவர்களுக்கு—தியாகம், போராட்டம் என்பவற்றைச் செயலிலே காட்டிய கன்ம வீரர்களுக்கு மரண தண்டனை விதிப்பதை றெட்மண்ட்—தியாகம், போராட்டம் என்பவற்றை அறவே அறியாத 'தனிப் பெருந் தலைவர்' றெட்மண்ட்-மனதார விரும்பினர்!

## நாடெங்கும் இராணுவச் சட்டம்

களிடம் வயது சென்ற மாதர்களும் தப்பவில்லை.

செவ்வாய்க்கிழமை அதிகாலையில், கோக் மாவட்டத்தில் ஏமன் கென்ற்றின் சகோதரர்களான றிச்சட், தோமஸ், டேவிட், விலியம் ஆகிய நால்வரும் தமது எண்பது வயதான தாயாருடன் வீட்டில் இருக்கும் பொழுது அவர்களைக் கைது செய்வதற்காகப் பொலீஸார் வீட்டைச் சுற்றி வளைத்தனர். சரணடையுமாறு அவர்களைக் கேட்டனர். அவர்களோ மறுத்துவிட்டனர். உடனேயே பொலீஸார் வீட்டை நோக்கிச் சுட ஆரம்பித்தனர். மானமே பெரிது என எண்ணிய அந்த நான்கு சகோதரர்களும் பொலீஸாரை எப்படியும் ஒரு கை பார்ப்பது என்று முடிவு செய்தனர். தங்களிடம் இருந்த ஒரு படைத்துப்பாக்கியாலும் மற்றும் பறவைத் துப்பாக்கிகள் மூன்றினுலும் எதிர்த்துச் சுட ஆரம்பித்தனர். வயது சென்ற அவர்களுடைய தாயார் தன் நாட்டின் பெருமையைக் காப்பதற்காகப் புதல்வர்களுக்கு உற்சாகம் அளித்து, துப்பாக்கிகளுக்கு ரவைகளையும் வேண்டிய நேரத்தில் போட்டுக் கொடுத்துக் கொண்டு வந்தார்.

இந்தச் சண்டையில் பொலீஸ் சாஜன்ற் ஒருவர் கொல்

அடைபட்டுக் கிடந்த கைதிகள் தங்கள் காலத்தையும் நேரத்தையும் வீணாக்காது, தமது நாட்டின் பண்டைக்கால வரலாற்றையும் பண்பாட்டையும் பற்றிய பாடல்களைப் பாடுவதிலும் தங்களுடைய குறிக்கோள் பற்றிச் சிறைச்சாலை அதிகாரிகளுடனும் காவலாளர்களுடனும் தர்க்கிப்பதிலும் உப

### அரங்கம் 24

நூறு சவங்களை ஒன்றாகப் புதைக்கக்கூடிய ஒரு பெரும் கிடங்கை அகழும்படி சேர் ஜோண் மக்ஸ்வெல் இராணுவத்தினருக்குக் கட்டளை பிறப்பித்தார். அக்கட்டளையைத் தொடர்ந்து, ஆங்கிலேயப் பட்டாளத்தினர்

## மரண தண்டனைக்கு முன் சிறையில் திருமணம்

மறுநாள் ஜோண் மக்பிரைட் சுட்டுக் கொல்லப்பட்டார். 8ம் திகதி ஏமன் கென்ற்றும் மைக்கேல் மோளினும் கோனேலியஸ் கொள்பேட்டும் சோண் ஹியூஸ்ரனும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இப்படுகொலைகளுக்கு ஓர் எல்லையே இல்லையா என்று அயர்நாட்டுப் பொது மக்களும் இங்கிலாந்திலிருந்த

காப்பதற்காக யுத்த நிவாரண நிதியொன்றை ஆரம்பித்தனர்.

பாராளுமன்றத்தில் அயர் கட்சியினர் பலர் ஆத்திரத்துடன் கேள்விகள் கேட்கத் தொடங்கினர். அந்தக் கேள்விகளுக்கு, இங்கிலாந்தின் பிரதமர், இதுவரை 14 பேர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் 73 பேர் ஆயுட்கால மறியல் பெற்றதாகவும் 4 பேருக்குச் கடூழியச் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டதாகவும் 1706 பேருக்கு நாடு கடத்தல் கட்டளை வழங்கப்பட்டதாகவும் பதிலளித்தார். அயர் கட்சியினர் பலரின் வற்புறுத்தலின் பேரில் பிரதமருக்கு அடுத்ததாகப் பேசிய பாதபூசை செய்து பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் றெட்மண்ட், அயர் குடியரசுப் பிரகடனத்தில் கையொப்பமிட்டவர்களைத் தவிர்ந்த ஏனையோரைச் சுட்டுத்தள்ள வேண்டாம் என்று வேண்டா வெறுப்பாக அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார். என்னே அவரது பரிவு!

இராணுவ நீதி மன்றத்தினரோ, தளகத்தர் ஜேம்ஸ் கொனேலி, சோண் மக்டயாமடா, தளபதி ஏமன் டி வேலரா, தோமஸ் ஆகஸ் ஆகிய நால்வருக்கும் மரண தண்டனைவிதித்துவிட்டனர்.




யோகமாகச் செலவழித்தனர். கைதிகளுடைய வாதத் திறமையும் விடுதலை உணர்ச்சியும் தியாக மனப்பான்மையும் காவலாளர்களையும் அதிகாரிகளையும் கவர்ந்தன. அதனால் அவர்களிற் சிலர் கைதிகளுக்கு ஆதரவாகவும் மாறினர்.

உலக சரித்திரத்திலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய

டப்ளினில் முகாமிட்டிருந்த றிச்மண்ட் பாசறையில் இராணுவ நீதிமன்றம் இரகசியமாகக் கூடியது. ஒவ்வொருவர் ஒவ்வொருவராகப் புரட்சித் தலைவர்கள் விசாரிக்கப்படத் தொடங்கினர். சேனுபதி பியேஸ் அழைக்கப்பட்டார். விசாரணையின்போது,

"என்னைப் பொறுத்த அளவில், காலம் வந்தது—நாங்கள் போராட்டத்தில் இறங்கினோம். அதற்காக நான் மகிழ்ச்சிதான் அடைகிறேன். நாங்கள் தோல்வியுற்றது போல் தோன்றலாம்; ஆனால் உண்மையில் நாங்கள் தோல்வியடையவில்லை. போராட மறுப்பதுதான் தோல்வி. போராடப் புகுவது வெற்றி. எமது முன்னோரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்தோம்—பிற்காலச் சந்ததியாருக்கு ஒரு கடமையை விட்டுச் செல்கின்றோம்" என்று கூறினார்.

பியேஸ் குற்றவாளியாகக் காணப்பட்டு மே மாதம் 3ம் திகதி காலை சுடப்பட்டார். அவரோடு தோமஸ் மக்டொனுவும் பழம் பெரும் புரட்சிவாதியான தோமஸ் கிளாக்கும் சுடப்பட்டனர். கவிஞர் யோசேப் பிளங்கேக்கும் மரண தண்

அயர் மக்களும் அமெரிக்க மக்களும் கொதிப்படையத் தொடங்கினர். பத்திரிகைகள் கண்டனக் குரல் எழுப்பின. 'ஒத்துழைப்பு மன்னன்' றெட்மண்ட்டைத் தவிர்ந்த சில அயர் கட்சி உறுப்பினர்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஆனால் கோக் மாவட்டத்தில் பொலீஸ் சாஜன்ற் ஒரு

## தனிப் பெரும் தலைவரின் துரோகம்

லப்பட்டார்; பல பொலீஸ்காரர்கள் காயமடைந்தனர். நான்கு சகோதரர்களையும் எதிர்த்துப் பொலீஸார் போராட முடியாமல் போகவே இறுதியில் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர். தொடர்ந்து நடைபெற்ற சண்டையில் டேவிட் தனது கைவிரல்கள் இரண்டை இழந்தார். அதே நேரத்தில் ரவைகள் யாவும் தீர்ந்துவிட்டன. அதனால் சரணாகதியடைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சரணடைவதை விரும்பாத றிச்சட் தப்பியோட முயலுகையில் இராணுவத்தினரால் சுடப்பட்டு அவ்விடத்திலேயே மாண்டார். மற்ற மூவரும் கைதானார்கள்.

நாட்டு மக்கள் பலரைச் சந்தேகத்தின் பேரில் இராணுவ முகாம்களுக்கும் பொலீஸ் நிலையங்களுக்கும் பலவந்தமாக இழுத்துச் சென்று அங்கு பேச்சு மூச்சின்றி அவர்களைச் சுட்டுத் தள்ளினர். தலைவர்கள், தொண்டர்கள், பிரமுகர்கள் ஆக 3500க்கு மேற்பட்ட ஆண்களையும் 79 பெண்களையும் கைது செய்தனர். டப்ளினிலுள்ள றொற்றண்டா மருந்துவமனைக்கு எதிராக உள்ள வெளியை, முட்

இந்த ஈஸ்ரர் வாரப் புரட்சியில் உயிர்ப்பலி கொடுத்தவர்களும் அநேகர். மாண்ட தொண்டர்கள் 56 பேர். இராணுவத்தினரினதும் பொலீஸாரினதும் அட்டூழியத்திற்குப் பலியான பொது மக்கள் ஏறத்தாழ 600பேர். தொண்டர் படையின் துப்பாக்கிகளுக்கு இரையாகின இராணுவத்தினரும் பொலீஸாரும் கிட்டத்தட்ட 2400 பேர்!

கைது செய்யப்பட்ட தலைவர்களுக்கு மரண தண்டனை என்ற வதந்தி பரவியது.

## உலகெங்கும் கண்டனக் குரல்கள்

வரைச் சுட்டுக் கொன்ற குற்றத்திற்காக தோமஸ் கென்ற் 9ம் திகதி சுடப்பட்டார். அவரோடு கைதாகிய டேவிட்டும் மரண தண்டனை பெற்றார். ஆனால் உடனடியாக அவரது தண்டனை நிறைவேற்றப்படவில்லை. விலியம் விடுதலையானார்.

முதலாவது உலக யுத்தம் ஜேர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த யுத்தத்தில் இங்கிலாந்திற்கு ஆதரவாக அமெரிக்கா சேர இருந்தது. ஆயி

பல்வேறு முனைகளிலுமிருந்து கண்டனங்கள் வருவதைக் கண்ட அரசாங்கத்தினர் டேவிட் கென்ற், ஏமன் டி வேலரா, தோமஸ் ஆகஸ் ஆகியோருக்கு விதித்த மரண தண்டனையை ஆயுட்காலத் தண்டனையாக மாற்றினர். குடியரசுப் பிரகடனத்தில் கையொப்பமிட்ட மாபெரும் தீரர்கள் ஏழு பேர்களில் ஐவர் ஏற்கனவே சுடப்பட்டு விட்டனர். எஞ்சிய இருவரில் சுகவீனமாக இருந்த தளகத்தர் ஜேம்ஸ் கொனேலி காவு படுக்கையில் கொண்டு செல்லப்பட்டுச் சுடப்பட்டார். அதன் பின் மற்றவரான சோண் மக்டயாமடா சுட்டுக் கொல்லப்பட்டார். மரணத்தைத் திரணமாக மதித்து, குடியரசுப் பிரகடனத்தில் கையொப்பமிட்ட ஏழு சிங்க ஏறுகள், விடுதலை வரலாறுகளிலேயே அழியா இடத்தைப் பெற்று, சுதந்திரத்திற்காகப் போராடும் மக்கள் அனைவரது கண்களுக்கும் தியாக மாமலைகளாக உயர்ந்து விட்டனர் என்றால் மிகையாகாது.

படுகொலைகளையெல்லாம் கேள்வியுற்ற நாட்டு மக்கள், முன்னர் போல், இராமன்

(15-ம் பக்கம் பார்க்க)

**அயர் நாட்டின் சுதந்திரத்திற்குப் போரிட்ட குற்றத்திற்காக**

**15 தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்**
**73 பேருக்கு ஆயுள் தண்டனை**
**1706 பேர் நாடுகடத்தப்பட்டனர்**

**அத்துடன் போராட்டம் நின்றதா?**
**இல்லை**
**தொடர்ந்து நடைபெற்றது!**
**முன்னைவிட உக்கிரமாக நடைபெற்றது!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஏப்ரல் மாதம் 28-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# யாருடன் பேச்சுவார்த்தை?

"தேசிய ஒற்றுமை"க் கூச்சல் மீண்டும் கிளம்பியுள்ளது. "சிங்களவரும், தமிழரும் ஒன்றுபட்டால்தான் நாடு முன்னேறும்" என்று மந்திரிகளும் பகிரங்கமாகக் கூறுகின்றனர். பிரதமரும் தமிழ் பேசும் எட்டப்பர் கூட்டமொன்றுடன் அந்தரங்கமாகப் பேசியுள்ளார்.

ஏன் இந்தத் திடீர்ப் பேச்சுவார்த்தை?

நேரடி நடவடிக்கை என்றதும் அரசாங்கக் கட்சி அதிர்ச்சி கண்டுள்ளது. கடந்தகாலப் போராட்டங்கள் ஆட்சியாளரின் மென்னியைப் பிடிக்கின்றன.

சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து காலிமுகத் திடலில் நடத்திய சத்தியாக்கிரகம், சிங்கள சிறீ—எதிர்ப்புப் போராட்டம், திருமலை யாத்திரை, 1961ம் வருடச் சத்தியாக்கிரகம் ஆகிய தமிழ் பேசும் மக்களின் மாபெரும் போராட்டங்கள் அவர்கள் முன் பூதாகாரமாகத் தோன்றுகின்றன. எனவே மீண்டும் போராட்டம் என்றதும் அவர்கள் கதி கலங்குகின்றனர்.

அடக்கு முறையை ஆட்சி புரிவது ஆபத்து என்று சில சிங்களத் தலைவர்களே கூறுகின்றனர். சத்தியாக்கிரகத்தை நசுக்கக் கையாண்ட மிருகத்தனமான பாஸிஸ அட்டூழியங்களால், தமிழ் பேசும் மக்கள் அஞ்சி, ஒடுங்கி அடங்கிவிடுவார்களென்றும், இனிமேல் அவர்கள் எழுச்சிபெறவே மாட்டார்களென்றும் அவர்கள் திடமாக நம்பினர்.

அந்த நம்பிக்கையில் இன்று மண் விழுந்து விட்டது. அதே மக்கள் மீண்டும் போராடத் துணிந்து விட்டனரே! இனி அடக்குமுறையால் என்ன பயன்?

அடக்குமுறையால் அடுத்து வரும் போராட்டத்தையும் நசுக்கலாம். அதனால் மீண்டும் மீண்டும் போராட்டங்கள் கிளம்புவது தடைப்படாதே! என்ன செய்வது? விடுதலைப் போராட்டமென்பது மயிலிராவணன் தலையைப் போன்றது. வெட்ட வெட்ட முளைக்கும்.

எனவே வெகுசன எழுச்சியை நசுக்க பொலிசும் இராணுவமும் என்றும் பயன்படா என்பதை உணரத் தலைப்பட்டுள்ளனர் ஆட்சியாளரில் சிலர். ஏதோ ஒரு சமரசம் பேசியாகவேண்டும்,என்ற நிர்ப்பந்தநிலை தோன்றியுள்ளது.

"மொழிப் பிரச்சினை தீர்ந்துபோன விவகாரம்" என்று அடித்துப் பேசினவர்களே, நேரடி நடவடிக்கை என்றதும் அதே பிரச்சினை பற்றி இன்று பேசுகின்றனர். பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்குக் காரணம், அன்று முதல் இன்றுவரை, தமிழ் பேசும் இனம் தொடர்ந்து நடத்திய—நடத்தும் விடாப்பிடியான எதிர்ப்பு இயக்கங்களே.

சத்தியாக்கிரகம் என்றால் ஒரு சில "பொழுது போக்கு அரசியல்வாதிகள்" கூறுவது போல சிங்கள மக்கள் ஆத்திரப்படவில்லை—ஆனால் அஞ்சுகின்றனர். ஆளும் கட்சிக்குள் ஒரு சலசலப்பு. அடுத்த தேர்தல் பாதிக்கப்படுமோ என்ற அச்சம். தமிழைப் பிராந்திய நிர்வாக மொழி, நீதி மன்ற மொழியாக்க வேண்டுமென்ற இடதுசாரிகளின் புதிய கூச்சல், (இந்தக் கூச்சலும் தமிழரசுப் போராட்டங்களின் விளைவே) என்பவையெல்லாம் ஆட்சியாளருக்கு இக்கட்டான ஒரு நிலையை விளைவித்துள்ளன.

இதினின்று விடுபட ஒரு சமரசப் பேச்சு தேவை. அதனை யாருடன் எப்படி நடத்துவது? அதிலும் ஓர் உபாயத்தை, குதர்க்க வழியைப் பின்பற்றுகிறது அரசாங்கம்.

தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதித்துவ ஸ்தாபனம் தமிழரசுக் கட்சி. அவர்களின் உண்மைப் பிரதிநிதிகள் தமிழரசுத் தலைவர்கள். இது அரசாங்கத்துக்குத் தெரியாததல்ல. தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைப் பற்றி அவர்களுடனல்லவா பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்? அதைச் செய்யவில்லை ஆட்சியாளர். இராமனின்றி இராமயண நாடகம் நடத்த முற்பட்டுள்ளனர்.

அரசியலை விட்டு ஓடிய ஒரு மாஜி, யாழ்ப்பாணம் தொகுதியில் கடந்த தேர்தலில் பதிவான 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளால் சுமார் 6 ஆயிரம் வாக்குகளை மட்டும் பெற்று தனக்குத்தானே பிரதிநிதியாயுள்ள எட்டப்பர் குழுவைச் சேர்ந்த ஒருவர், உரிமைப் போராட்டம் என்றதும் தியாகத்துக்கு அஞ்சி கட்சியை விட்டே ஓடிப்போன ஒரு தொடை நடுங்கி கல்முனைப் பேர்வழி, தமிழரசுக் கட்சி ஆதரவுடன் தேர்தலில் வென்று பின்னர் செய் நன்றி மறந்த இரு "ஆமாம் சாமி" மஜீதுகள், சென்ற தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டு செல்லாக் காசான ஒரு கு. சாமி, என்ற தமிழ் பேசும் மக்களுடன் தொடர்பற்ற ஒரு கும்பலுடன் பிரதமர் அந்தரங்க ஆலோசனை நடத்தியுள்ளார், இன்னும் நடத்தப் போகிறாராம்.

ஏன் இந்தத் தில்லுமல்லு? தமிழ் பேசும் இனத்தின் சார்பாகப் பேச தமிழரசார் தவிர்த்து வேறு பிரதிநிதிகளும் உண்டு என்று, சிங்கள மக்களுக்கும் உலகத்துக்கும் எடுத்துக் காட்டவா? தமிழரசுக் கட்சிக்கு மாற்று முனையொன்றை சிருஷ்டிக்கவா? தமிழ் பேசும் இனத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க தமிழரசுக் கட்சி தேவையில்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்தி கட்சியைத் தனிப்படுத்தவா? பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகளும் சமபலம் பெற்று விட்டதால், அரசாங்கத்தைக் காக்க இந்தத் தனிப்பட்ட உதிரிகளின் ஆதரவு தேவை என்பதற்காக அவர்களைத் திருப்திப்படுத்தவா? எதுவானாலுஞ் சரி, அரசாங்கம் தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறது என்பது மட்டும் மக்களுக்குத் தெரியும்.

திரு. நடேசபிள்ளையும் தமிழ் பேசும் மக்களைப்பற்றி பேசப் போகிறாராம். அரசியலை விட்டோடிய அவரை அரசாங்கம் செனட்டராக்கியதேன்? ஒரு தமிழ் மாஜி மந்திரி அரசாங்கத்துடன் சேர்ந்துவிட்டார் என்று சிங்கள மக்களுக்கு எடுத்துக் காட்டவா? செனட்டராக்கி தமிழ் பேசும் மக்கள் சார்பாகப் பேசுதற்காக ஓர் அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்கவா? இல்லையேல் அடுத்த தேர்தலில் அவரைச் சுதந்திரக் கட்சி அபேட்சகராக நிறுத்துவதற்கான முன்னேற்பாடா? எதுவானாலும் அவர் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியல்ல என்பது மட்டும் தெளிவான விஷயம்.

நெல்லிக்காய் மூட்டை போன்ற இந்தக் கும்பலுடன் மக்களுக்குத் தெரியாமல் நடத்தும் பேச்சுவார்த்தைதான் என்ன? தமிழ் பேசும் இனத்தின் அடிப்படை உரிமைகளைப்பற்றி அவர்கள் பேச முடியுமா? மலையக மக்களின் குடியுரிமை, வாக்குரிமை, பிரதேச உரிமைகளுக்காக அவர்கள் வாதாட முடியுமா? அவர்கள் செய்யும் முடிவைத் தமிழ் பேசும் மக்கள்தான் ஏற்றுக்கொள்வார்களா? அந்த முடிவை அரசாங்கம் அமுல்நடத்துமா? இதெல்லாம் ஒரு வாணவேடிக்கை. தமிழ் பேசும் மக்கள் இதில் ஏமாறமாட்டார்கள்.

அந்தப் பேச்சு எந்த அடிப்படையில் நடைபெறுமென்பதைத் திரு. நடேசபிள்ளையே ஏற்கனவே அம்பலப்படுத்தியுள்ளார். சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்று, நியாயமான தமிழ் உபயோகச் சட்டத்திற்கிணங்க சலுகைகளைப் பெற முடியுமா என்பதே பேச்சுவார்த்தையின் அடிப்படையாம்!

எவ்வளவுதான் பேசினாலும், தற்போதைய சட்டங்களின்படி தமிழ் பேசும் மக்களுக்கு எந்த அடிப்படை உரிமையும் கிடைக்கப் போவதில்லை. அது வெறும் கண்துடைப்பு பேச்சாகவே முடியும்.

புதிய சட்டங்களை இயற்றாமல், தற்போதைய சட்டங்களைத் திருத்தாமல் தமிழ் பேசும் மக்களுக்கு எப்படி உரிமைகளை வழங்க முடியும்?

தற்போதைய சட்டங்களுக்கமைய "ஏதேனும்" கிடைக்குமா என்று பேசிப் பார்ப்பது சில்லறைச் சலுகைகளுக்காகக் கையேந்துவதாகும். அவ்வாறு சரணாகதியடைந்து பிச்சை கேட்பது பதவிப் பித்தர்களின் வழி. தமிழ் பேசும் மக்களுக்கு உகந்த வழியன்று.

யார் எதை வேண்டுமானாலும் பேசட்டும். சமரச முயற்சிகளுக்குத் தமிழ் பேசும் மக்கள் முட்டுக்கட்டை போடமாட்டார்கள். ஆனால் அதற்காக தங்களின் எதிர்ப்பைத் தளர்த்தமாட்டார்கள்.

அற வழி நின்று அநீதியைத் தொடர்ந்து எதிர்ப்பதே உரிமைகளைப் பெற்று வாழ ஒரே வழி என்பது தமிழ் பேசும் மக்களின் திடமான முடிவு. பசப்புப் பேச்சுகளும், தந்திரோபாயங்களும், அவர்களின் உறுதியைக் குலைத்துவிட முடியாது.

எல்லாம் தமிழியக்கம்

# மக்கள் இயக்கமாகிவிட்டது

## கிழக்கு மாகாணம் எங்கணும் தமிழியக்கப் பிரசாரம்

## தொடர்ந்து ஏனைய பகுதிகளில் நடத்த முடிவு

இம் மாதம் எட்டாம் திகதி ஆரம்பமாகிய எல்லாம் தமிழியக்கம், தமிழ் பேசும் மக்களின் எதிர்வரும் விடுதலைப் போராட்டத்திற்கு சிறந்தவொரு அடித்தளமாக அமைந்துவிட்டது. தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தனிப்பட்ட அரசியல் குரோதங்களுக்கு அப்பால் நின்று தமிழியக்கத்தை திறந்த மனதுடன் வரவேற்றுள்ளார்கள். தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இன்னும் விட்ட குறை தொட்ட குறையாக ஒட்டிக் கொண்டிருக்கும் பிற்போக்குவாத அரசியல் கட்சிகள் சிலவும், தனிநபரை சுற்றியிருக்கும் சில இயக்கங்களும் தமிழியக்கத்தை எள்ளிநகையாடிய பொழுதும், தமிழியக்கம் தமிழ் பேசும் மக்களின் இயக்கமாகிவிட்டது.

தமிழியக்கம் பரவிய வேகத்தை ஊன்றிக் கவனிக்கையில் தமிழினத்தின் விடுதலை வெகு தூரத்தில் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.



திரு. செ. இராசதுரை

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் தங்கள் தமிழியக்கப் பிரசாரத்தை வட பகுதியில் கடந்த வாரமே ஓரளவு முடித்துவிட்டார்கள்.

### கிழக்கு நோக்கி

சத்தியாக்கிரக நினைவு நாளான சித்திரை பதினோராம் திகதியன்று தமிழரசுக் கட்சியினர் யாழ். நகரில் நடாத்திய ஊர்வலமும், பொதுக்கூட்டமும், மாற்று அரசியல் கட்சியினருக்கும், ஆட்சியாளருக்கும் பெரும் கிலியை ஏற்படுத்தியுள்ளது. சித்திரை பதினோராம் நாள் நடந்த கூட்டம் தமிழினம் விழித்துவிட்டது என்பதைப் பறையறைவதாக அமைந்துள்ளது. அத்தனை பெரியவொரு கூட்டத்தையும் ஊர்வலத்தையும் நடாத்திவிட்டு, தமிழரசுத் தலைவர்கள் இவ்வார ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் காலடி எடுத்து வைத்துள்ளார்கள்.

கிழக்கு மாகாணத்தில் தமிழியக்கம் என்றோ ஆரம்பமாகிவிட்டது. என்றாலும் தமிழியக்கத்தின் முக்கியத்துவத்தை மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும் என்பதற்காகவே இன்று கிழக்கு மாகாணத்தில் அசுர வேகத்தில் பிரசாரக் கூட்டங்களை நாளுக்கு ஒரு தொகுதியாக நடாத்தி வருகிறார்கள்.

### மட்டக்களப்பில் மாபெரும் கூட்டம்

முதலாவது கூட்டத்தை மட்டு நகர் பாட்டாளிபுரத்தில் மட்டு நகர் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் நடாத்தியுள்ளார்கள். அன்றைய கூட்டத்தில் திரு. இராசதுரை உரை நிகழ்த்துகையில் ஆணித்தரமான சில கருத்துக்களை வற்புறுத்தியுள்ளார்.

### இராசதுரை பேச்சு

அவர் கூறியதாவது: 'இலங்கை வாழ் இருபது இலட்சம் தமிழ் பேசும் மக்களின் வாககுகளைப் பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியினரை விடுத்துப் பிரதமர் மொழிப் பிரச்சினை பற்றி மாநாடு நடாத்தியது இராமன் இன்றி இராமாயண நாடகம் அரங்கேற்றப்பட்டதை ஒத்திருக்கிறது. எனவே இத்தகைய மாநாட்டினால் தமிழ் பேசும் மக்களுக்கு எத்தகைய நன்மையும் ஏற்படப்போவதில்லை.'

### மீண்டும் ஏமாற்றவா?

தமிழரசுக் கட்சியினர் மீண்டும் போராட்டம் தொடங்கப் போகிறார்கள் என்றதும் அரசாங்கம் ஆட்டம் கண்டுள்ளது. இக்காரணத்தினால்தான் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றம் அடையச் செய்யலாம் என்று எண்ணி 'மொழிப்பிரச்சினை மாநாடு' என்ற ஜாலத்தைக் காட்ட ஆரம்பித்துள்ளது அரசாங்கம்.



ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி

### நமது முயற்சி

"தமிழரசுக் கட்சி என்ற ஒரு கட்சி இன்றும் உயிரோடு இருக்கின்ற ஒரே காரணத்தினால்தான் மொழிப் பிரச்சினையை எப்படியாவது தீர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் இன்றைய அரசாங்கத்திற்கு இருந்துகொண்டு வருகிறது. இலங்கைவாழ் மக்களின் மொழிப்பிரச்சினை இன்னும் தீர்த்துவைக்கப்படவில்லை என்ற உண்மையை இன்னும் வெளி உலகுக்கு காட்டி வருவது தமிழரசுக் கட்சிதான். இன்று இல்லாவிட்டாலும் இன்னும் பல வருடங்களுக்குப் பின்பாவது மொழிப் பிரச்சினை தீர்த்துவைக்கப்பட்டு தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படுமென்றால் அது தமிழரசுக் கட்சியால்தான் நிறைவேற்றப்படும், என்று அடித்துக் கூறியுள்ளார்."

### பட்டிருப்பு

இருபத்தியொராம் திகதி தமிழரசுக்கட்சித் தலைவரின் தொகுதியான பட்டிருப்புத் தொகுதியில் செட்டி பாளையம், தேற்றாத் தீவு, களுதாவளை, பெரிய கோறு தீவு,

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை ஏக சிங்கள நாடாக்கும் முயற்சியை முறியடிப்பீர்

## கந்தளாய் கந்தளாவ ஆகும் காட்சியை காணுங்கள்

இலங்கையை ஏக சிங்கள நாடாக்கும் முயற்சி நடைபெறுகிறது. முதல் படியாகத் தமிழ்க் கிராமங்களின் பெயர்கள் மாற்றப்படுகின்றன. தமிழ் பேசும் மக்கள் தங்கள் எதிர்ப்பை மே மாதம் 15 ம் திகதிக்கு முன்னர் தெரியப்படுத்த வேண்டும்.

ஒரு நாட்டிற்கும் அந்த நாட்டில் வாழும் இனத்திற்கும் உரிய தொடர்பு பழமையானதா என்பதற்குச் சான்றுகளாக இருப்பன கல்வெட்டுக்கள், ஆலயங்கள், ஊர்களின் பெயர்கள்போன்றனவேயாகும். இலங்கையில் வட—கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல மற்றும் சில பகுதிகளிலும் கிராமங்களின்பெயர்கள் தூயதமிழாக இருப்பதை நாம் காண முடிகிறது. இன்று அப்படியிருந்தவற்றின் பெயர்கள் அனேகமாக மாற்றப்பட்டுவிட்டன.

வட—கிழக்கு மாகாணங்களின் வளமான பிரதேசங்களின் பெயர்கள் கூட அண்மைக் காலத்தில் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டிருப்பதை தமிழ் மக்கள் இந்தக் குறுகிய காலத்தில் மறந்திருக்கமாட்டார்கள்.

மீண்டும் பழைய பாதையில் அரசாங்கம்செல்லமுடிவு செய்துள்ளது. வளமான தமிழ் பிரதேசங்களின் பெயரைச் சிங்களப் பெயர்களாக மாற்றி, இலங்கையை ஏக சிங்கள நாடாக மாற்றும் முயற்சியே இது.

தமிழ் பிரதேசத்தின் நெற்களஞ்சியங்களில் ஒன்றான கந்தளாயின் பெயரை கந்தளாவ என்று மாற்ற முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்கள். மேலும் திருமலைப் பிரதேசத்திலுள்ள கட்டிகுளம், அடம்பனை, புலிகண்டிகுளம், நாவற்குளம், நீராவெளி ஆகியவற்றின் பெயர்களையும் மாற்ற முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்கள்.

திருமலைப் பகுதியில் உள்ள உள்ளூர் ஆட்சி மன்றங்கள், பொது இயக்கங்கள், தனிப்பட்டோர் அனைவரும் ஆட்சியாளரின் ஏக சிங்கள மயத் திட்டத்தின் ஒரு முயற்சியான இதை முறியடிப்பதற்கு மே மாதம் 15ம் திகதிக்கு முன்னர் தங்கள் எதிர்ப்பை பதில் செயலாளர், மூன்றுவது ஆலோசனைக் குழு, பதிவுக் காரியகஸ்தர் காரியாலயம், கொழும்பு-1 என்ற முகவரிக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

இம்முயற்சியில் நாம் தவறினால், அது தமிழ் பேசும் மக்களுக்குச் செய்த ஒரு பெரிய இழப்பாகும்.

## மக்கள் இயக்கமாகிவிட்டது

(8-ம் பக்கத் தொடர்ச்சி)
துறைநீலாவணை, கோட்டைக் கல்லாறு ஆகிய இடங்களில் தமிழியக்கப் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

### கல்முனை

22ம் திகதி கல்முனை தொகுதியில் பண்டிருப்பு என்னும் இடத்தில் மாபெரும் கூட்டம் ஒன்றும், அக்கரைப்பற்றில் நிந்தாவூர் பிரதிநிதி ஜனாப் மஜீத் தலைமையில் ஒரு தமிழியக்கப் பிரசாரக் கூட்டமும் நடைபெற்றது.

### கல்குடா

23ம் திகதி கல்குடாத் தொகுதியில் சந்திவெளி, செங்கலட்டி ஆகிய இடங்களில் தமிழியக்கப்பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றன.

இக்கூட்டங்கள் அனைத்திலும் தமிழரசுத் தந்தை திரு.செல்வநாயகம் உட்பட வட-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெரும்பான்மை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து உரை நிகழ்த்தினர்கள் என்று மட்டுநகர் நிருபர் அறிவித்துள்ளார்.

### திருமலையில்

திருமலையில் தமிழியக்கம் எங்கும் வெற்றிகரமான முறையில் செயற்பட்டு வருகிறது. திருக்கோணமலை புரட்சி வாலிப முன்னணியின் மாபெரும் தமிழியக்கப் பொதுக்கூட்டம் ஒன்று திரு. பா. நேமிநாதன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் திருமலைப் பிரதிநிதி திரு. ந. இ. இராஜவரோதயம், மூதூர் முதல் பிரதிநிதி ஜனாப் முகமதலி, ஜனாப் காதர், வீர. சுப்பிரமணியம் முதலியோர் உரை நிகழ்த்தினர்கள்.

திருமலையில் தமிழியக்கம் அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெறுவதாக நமது நிருபர் அறிவித்துள்ளார்.

தொடர்ந்து தமிழ்ப் பிரதேசத்தின் இதர பகுதிகளில் தமிழியக்கப் பிரசாரக்கூட்டம் நடாத்துவதற்கு ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன என்று அறியப்படுகிறது.

## தமிழ் பேசும் தொழிலாளர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பத்து இருபது வருடங்களாக அல்ல, நாற்பது வருடங்களாக இன வேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமைக் கோட்பாட்டில் நம்பிக்கை வைத்து, சிங்களத் தோழர்களோடு தோளோடு தோள் நின்று போராடியிருக்கிறோம். இந்தப் போராட்டங்களுக்கும், தொழிற்சங்க முன்னேற்றத்திற்கும் எங்கள் எண்ணம், சிந்தனை, உழைப்பு, பொருள் மட்டுமல்ல, கந்தசாமி போன்ற கட்டிளம் தமிழ்க்காளையின் உயிரையே பலிகொடுத்திருக்கிறோம்!

### நம்பிக்கைத் துரோகம்

இவற்றிற்கெல்லாம் எமக்குக் கிடைத்த பரிசு, காட்டப்பட்ட நன்றி, செய்யப்பட்ட கைம்மாறு, கலப்பற்ற முழு நம்பிக்கைத் துரோகமே!

தனிச் சிங்கள சட்டத்தினால் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசாங்க ஊழியர்களின் அடிப்படை உரிமைகளுக்கு வாதாட - போராட தங்கள் சுட்டு விரலைக்கூட அசைக்க மறுத்துவிட்டார்கள் எமது முன்னாள் தோழர்கள்.

அதுமட்டுமல்ல, வேலியே பயிரை மேய்வதுபோல், அச்சட்டத்தின் சந்நிதியில் எங்களைப் பலிகொடுக்கும் பூசாரிகளாகவும் மாறி இருக்கிறார்கள்!

இந்த நவீன பூசாரிகள் யாரோ எவரோ அல்ல. ஒரு குறிப்பிட்ட சமதர்மக்கட்சியின் அருகில் குளிர்காய்பவர்கள். உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்று வாய்ப்பறை அறைபவர்கள்! தங்களை சோஷலிசவாதிகள் என்று கூரை ஏறிக்கொக்கரிப்பவர்கள்!

ஆனால் இன்று நாம் விழித்துக்கொண்டோம். எமது அனுபவம் இந்த நாட்டு தமிழ் பேசும் தொழிலாளருக்கு நல்ல பாடமாகவும்-முன்னெச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

'இனவேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமை' பொய்யாய், பழங்கதையாய், கனவாய்ப் போய்விட்டது!

'தமிழ் பேசும் தொழிலாளர் ஒற்றுமையே' எமது கோட்பாடாகவும், இலட்சிய முழக்கமாகவும், இதய கீதமாகவும் இருக்கட்டும். இதுவே நம் ஆசை வேண்டுகோள்.

வாழ்க, தமிழ் பேசும் தொழிலாளர் ஒற்றுமை.!

## நமது இலக்கிய நோக்கு

- ஈழத்தில் உண்மையாகவே இலக்கிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதா?
- இலக்கியத்துறைகளில் 'பிரபலம்' பெற்றுள்ளவர்கள் எனக் குறிப்பிடுபவர்களின் தகுதி என்ன?
- ஈழத்து எழுத்தாளர்கள் தனித் தனி அணி அமைத்து இலக்கியம் வளர்க்கவேண்டியதன் அவசியம் என்ன?
- முற்போக்கு எழுத்தாளர்களின் இலக்கிய சாதனைகளின் விளைவுகள் எவை?
- உண்மை எழுத்தாளர்கள் 'நிலை' என்ன?

என்னும் பிரச்சினைகள் பற்றியெல்லாம் சுவையுற விளக்கும் தொடர் கட்டுரை அடுத்த இதழிலிருந்து ஆரம்பமாகிறது.

ஈழத்தின் பிரபல எழுத்தாளரும், விமர்சகருமான 'பண்டிதர். பா. ப[illegible]

## உரிமை பெற

## இன வழி ஒன்று பட்டுப் போராடுவது சிறந்த வழி

### வட்டுக்கோட்டைப் பிரதிநிதியின் மேதினச் செய்தி

இந்த நாட்டின் முதுகெலும்பாகத் தமது உடலுழைப்பாலும், மூளை உழைப்பாலும் இயங்கிவரும் தமிழ்த் தொழிலாளர்கள் தமது இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு இன வழியில் ஒன்றுபட்டுப் போராடுவதே மார்க்கமாகும்.

இவ்வாறு இ. தொ. கழக துணைத் தலைவர்களில் ஒருவரும், வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு அ. அமிர்தலிங்கம் சுதந்திரனுக்கு விடுத்த விசேட மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



திரு. அ. அமிர்தலிங்கம்

மேலும் அச்செய்தி கூறுவதாவது:

உரிமை இழந்த உழைப்பாளிகள் உரிமை பெறுவதற்கு உறுதி பூண்டு, ஒன்றுபட்டு, கிளர்ந்தெழுந்ததைக் குறிக்கும் தினமே மேதினம். இன்று இந்த நாட்டின், குடியுரிமை, வாக்குரிமை முதலிய அரசியல் உரிமைகளும், தொழில் உரிமை, கல்வி உரிமை முதலிய அடிப்படை உரிமைகளையும் இழந்த ஒரு தொழிலாளர் கூட்டம் வாழ்கின்றதென்றால், அது மலைநாட்டில் வாழும் பத்து லட்சம் தமிழ்த் தொழிலாளர்களே. அது போலவே அரசாங்க சேவையிலிருக்கும் எண்ணற்ற தமிழ்த் தொழிலாளர்கள் தமது மொழியுரிமை பறிக்கப்பட்டு, அதனால் தொழிலுரிமையும் இழந்து, வேலைகளை விட்டு விரட்டப்படும் நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு இனத்தின் உரிமை மறுக்கப்பட்ட நாட்டில் சோஷலிசம் தலைதூக்க முடியாது. அதற்கு மாறாக, பாஸிஸமும் சர்வாதிகாரமுமே தலைதூக்கும். இலங்கையிலும் இந்நிலையையே நாம் காண்கிறோம்.

தொழிலாளர்களின் தோழர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்வோர், இந்த இனவெறியை எதிர்த்து நிற்க ஆற்றலற்று அதற்கு அடிபணிந்து வருவதை இந்நாட்டில் காண்கிறோம்.

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்! என்று உரக்கக் கூறிக் கொள்பவர்கள், இந்த நாட்டில் உரிமை மறுக்கப்பட்டிருக்கும் தமிழ்த் தொழிலாளர்களுக்காக எந்தவித நடவடிக்கையையும் எடுக்க ஆயத்தமாகவில்லை, எடுக்கவும் மாட்டார்கள்.

இந்த அடிப்படையில் அமைந்த தொழிற் சங்கங்களும் தமிழ்த் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள்.

எனவே, இந்த மே தினத்தில் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளரும், அரசாங்க சேவையிலுள்ள தமிழ்த் தொழிலாளரும், கிழக்கு, வடக்கு இலங்கையில் வாழும் தமிழ்த் தொழிலாள, விவசாயிகளும் ஒன்றுபட்டு தமது இழந்த உரிமைகள் அத்தனையையும் பெறுவதற்கு உறுதி பூணுவோமாக.

## திடீர்த் தேர்தல் வருமா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
க்கூடுமென்றும் பொருளாதாரநிபுணர்கள் அரசாங்கத்துக்குக் கருத்துத் தெரிவித்துள்ளனராம்.

### நெல்லிக்காய்கள் உதிரும்

மற்றொரு புறத்தில் பாராளுமன்றத்தில் அரசாங்கக் கட்சி நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்துவிட்டது போல, பொல பொலவென்று உதிர்ந்துபோகும் நிலைமை சிருஷ்டியாகி வருகிறதென்று கூறப்படுகிறது.

திரு. அசோகா கருணாரத்தின எதிர்க்கட்சிக்குச் சென்றது குறிப்பாக அரசாங்கக் கட்சியைப் பெரிதும் பாதித்துள்ளதென்றும் அவரைப் பின்பற்றி, தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த மற்றும் 6 எம்.பிகள் எதிர்க்கட்சிக்கு மாறிவிடக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கக் கட்சிக்குள் சாதிப்பூசல் பூதாகாரமாகக் கிளம்பியுள்ளதாம்.

### பெருந் தலையிடி

இடதுசாரி ஐக்கிய முன்னணி வளர்ந்து வருவதும், யூ. என். பி. தன் வலிமையைப் பன்மடங்கு பெருக்கியுள்ளதும் அரசாங்கக் கட்சிக்குப்பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது என்று தெரிகிறது.

இடதுசாரி மனோபாவமுள்ள அரசாங்க எம்.பி.கள் அநேகர் இடதுசாரி முன்னணியில் சேர்ந்து விடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களிடையே அரசாங்கத்தின் செல்வாக்கு குலைந்த பின்னர் பொதுத் தேர்தல் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டால், சுதந்திரக் கட்சி தேர்தலில் மண்கவ்வி விடுமென்றும், அரசியல் ஆலோசகர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனராம்.

### தலைதப்ப வழி


ஆகவே பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பிப் பிழைக்கவும், அரசாங்கக் கட்சி பலவீனமடையமுன்பு-இடதுசாரி முன்னணி தனது வலிமையை மென்மேலும் பெருக்கிக்கொள்ள முன்பு திடீரென ஒரு பொதுத்தேர்தலை நடத்தினால் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட முடியுமென்றும் ஆளும்கட்சி கருதுகிறதாகக் கூறப்படுகிறது.

மீண்டும் பதவிக்கு வந்த பின்னர், ஐந்தாண்டு காலம் ஆட்சி செலுத்த முடியுமாதலின், அச்சமின்றி அரிசி விலையைக் கூட்டியோ, பங்கீட்டளவைக் குறைத்தோ பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்கலாமென்று ஆளும் கட்சி அபிப்பிராயப்படுவதாகவும், ஆகவே திடீரென பொதுத் தேர்தல் நடத்த ஆட்சியாளர் முன்வரக்கூடுமென்றும் பேச்சு அடிபடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர் ஏழு
# 'புவனம் என்னை நம்பு'

தொடர் கதை




வானத்தில் பறக்கும் வானம்பாடி ஒன்று தனக்கு விடுதலை வேண்டுமென்று கேட்கிறது; இக்கேள்வியில் ஏதாவது அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை.

ஒன்றோ, ஒருவனோ, ஒருத்தியோ விடுதலை வேண்டுமென்றால், ஏதோ ஒருவகைச் சிறையில் வாடுவதாகவல்லவா அர்த்தம்?

கோரச் சிறையில் அடைபட்டுள்ள கைதி ஒருவன் விடுதலை வேண்டில் அவனது வேண்டுதலில் அர்த்தமிருக்கிறது; ஞானி ஒருவன் தன்னுடல் கட்டுச் சிறையிலிருந்து விடுதலை பெற விழையில், அவன் விருப்பில் அர்த்தமிருக்கிறது.

ஆனால், புவனம் தனக்கு எப்போது விடுதலை என்று கேட்கிறாள்.

அவள் சிறையிலா இருக்கிறாள்? உருக்கொடுத்துப் பெற்று வளர்த்துப் பருவ மங்கையாக உருவாக்கி விட்ட பெற்றோருடன் இருப்பது சிறை போன்றதா?

சிறகு முளைத்த கிளி பொந்திலிருக்க விரும்பாதா?

"என்ன, நான் கேட்கிறேன்! நீங்க பேசாம நிக்கிறீங்களே?"—புவனம் அவனை உலுக்குகிறாள்.

நான்காம் பிறையின் கூர் மழுங்கிய ஒளிக்கதிர்கள் சன்னமாக, அம் மரத்தைச் சுற்றி விழுந்திருக்கின்றன. பாரிய அந்த வேப்பமரத்தின் நிழலின் கீழ் அவனும், அவளும் நின்றிருக்கிறார்கள். வேப்பமரத்தினைச் சலசலக்க வைத்த ஊதல்காற்று உடலைக் குளிர்விக்க முயன்றாலும், அவனுடைய உடல் புகைவண்டி எஞ்சினைக் கொதிக்கிறது. அவளுடைய கரங்கள் தண்ணென்று, வாழைத்தண்டாகக் குளிர்கின்றன.

"புவனம்......!" அவன் அழைப்பில் ஆசைபொங்கிப் பாலாகத் தளும்புகின்றது: "உனக்கு நான் எப்படிப் புவனம் விடுதலை தர முடியும்?......நான் படித்து ஒரு உத்தியோகம் எடுக்கு மட்டும் நீ பெற்றோரோடை தானே இருக்க வேணும்? இல்லாவிட்டால் உன்ரை கொக்கா செய்தது போல நாங்..."

புவனத்தினுடல் பதறுகிறது:

"வேண்டாம், வேண்டாம் ராஜ்! அக்காவைப் பற்றிப் பேசாதீங்க......! கனகக்கா செய்த வேலையாலை வீடே இடிஞ்சு போய்க் கிடக்கு! அப்பா வாயிலை தண்ணி விட்ட ஒரு நாளாச்சு......! அம்மா அப்படியே குமைந்து போட்டாங்க! அக்கா செய்த வேலையை நான் ஒருக்காலும் செய்ய மாட்டேன்...! அப்படிக் கனவிலை கூட நினைக்க மாட்டன்...! பெற்றார், உற்றாரை வெறுத்து தன் விருப்பப்படி ஓடிவிடுகிறவை எங்கையாவது நல்லா இருந்திருக்கினமா? கொஞ்ச நாளைக்குச் சந்தோஷமாயிருக்கும்...! பெற்றோரோடை ஏற்பட்ட தொடர்பு இரத்தத் தொடர்பு, ராஜ்! கணவனோடை ஏற்படுவது உணர்ச்சித் தொடர்பு, ராஜ்......! நான் கனகக்காவைப் போல ஒருபோதும் செய்ய மாட்டேன்......"

"அப்படியானால் காதல், புவனம்...?"

அவனுடைய கைகளுக்குள் அடங்கியிருக்கும் புவனத்தின் கரங்கள் நடுங்குகின்றன; பயந்து நடுங்கும் புறாக்குஞ்சொன்றைக் கைகளுக்குள் பொத்தி வைத்திருக்கும் உணர்வு அவனுக்கு ஏற்படுகிறது: 'எதுவுமே பேசத் தெரியாத புவனம்—ஒரு வரி கூடப் பிழையில்லாமல் எழுதத் தெரியாத புவனமா, தத்துவம் பேசுகிறாள்? காதல், தத்துவம் பேசவும் வைக்குமா?'

"காதலுக்காக உயிரை விடவும் தயாராகவிருக்கிறேன், ராஜ்! காதலுக்காகப் போராடவும் தயாராகவிருக்கிறேன், ராஜ்!'

புவனத்தின் உடல் நடுங்குவதை, அவள் வார்த்தைகளின் தடுமாற்றத்திலிருந்து அவன் உணர்ந்து கொள்கிறான்; மெல்லிய காற்றின் சலசலப்பில், சற்றுத் தூரத்தில் தெரிந்த கிணற்றடியில் வளர்ந்த கருவேப்பிலைச் செடி படபடக்கிறது.

புவனம் விழிகளைச் சுற்று முற்றும் சுழல விடுகிறாள்.

அவளின் வீடு தூக்கத்தில் ஆழ்ந்து அயர்ந்து கிடக்கிறது; குறுக்கே ஓடிய வேலிக்கப்பால் ராஜகோபாலின் வீடும் தெரிகிறது.

ஒரே அமைதி; இருள்.

'இப்படி அடிவளவிலை சந்திக்கிறதை யாராவது பாத்துட்டா......?' நினைவே உடலைப் பயமுறுத்தும் பாம்பாக......

"ராஜ்......நான் போறன்! யாராவது பாத்துட்டா...?"

அவன் அவள் கரங்களைப் பற்றி இழுத்துக் கொள்கிறான்.

"ஆரும் பாக்க மாட்டினம்!......பயப்பட்டுச் சாகாதை, புவனம்! எத்தனை

செங்கை ஆழியான்

நாளைக்குப் பிறகு சந்திக்கிறம்...? உன்ரை அக்கா..."

அவள் அவன் வாயைத் தன் கரமொன்றால் பொத்துகிறாள்; மெல்லிய கரங்கள்; மிக மெல்லிய கரங்கள். சிவந்த துளிர்போன்ற விரல்கள் அவன் கன்னத்தில் படிகின்றன.

"அவவைப் பற்றிக் கதையாதீங்க...!"

இருளோடு மௌனம் உறவாடுகிறது; இடையே அவனுக்குத் தனது வீட்டின் நினைவு மனதில் விரிகிறது. தான் அறையில் இல்லாததை ஆச்சி அல்லது அண்ணன் பார்த்து விட்டால்...?

அதற்காக அவளைப் போல அவன் அவசரப் படத் தயாராகவில்லை.

"ராஜ்...!" என்று அவள் அழைக்கிறாள்:

"சோதனைக்கு இன்னும் ஒரு மாதம்தானே இருக்கு...! கவனமாகப் படிக்கிறீங்களா?...மனதைச் செலுத்திப் படிக்கிறீங்களா?..."

"மனதைச் செலுத்தாமல் எப்படிப் புவனம், படிக்க முடியும்?"

"இல்லை......உங்களுக்கு ரெண்டு நாளா மனசே சரியில்லை...அக்கா ஓடிப் போனதுக்கு நீங்களும் உதவியாய் இருந்திட்டீங்களெண்டு, உங்களுக்குத் துக்கம்......! இல்லாட்டி இண்டைக்குக் காருக்கை அம்பிட இருப்பீங்களா?"

"புவனம்!" அவனுடைய விளிப்பில் வியப்பு மிதமிஞ்சிக் காணப்படுகிறது: "புவனம்! உனக்கு ஆரிதைச் சொன்னது...?"

"நீங்க காருக்கை அகப்பட இருந்தீங்கெண்டு, கேள்விப்பட்டபோது என்ரை இதயமே துடிச்சுப் போச்சு! எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கிப் போட்டன்!......அப்படி ஏதாவது ஒண்டு உங்களுக்கு நடந்தா, நானேன் இருப்பான்?...உடனே நானும் செத்துப் போவ..."

இப்போது அவன் அவள் வாயைப் பொத்துகிறான்; பெண்மையின் மென்மை நிறைந்த கரம் அவனுடையது; அவனுடைய நீண்ட விரல்கள் அவள் கன்னக் கதுப்புகளில் வேகமாகப் பதிகின்றன:

"[illegible]! ......... [illegible] ஆர் சொன்னது?..."

"நீங்க சொல்லாட்டி எனக்கு ஒருவருமே சொல்ல மாட்டினமா?..."

அவனுடைய 'ஆவலையும்' கூடவே கோபத்தையும் தூண்டுகிறாள்.

உறுமிக்கொண்டு அவனை நோக்கிப் பாய்ந்து வருகிறது, கார்; அவன் துடித்துப் போய் மின்னலாகக் கரைக்குப் பாய்கிறான்;...கார்க்காரரின் ஏச்சு......காருக்குள்ளிருந்த் கல்லூரி மாணவிகளின் 'கொல்'லென்ற சிரிப்பு......

"புவனம்! சொல்லமாட்டே......ஆர் சொன்னதெண்டு?"

"ஐயையோ, தோளை விடுங்க!......சரியாய் வலிக்குது...மரக்கை தான் உங்கடை கை...! பள்ளிக் கூடத்திலை என்னோடை படிக்கிற ஒரு பிள்ளை கூறினது, நீங்க காருக்கை அம்பிட இருந்தீங்கன்னு!"

"என்னை எப்படி அவவுக்குத் தெரியும்?..."

"என்னைக் கேட்டா...எனக்குத் தெரியுமே? நேரமாச்சுது......நான் போறன், என்ன?..."

"போறன், போறன் எண்டு அவசரப்பட்டால், ஏன் வந்தனீ?"

"நீங்க வந்து கூப்பிட்டீங்க...வந்தன்!..."

அவன் அவளைத் தன்னோடு நெருக்கமாக இழுக்கிறான்.

"இதென்ன, ராஜ்...? நான் போறன், விடுங்களேன்?..."

சில விநாடிகள் இருளோடு ஐக்கியமாகிக் கலக்கின்றன

மழுங்கிய நிலவு வானத்தில்......கூதல் காற்றும் வீசுகிறது.

அவள் தன் கன்னங்களை வெட்கத்தோடு துடைத்துக் கொள்கிறாள்:

"நீங்க சரியான ஆள் தான்......இனிமே இப்படிச் செய்தீங்களெண்டால், இனிமே வரவே மாட்டான்...!"

அவள் அவன் பிடியிலிருந்து விலகி, வேப்பமரத்தின் நிழலைக் கடந்து, ஒளி நிலத்தில் கால்களைப் பதிக்கிறாள்.

"அம்மா...!"

அவன் குரல் ஆவலோடு இழைகிறது; அக்குரலுக்குத்தான் எத்தனை மகத்தான சக்தி? விலகி ஓட முயன்ற கால்கள் மந்திரத்தால் கட்டுண்டு மயங்கி நிற்கின்றன. அவள் இதயத்தின் அடி நாதத்தையே அவ்வார்த்தை சுண்டியிழுக்க... அவள் கால்கள் பின்னுப்பட...ஒரு கணந்தான்.

அவள் கால்கள் பெயருகின்றன.

"அம்மா!..." என்ற குரல் வேப்பமர நிழலிலிருந்து தாபத்தோடு எழுகிறது.

"ராஜ்...!" என்றழைப்பு கண்டத்திலிருந்து வெடிக்க அவள் திரும்பவும் அவனை நாடி ஓடுகிறாள்: "ராஜ்! நல்ல வார்த்தை கண்டு பிடித்திருக்கீங்க...என்னை வசமிழக்கச் செய்ய...!"

வேலும், சில விநாடிகள் இருளோடு கலக்கின்றன.

"ராஜ்! என்னை ஏமாற்றி விட மாட்டீங்களே?..."

"புவனம்!......என்னில் உனக்கு நம்பிக்கையே இல்லையா?..."

நம்பிக்கை எனும் ஒரு சிறு கயிற்றில்தான் பெண்களின் இதயமே ஊசலாடுகிறது: அச்சிறு கயிற்றை நம்பித்தான் அவர்கள் தங்கள் வாழ்வை ஒருவனிடம் ஒப்படைக்கிறார்கள், என்பதை அவனறிவான்.

'புவனம், என்னில் உனக்கு நம்பிக்கை இல்லையா?' என்று வார்த்தைகள் விழுந்த வேகத்திலும், அவற்றில் இருந்த இதயத்தின நாதத்திலும் அவள் வசமிழக்கிறாள்.

"புவனம்! உன்னை நான் ஒருபோதும் ஏமாற்றவே மாட்டேன்! ஆர்தான் என்ன சொன்னாலும், உன்னைத்தான் கைப்பிடிப்பன், புவனம்......!"

வேப்பமரக் கிளையினூடாக நுழைந்து வந்த கதிர் ஒன்று அவளுடைய கழுத்திலிருந்த சங்கிலியில் படிந்து ஒளிர்கிறது.

அவனுக்கு ஒரு வெறி...... மயக்கம் நிறைந்த வெறி...

மின்னிய சங்கிலியையும், அவளுடைய மெல்லிய கழுத்தையும் மயக்கம் மின்னப் பார்க்கிறான்.

ஒரு கணந்தான்...

வானத்தின் ஒரு கோடியிலிருந்து இன்னோர் கோடிக்கு எரிநட்சத்திரம் ஒன்று மின்னிப் பாய்நது அழிகிறது!

அவன் கரங்கள் அவள் கழுத்திலிருந்த சங்கிலியைக் கழற்றுகின்றன; அவள் அவனை வியப்போடு பார்க்கிறாள்.

"புவனம்!......என் புவனம்! என்றோ ஒரு நாள், நானுனக்குப் பலரறியக் கட்ட வேண்டிய தாலியை, இன்றுனக்கு......!"

கழற்றிய சங்கிலி திரும்பவும் அவள் கழுத்தில்...

கூர் மழுங்கிய நிலவும், கூதல் காற்றும், வேப்ப மரமும்தான் சாட்சிகளாக நிற்கின்றன!

அவள் எங்கே......?வானத்தில் இறகு முளைத்துப் பறக்கிறாளா? விண்மீன்கள் எல்லாவற்றையும் கடந்து கடந்து அண்டப்பர வெளியிலே, மிதக்கிறாளா? தண்மை நிலவு, அமுதப் பன்னீரால் அவளைக் குளிர்விக்கின்றதா...? தாரகைக் கன்னிகள் சூழ்ந்திருக்க அவள் கழுத்திலே மாலையிட்டது யார்...யார்?

அவள், அவன் காலடியில்......

"ராஜ்...! ராஜ்...!நீங்க மிகவும் நல்லவர்! மிகவும் நல்லவர்...!" அவள் மகிழ்வால் விம்முகிறாள்; அவள் விழிகளிலிருந்து ஆனந்த வெள்ளம் ஊற்றெடுத்து, அவன் பாதங்களைக் கழுவுகிறது.

"புவனம்...!"

"என்ன...?"—அவள் தலை நிமிர்கிறது.

"புவனம்...!"

"என்ன, ராஜ்...?"

"உன்னை வாயோயாது அப்படி அழைத்துக் கொண்டிருக்க வேண்டும் போலிருக்கிறது! புவனம்...என் புவனி! நீ என்று தான் என் வீட்டிற்கு வருவாயோ...?"

"நீங்க எப்ப அழைக்கிறீங்களோ, அன்றே..."

"நான் எப்பவும் அழைப்பேன்! ஆனா, ஆச்சி..."

புவனம் துடித்துப் போகிறாள்:

"அப்ப...அப்ப...ராஜ்! ஆச்சி இதுக்கு ஒத்துக்கவே மாட்டாவா?..."

அவனது ஒரு கண மௌனம், அவளைக் கொல்கிறது:

"சொல்லுங்க...ராஜ்?..."

"கொஞ்சம் கஷ்டம் தான்......! அண்ணைக்கு உன்னக்காவைக் கேட்டு வந்த போது, உன் அப்பா மறுத்து விட்டார்! ஏழ்மையைச் சுட்டிக் காட்டினார்! அதை ஆச்சி இன்னும் மறக்கேலை...!

(15-ம் பக்கம் பார்க்க)

வேல் தைலம்
மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

விலை ரூபா 1-25

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:
S. P. S. ஜெயம் கம்பெனி,
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:
M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை




**நான்** ஒரு பெண். பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பார்கள். ஆனால் பேயைவிடப் பெரும் பெயர்களால் என் வாழ்வே யழிந்து விட்டது. இது போன்ற அரக்கத்தனமான செய்கையால் என் குடும்பமே அழிந்து விட்டது. இவைகளை எண்ணியெண்ணி அழுதேன். இப்பொழுது கண்ணீரே வருவதில்லை! கண்ணீர் இருந்தால்தானே வருவதற்கு?

என் துன்பச் சுமையை நீதி தேவதைக்கு முன்னால் முறையிட்டுக் கூறவிரும்புகிறேன். அதுதான் எனக்குச் சிறிதாவது நிம்மதியாகும்......!

ஒன்றிக் கட்டையாக, தாய் தகப்பனை இழந்தவராக, தமிழ் ஆசிரியனாக எங்கள் ஊருக்கு வந்தவர், என் கண்ணிறைந்த கணவனானார். அவரைக் காதற் கலியாணஞ் செய்து கொண்டேன்.

நான் அவரைக் காதலித்தேன். அவரும் என்னைக் காதலித்தார். ஆனால்...

ஆனால் இன்னமும் ஒருத்தியை அவர் காதலித்தார். அவருடைய செய்கை, பேச்சு, மூச்செல்லாம் அவளைப் பற்றியே இருந்தன. இரவிரவாகக் கண் விழித்து, நெடுநேரமிருந்து ஏதேதோ எழுதுவார். அவளைப் போற்றுவார். புகழுவார். ஆம், அவர் காதலிப்பது தமிழ்ப் பெண்ணை! அவளைப் பற்றிக் கவி பாடுவார், கட்டுரை வரைவார். நாடகம் தீட்டுவார். என்னையும் அவளை நேசிக்கும்படி தூண்டுவார். அவர் எழுதுவதை என்னைக் கொண்டு வாசிப்பித்து இன்பம் காணுவார்.

அவரின் அன்புப் பிரதி என் வயிற்றில் வளர்ந்து கொண்டு வந்தது... அந்த நேரத்தில் தான் அவருக்கு வேலை கொழும்புக்கு மாற்றலாகியிருப்பதாக அறிவித்தல் கிடைத்தது. வீட்டு நிலையைக் காட்டி மாற்றம் இப்பொழுது வேண்டாம் என எழுதியதும் பயனளிக்கவில்லை.

கொழும்புக்குச் சென்று குடியேறினோம்.

ஒரு நாள் வெளியில் சென்றிருந்த என் கணவர், நெற்றியில் ஏற்பட்ட ஒரு காயத்துக்குக் கட்டுப் போட்டுக் கொண்டு வந்ததைக் கண்ட நான் பதறியே விட்டேன். காரணம் கேட்டபொழுது அவர் சொன்ன கதை என்னைக் கலங்க வைத்து விட்டது.

தனிச் சிங்களம் இந்த நாட்டின் அரசியல் மொழியாக இருக்கவேண்டுமெனப் பாராளுமன்றத்திலே சட்டம் கொண்டு வந்த நேரத்திலே, 'தமிழ் மொழிக்கும் உரிமை தா'வெனப் பாராளுமன்றத்தின் முன்னிலையில் சத்தியாக்கிரகம் செய்தார்களாம் நம் தலைவர்கள். அப்படியிருந்த நேரத்திலே சில வெறியர்களின் கல் வீச்சுக்காளானார்களாம். அப்படி யெறிந்த கல்லொன்றுதான் பக்கத்திலே நின்ற என் கணவன் நெற்றியிலும் தாக்கியது. அதை அவர், தன் தமிழ்த் தாய்க்குச் செய்த தொண்டின் பயனாகக் கிடைத்த தியாகத் தழும்பு என்று கூறிக் கொள்வார். காலகதியில் புண் மாறிவிட்ட போதிலும் அதனால் ஏற்பட்ட வடு மட்டும் மறையவில்லை. தனிச் சிங்களச் சட்டத்தினால் தமிழுக்கு ஏற்பட்ட வடுப்போல இருந்து கொண்டே வந்தது.

அதன் பிறகு, ஒரு வயிற்றில் பிறந்த பிள்ளைகளாக, சகோதரர்களாக வாழ்ந்து வந்த எம்மிடையே தமிழன், சிங்களவன் என்ற வேற்றுமை வளர்ந்து கொண்டு வந்தது. ஒருவரையொருவர் பார்க்கும் பொழுது சந்தேகக் கண் கொண்டு பார்க்கத் தொடங்கி விட்டார்கள்.

'அப்பிட்ட பாஷாவ சிங்கள' என்றார்கள் சிங்களவர். 'தமிழ் தமிழனின் உயிர்' என்றார்கள் நம்மவர். இவைகளில் எது பிழை? எது சரி?

ஒரு நாள் பள்ளிக்கூடம் சென்றிருந்த என் கணவர் ஓடோடி வந்தார். 'தமிழர்களுடைய வீடுகள் எல்லாவற்றையும் கொள்ளையடிக்கிறார்கள். அவர்களை அடித்துத் துன்புறுத்திக் கொண்டு வருகிறார்கள் சில சிங்களவர்கள்' என்று பாப்பரப்போடு கூறினார். கண்ணுக் கெட்டிய தூரம் ஒரே புகை மண்டலமாகத் தெரிந்தது. கேட்கும் ஒலிகள் எல்லாம் அவலக் குரலாக ஒலித்தன. என் நெஞ்சம் நடுங்கியது.

நாமிருக்கும் வீட்டில் அடுத்த பாதியில் இருப்பவர்கள் சிங்களக் குடும்பமாயிருந்தாலும், பல நாட்கள் பழகிய நட்பினால், எம்மை ஒன்றுக்கும் பயப்பட வேண்டாமென்று தேற்றினார்கள்.

அன்று இரவு சில போக்கிரிகள் ஆர்ப்பாட்டஞ் செய்து கொண்டு வீதியோரம் போவதைக் கண்ட எனக்கு அங்கு இருக்கவே முடியவில்லை. பக்கத்து வீட்டாரின் அறையிலேயே போய்ப் படுத்துக் கொண்டோம்.

ஒரு சாமம் இருக்கும், ஒரு கூட்டம் நாமிருந்த வீட்டுக்குள் நுழைந்து இருந்த தளபாடங்கள் எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கி எரியூட்டி விட்டு, தூக்கிச் செல்லக்கூடிய பொருட்களையெல்லாம் கொண்டு போய்விட்டார்கள். இவைகளைப் பார்த்த எனக்கு, உடனேயே ஊருக்குப் புறப்பட வேண்டும் போலிருந்தது.



மறுநாட் காலை. வாடகை வண்டியொன்று பிடித்துப் புகையிரத நிலையம் போய், காலை யாழ்தேவியில் யாழ்ப்பாணம் போய்விடலாமென்று கூறி வெளியில் சென்றவர் ஒரு சில விநாடிகளில் திரும்பி வந்தார்......!

என் கணவர் வந்தாரென்றேன். எப்படி வந்தார் தெரியுமா? மண்டையிலிருந்து வழிந்த இரத்தம் அவர் முகத்தையே மறைத்துக் கொண்டிருந்தது. அவர் மேனி முழுவதும் ஒரே இரத்தப் பெருக்கு!— இரத்தக் கறை!

'மரகதம்' என்று முனகியபடியே என்னைத் தாங்கிப் பிடித்துக்கொண்டார். கால்கள் தடுமாறிச் [illegible] தள்ளாடியவரை என் மடி மீது படுக்க வைத்தேன்.

ஐயோ...! என் கண்களாலேயே அந்த அவல நிலையைப் பார்க்க முடியாதிருந்தது. மண்டையோடு சில்லு சில்லமாகச் சிதறிக் கிடந்தன...நிலத்தில் அவரை வளர்த்தி விட்டு, கட்டுப் போடுவதற்காகப் பழைய

நடமாடி

சீலை எடுத்து வந்த போது...... என் அன்புத் தெய்வம், எனக்கு வாழ்வளித்த தெய்வம், என் இதயக் கோவிலில் குடிகொண்டிருந்த தெய்வம், என்னை விட்டுப் பிரிந்துவிட்டது. என் வாழ்வில் ஒளியேற்றியவர் மறைந்து விட்டார். அவர் உயிர் பிரிந்துவிட்டது. உற்றார் சுற்றம் எவருமில்லாத இடத்தில் என்னையும் தமிழ்ச் செல்வியையும் விட்டுவிட்டுப் பிரிந்துவிட்டார். என்ன செய்வதென்றே தெரியவில்லை எனக்கு! பிறகு என்னவானேன் என்பதுமே தெரியவில்லை!

கண் விழித்தபோது என் பக்கத்தில் பல பேர்கள் இருந்தார்கள். தமிழ்ச் செல்வியும் அழுதபடியே இருந்தாள். பக்கத்திலே உள்ளவர்கள் அத்தனை பேர்கள் பார்வையிலும் பரிதாபம் வழிந்து கொண்டிருந்தது. சுற்று முற்றும் சிங்கள மக்கள் மத்தியிலிருந்தும் நாம் நாலாபக்கமும் தமிழர்கள் நடுவே இருக்கக்காரணம் என்னவென்று எண்ணினேன்! விசாரித்தபோது—

வெள்ளவத்தை சரசுவதி மண்டபத்தில் இருப்பதாகத் தெரியவந்தது. எம்மோடு இருந்தவர்களெல்லாம் சொத்துக்களிழந்து, சுகமிழந்து வந்தவர்களே. [illegible] தமிழர், சிங்களவரென்ற வகுப்புக் கலவரம் அது. சிங்களப் பிரேதசத்தில் இருந்த தமிழர்கள் பட்டபாடுகளையும் கெட்ட கேடுகளையும் அங்கிருந்தவர்கள் சொல்லச் சொல்ல அடிவயிறு கூடப் பற்றியெரிந்தது. அப்பப்பா! இது பழைய கதை! பலபேர்கள் அறிந்த கதை! நாட்டுக்குத் தெரிந்த கதை!

எம்மையெல்லாம் கப்பலில் ஏற்றிக் கடல் மார்க்கமாகத் தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

உடைமைகள் எல்லாவற்றையும் கொழும்பிலே விட்டு, உடுத்திருந்த சேலையோடு ஊர் வந்து சேர்ந்த என்னையும் தமிழ்ச் செல்வியையும் வரவேற்று ஆதரிக்க என் அன்னை இருந்தார். ஒரு ஆண் துணையில்லாமல் இத்தனை காலமாகத் தன் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டு வரும் அவரை என்னவென்று அழைக்க முடியும்? பசு வளர்த்து அது கொடுக்கும் பாலை விற்றுத்தான் அவரது வாழ்க்கை உருண்டு கொண்டிருந்தது. அன்றும் இன்றும் அவரது தொழில் இதுதான்!

நான் ஊருக்கு வந்த நல்ல நாளில், அந்தப் பசுவும் இறந்துவிட்டது. பசு இறந்தது... பணம்...? பசி...?

அவரின் சேவைக் காலத்தைக் குறிப்பிட்டு உபகாரப் பணத்துக்கு எழுதினோம். எழுதியெழுதிக் கையிலிருந்த சிறு தொகையும் கரைந்ததே தவிர, பலன் ஒன்றும் கிட்டவில்லை. கண்கெட்ட நிர்வாகமே, நீ காலாகாலம் மட்டும் வாழு!

சில பெரிய மனிதர்களின் வீடுகளுக்குச் சென்று மா விடிப்பது, தண்ணீர் பிடித்துக் கொடுப்பது, முற்றங் கூட்டுவது, இப்படிப் பல வேலைகளையும் செய்து, அதனால் வரும் சிறு வருவாயைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டிக் கொண்டு வந்தோம்.

'வாழ வேண்டிய நேரத்தில் வாழாவெட்டியாகி விட்டாயே' என்று கூறுபவர்கள் ஒரு பக்கம். '...இதுக்கு மட்டும் சம்மதித்தாயானால் நல்லாயிருப்பாய்' என்பவர்கள் மறு பக்கம். 'இன்னொரு கலியாணத்தைச் செய்து சுகமாக வாழு' என்பது என் அம்மாவின் கூற்று. கூறுவதோடு நில்லாமல் குறிவைத்துத் தேடுவதிலும் இறங்கி விட்டார்.

இவ்வகளை எண்ணியெண்ணி எனக்குள் நானே சிரித்துக் கொள்வதைத் தவிர வேறு என்ன இருக்கிறது? நான் செத்துவிட்டால் நல்லதெனத் தோன்றும். ஆனால், என் தமிழ்ச் செல்வியின் கதி...?

இந்த நேரத்திலேதான், தமிழ்ப் பகுதிகளிலே சிங்களம் ஆட்சி செலுத்த ஆரம்பிக்கப்பட்டது. ஆர்த்தெழுந்தார்கள் தமிழர்கள். அரசாங்க அலுவலகங்களின் முன் மறியல் செய்தார்கள்.

அன்னிய மொழியொன்று எம்மை ஆளவென்று வந்த நேரத்திலே, வீட்டுக்கொருவர் மட்டுமல்ல, வீடே படையெடுத்து, அறம் என்னும் ஆயுதம் தாங்கி அன்புப் போர் புரியக் களம் சென்றோம். அங்கு நாம் பெற்றது என்ன? அடி பட்டோம். அடித்தனர் ஆட்சியினர். அடித்த தடிகளும் முறிந்து அவர்கள் கைகளும் ஓய்ந்தன. 'அடிக்கவா? அடி! சுடவா? சுடு! சிறையா? வை! எதையும் ஏற்போம்! ஆனால் மொழிக்கு இன்னலா? இடர் பட்டாலும் அதைமட்டும் காப்போம்' என்று போர்ப் பரணி பாடினர்.

தமிழ் நாட்டு வீதியெல்லாம் தமிழ் முழக்கம் கேட்டது. தாலாட்டும் தாய்மாரெல்லாம் போராட்டஞ் செய்யப் புறப்பட்டனர். தமிழ்த் தாயின் மானங்காக்கும் அறப்போரில் இரவு பகலாக வெய்யில், மழை, பனி, கூதல் பாராமல் எல்லாரும் கலந்து கொண்டனர்.

இதைக் கண்ட ஆட்சியினர் அதிசயித்தனர். விட்டுக்கொடுத்தால் தன் பாட்டிலேயே அலுத்து விட்டுவிடுவார்கள் என்று எண்ணினர் போலும்.

ஒரு நாள் அணிவகுத்துச் சென்ற அறப் போராட்ட ஊர்வலத்தில் போய்க் கொண்டிருந்த என் தாயாருடன் என் மகள் தமிழ்ச் செல்வியும் போகப்போவதாக அடம் பிடித்தாள். அவள் எண்ணத்துக்கு விட்டுவிட்டேன். போய்விட்டாள்.

(13-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

**இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.**

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3,00.

வி. பி. பி. செலவு வேறு

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



ஆயிரம் மலரில் ஒரு மலர் நீ, ஆலய மணியின் இன்னிசை நீ என்றெல்லாம் சரோஜாதேவியைப் பார்த்து இலட்சிய நடிகர் காதல் கனிமொழி கூற அதற்கு நான் அருகதை உடையவள் தானு என்ற சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாரோ தேவி? சினிமாஸ் திரைகளில் வெற்றி நடைபோடும் ஆலயமணியில் ஒரு ரசமான கட்டம்.

## மனேதத்துவ அடிப்படையில்
# ஆலய மணி

மனேதத்துவத்தை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்ட படம் ஆலய மணி என்ற முறையில் அதனைப் போற்ற வேண்டும். ஒரே விதமான கதைகளைத் திரையில் கண்டு சோர்வுற்ற ரசிகர்களுக்கு புது விதமானதும் அறிவூட்டத்தக்கதுமான படமாக ஆலய மணி அமைகிறது. கதையின் பிணைப்பிலும் பல குற்றங்களிருப்பினும்—புதுமை, பயனளிக்கக் கூடியது என்பதனுலேயே புகழ வேண்டும்.

பெற்ருரை யிழந்த பெரும் ஜமீந்தார் தியாகராஜனுக சிவாஜி தோன்றுகிருர். வெள்ளைக்கார முறைகளை அனுட்டிக்கையில் தத்ரூபமாக நடிப்பதைப் போற்ற வேண்டும். அசல் ஜமீந்தாராகவே மாறிவிடுகிருர். சில கட்டங்களில் நடிப்புக் கலையின் உச்ச வரம்புகளையே எட்டிவிடுகிருர்.

தியாகராஜனின் உயிர்த் தோழன் டாக்டர் சேகராக வருகிருர் ராஜேந்திரன். சிறிது சிரமமான பாகம்—ஓரளவு தேறியுள்ளார்.

டாக்டர் சேகருடன் பழகிவிட்டுப் பின்னர் தியாகராஜனையே மணக்க வேண்டியவளாக மாறும் பாகத்தை சரோஜா தேவி ஏற்றுள்ளார். குறும்புப் பெண்ணுக நன்ருகச் செய்துள்ளார்.

விஜயகுமாரியின் பாகம் சிறியது. செய்யக்கூடியதைச் செய்துள்ளார். எம். ஆர். ராதா வில்லனுக வருகிருர். சிறு பாகம். அதிகம் பேசவில்லை. நன்ருக நடிக்கிருர். நாகையா வழமைபோலத் தன் பாகத்தை முடிக்கிருர். நகைச்சுவை பாகத்திற்கு வரும் டி. ஆர். ராமச்சந்திரனுடைய பாகம் சிறியது.

(13-ம் பக்கம் பார்க்க)



நடந்ததெல்லாம் முடிந்த கதையாகிவிட்டதா என்ற உணர்ச்சி அலை மோதல்களுக்கிடையில் இப்பெண் நின்று தவிக்கிருர் போலும். 'ஆலய மணி'யில் சரோஜாதேவி தோன்றும் ஒரு சோகக் காட்சி.

# ஜெமினி கணேசனுக்கு அழைப்பு தி. மு. கழகத்தில் சேரும்படி

சென்னையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவொன்றில் நடிகர் ஜெமினி கணேசன் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டார். இவ் விழாவில் திரு. அண்ணுத்துரையும் பேச வந்திருந்தார்.



திரு. ஜெமினி கணேசன் தனது பேச்சின்போது தான் அரசியலில் ஈடுபட விரும்பவில்லை என்றும், அரசியல் ரீதியிலே இவ்விழாவில் கலந்து கொள்ளவில்லை என்றும் தமிழ் என்பதற்காகவே கலந்து கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

பின்னர் பேசிய அறிஞர் அண்ணு இதற்கு விடையளிக்கும் விதத்தில் கலைஞர்களும் மனிதர்கள் தான், அவர்களுக்கும் அரசியல் தேவை என்றும் அரசியலைக் கண்டு அஞ்சத் தேவையில்லை என்றும் கூறினர். அவர் மேலும் திரு. ஜெமினி கணேசன் விரையில் தி. மு. கழக உறுப்பினராக மாறினல் தான் மகிழ்ச்சியடைவேனென்றும் குறிப்பிட்டார்.



# சோதிடப்படி தை மாதத்தில் கல்யாணம் நடக்கும்

—சரோஜாதேவி

(சென்னை நிருபர்)

கன்னடத்தில் தோன்றித் தமிழ்த் திரையுலகினுள் புகுந்த கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவி, இன்று நான்கு மொழிப் படங்களில் நடித்து வருவதுடன் அகில இந்தியப் புகழ் பெற்ற நடிகையாகி விட்டார்.

இவர் நடித்த முதல் படம் கன்னட மொழியில் வெளியான கவி காளிதாஸ் ஆகும். எம். ஜி. ஆரின் சொந்தப் படமான நாடோடி மன்னன் மூலம் இவர் தமிழ்த் திரையுலகின் நட்சத்திரமானர்.



அண்மையில் வெளியான 'சசுரால்' என்னும் அவர் நடித்த முதல் ஹிந்திப்படம் மூலம் ஹிந்திப்பட உலகில் புகுந்ததுடன் அங்கும் நட்சத்திரமாகிவிட்டார். "சசுரால்' படம் 75 நாட்களாக வெற்றிகரமாக ஓடி சரோஜாதேவிக்கு மேலும் புகழ் தேடித் தந்துள்ளது.

சரோஜா தேவியை பார்ப்பதற்காகவே பலர் அவர் தோன்றும் படங்களைப் பார்ப்பதுண்டு. சதா இவரை நினைத்து ஒரு சிலர் மூளை கலங்கியதும் உண்டு. சரோஜாதேவி தோன்றிய "பாலும் பழமும்" படத்தை சிவகாசியைச் சேர்ந்த ஓர் இளைஞன் 60வது தடவை பார்த்தான். முடிவில் அவன் புத்தி கலங்கி சாந்தி, சாந்தி (பாலும் பழமும் படத்தில் சரோஜாவின் பாகம்) என்று கத்தத் தொடங்கிவிட்டான்.

இப்பேர்ப்பட்ட சரோஜா தேவியை மணக்கும் பேறு பெற்ற பாக்கியசாலி யார் என்று அறியும் நோக்கத்துடன் சரோஜாதேவியைப் பலர் கேட்பதும் உண்டு.

அதற்கு அவர், "நானும் ஒரு பெண்தானே, எனக்கும் ஒரு நாள் மணம் செய்ய ஆசையாக இருக்கத்தானே செய்யும்!" என்று கூறுவார். அத்துடன், சோதிடப்படி தை மாதத்தில் தனது மண விழா நடைபெறும் என்றும் கூறுவார்.



தேவர் பிலிம்ஸ் தயாரிப்புகளில் சரோஜாதேவி எம். ஜி. ஆர். சோடி அடுத்தடுத்து வருவதை எல்லோரும் கவனித்திருப்பர். தேவர் தயாரிப்பான 'பணத் தோட்ட'த்திலும் எம். ஜி. ஆருடன் ஜோடி சேரும் சரோஜாதேவியின் ஒய்யாரத் தோற்றம்.

# பெண்கள் அரங்கேற்றிய நாடகம்

தனியாகப் பெண்கள் சேர்ந்து ஒரு நாடகம் தயாரித்து மேடையேற்றுவது என்ருல் அது நடவாத காரியம் என்று கூறவேண்டும். ஆனல் அதனை நடக்கக் கூடிய நிகழ்ச்சி யாக்கிவிட்டார்கள் "காலக் கதிரவன் கன்னியர் கழகம்".

சென்ற சனிக்கிழமை கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற "புயலில் ஒரு மலர்" என்ற நாடகத்தைப் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பில் பயிலும் மாணவிகள் குழு அரங்கேற்றியது உண்மையிலேயே புகழ வேண்டிய செய்கையாகும்.

கதை, வசனம், இயக்கும் பொறுப்பு, டாக்டர் ராமேஷ் பாகம் எல்லாமே செல்வி கலாநிதி பொறுப்பெடுத்து வெற்றிகரமாகவும் செய்தார். இவரது துணிவை மெச்சத்தான் வேண்டும். பழக்கப்பட்ட நடிகர்கள் இல்லாதிருந்தும், [illegible] சத்தக்கதாக இப் பெண்கள் நடித்தனர். முக்கியமாக குமுதாவாகத் தோன்றிய

(13-ம் பக்கம் பார்க்க)



தேவிகா தன் விழிகளில் தேக்கியிருக்கும் பார்வையின் அர்த்தம் 'நெஞ்சில் ஓர் ஆலயம்' பார்த்தால் விளங்கும்.

## 100 நாள் ஓடிய படங்கள்

சென்ற வருடம் (1962) இந்தியாவில் திரையிடப்பட்ட தமிழ்ப் படங்களில் 100 நாட்கள் ஓடிய படங்கள் 6. அவையாவன:- நெஞ்சில் ஓர் ஆலயம், சாரதா, படித்தால் மட்டும் போதுமா, கொஞ்சும் சலங்கை, தாயைக் காத்த தனயன், தாய் சொல்லைத் தட்டாதே ஆகியன.

தாய் சொல்லைத் தட்டாதே, தாயைக் காத்த தனயன் இரண்டிலும் எம். ஜி. ராமச்சந்திரன் முக்கிய பாகத்தில் தோன்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் எழுத்தாளர் மன்றம்

# எழுத்தாளர் கூட்டணி அமைக்க முயற்சி

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மலைநாடு ஆகிய இடங்களிலுள்ள தமிழ் எழுத்தாளர் மன்றங்களுடன் ஒரு கூட்டணி யேற்படுத்துவதென்று, கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்கப் பணிமனையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மன்றப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மன்றத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேலும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை யாவன:

அண்மைக் காலத்தில் நடைபெற்ற சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்ற ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து ஒரு சிறுகதைத் தொகுப்பை வெளியிடுதல்.

இலங்கையிலுள்ள பல்வேறு கருத்துள்ள எழுத்தாளர்களையும் அழைத்து ஒரு கருத்தரங்கத்தை 19-5-63ல் நடத்துதல், கருத்தரங்கத்திற்குரிய பொருள் 'தமிழ் மொழியின் வாழ்வில் எழுத்தாளர் பங்கு' என்பதாகும்.

அண்மையில் தமிழ் எழுத்தாளர் மன்றம் விடுத்த வேண்டுகோட்படி தமிழ் பேசும் மக்கள் சகல அலுவல்களையும் தமிழ் மொழியில் மட்டுமே செய்து வருவதை இம் மன்றம் பாராட்டுகிறது. தற்போது வருமான வரிப் பத்திரங்களும், காசுக் கட்டளைகளும் தமிழ் மொழியில் கிடைக்கின்றன. எனவே தொடர்ந்து சகல அலுவல்களையும் தமிழ் மொழியில் செய்யும்படி தமிழ் பேசும் மக்களைப் பணிவன்புடன் வேண்டுகிறது.

இபோது வருமான வரி இலாகாவிலிருந்து ஆங்கிலப் பத்திரங்களுக்குப் பதிலாகத் தமிழ் பத்திரங்கள் கிடைப்பதால் வருமானவரி செலுத்தும் ஒவ்வொருவருக்கும் தமிழிலேயே வருமானவரிப் பத்திரங்களை நிரப்பி அனுப்புமாறு தனித்தனி வேண்டுகோள் அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறுகதைத்தொகுதி வெளியீடு சம்பந்தமாகவும், மன்றம் பற்றிய விபரமும் அறிய விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்: செயலாளர், தமிழ் எழுத்தாளர் மன்றம், கொழும்பு, 58 உருத்திரா வீதி, கொழும்பு.

### பெண்கள்...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வி மாலினி அப்படியே தத்ரூபமாக நடித்து எல்லோர் மனதையும் கவர்ந்தார். நடிப்புத் திறமை அவரிடம் இயற்கையாக அமைந்துள்ளது.

சுகுணாவின் பாகமேற்ற செல்வி சரோஜினி தன் நடிப்பாலும் பாட்டாலும் கவர்ந்தார். சோகக் காட்சிகளை நன்ருகச் செய்தார். மற்றும் கமலா, சுமதி, ராதா பாகங்களில் தோன்றினேர் தங்கள் பாகங்களைச் சரிவரச் செய்தனர்.

நகைச்சுவை ஆண் பாகத்தை ஏற்ற செல்வி புவனலோஜினி ரசிகர்களைச் சிரிக்க வைத்தார். காசிநாதராக வந்தவரின் நடிப்பும் குறிப்பிடத்தக்கது. ஆனல் அவரை வயோதிபராக்கிய திறமை ஒப்பனை செய்தவரைச் சாரும்.

பெண்களை சாட்சாத் ஆண்களாக்கிய திரு. முருகானந்தத்தின் ஒப்பனைத் திறனைக் குறிப்பிடத்தான் வேண்டும்.

ஒலி, ஒளி நன்ருக இருந்தது. குமுதாவின் சிறந்த நாட்டியத்தை மேலும் சிறப்படையச் செய்தது, ஒளியமைப்பு.

மேடை அமைப்பு, மற்ற நிர்வாக விடயங்களில் குறைகள் காணப்பட்டன. நாடகத்திலும் பிழைகள் இருக்கத்தான் செய்தன. ஆனல் முதல் தயாரிப்பில் இதற்கு மேல் எதிர்பார்க்க முடியாது.

முடிவில், போற்றத் தக்க செயல். தலைமை வகித்து அவர்களுக்கு பெருமளவில் தனித்தனியாக ஊக்கமளித்த, சைவ மங்கையர் கழகத் தலைமை ஆசிரியை போல் எல்லோரும் இவர்களுக்கு ஊக்கமளிப்பார்கள் என்று நம்புகிருேம்.

### ஊரெழு அரசினர் மருந்துச்சாலை திறப்பு விழா

'பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டுள்ள சேவையை, யான் பெரிதும் பாராட்டுகிறேன். இத்தகைய சேவை மனப்பான்மை ஒவ்வொரு தனிநபருக்கும், ஒவ்வொரு இனத்துக்கும் மிக இன்றியமையாததாகும்.' இவ்வாறு ஊரெழுவில் புதிதாக நிறுவப்பட்ட அரசினர் மருந்துச்சாலையைத் திறந்து வைத்த திரு. ச. தருமரத்தினம், வட பகுதி நில அதிகாரி அவர்கள் குறிப்பிட்டார்.

மேற்படி விழாவுக்குக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. நா. இராசையா தலைமை வகித்தார்.

# ஒரே வழி

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

நடுவழியில் போனவள் தண்ணீர் விடாயென்ருளாம். வீதியோரத்தில் கிடக்கும் தேநீர்க்கடையில் தண்ணீர் எடுப்பதற்காகக் கூட்டிச் சென்றபோது...

உறுமிக் கொண்டு வந்த 'பொலிஸ்' மோட்டார் வண்டி ஒன்று... ஐயோ! மறுகணம் வேலியோரத்தில் தூக்கியெறியப்பட்டார்கள். அந்த இடத்திலேயே என் அன்புப் பெட்டகத்தின் உயிர் போய்விட்டது. மருத்துவ விடுதிக்குக் கொண்டு செல்லப்பட்ட என் அன்னையின் உயிரும் அங்கு பிரிந்து விட்டது.

அன்னை மொழிக்காக என் அன்பரின் உயிர் போனது. ஈன்றெடுத்த என் அன்னையின் உயிர் போனது. நான் பெற்றெடுத்த அருஞ் செல்வம் தமிழ்ச் செல்வியின் உயிர் போனது. இவைகளுக்காக அழுதென்ன? தொழுதென்ன?

அடக்கு முறைச் சட்டத்தால் உயிர்ப் பிரச்சினையை முடித்துக் கட்டிவிடலாமென்று எண்ணிவிட்டதுபோலும் அரசாங்கம். ஒரு நாள் காலை, விடிவதற்கு முன்னல் பல மோட்டார் வாகனங்களில் படைகள் வந்திறங்கின, அடித்தனர், உதைத்தனர், இழுத்து வண்டிகளில் போட்டனர், பறந்தன வண்டிகள்.

திக்குத் தெரியாத காடுகளின் நடுவே இழுத்தெறிந்தனர். அவர்கள் செய்து விட்ட அக்கிரமங்களும் அநீதிகளும் ஆண்டவனுக்குப் பொறுக்காதவை.

நடக்க முடியாதவர்களாக நடந்தோம். ஊருக்குள் வந்தவுடன் ஊரடங்குச் சட்டம் என்று கேள்விப்பட்டோம்! காட்டு மிருகங்கள் நாட்டுக்குள் புகுந்துவந்தன போலிருந்தன பட்டாளத்தாரின் நடத்தைகள்.

ஓரிரவு... 'டே... யாருடா உள்ளே? விளக்கை நூருடா' என்னும் ஆணவப் பேச்சுக்கள் வீதியோரத்தில் கேட்டன. பக்கத்து வீடுகளில் உள்ளவர்களின் அழுகுரலும் பட்டாளத்தாரின் காலணி ஓசைகளும் வேறு சிலர் இடர்ப்பட்டு ஓடும் காலடி ஓசைகளும் கேட்டுத் திகைத்தேன். முற்றத்துக்கு வந்து பார்த்தவிடத்தில்—

எனது வளவுக்குள்ளும் இருவர் வருவதைக் கண்டேன். 'விளக்கை நூருடா வெண்டா வெளியிலயா நிக்கிறே?" என்றவன் பெண்ணென்று அறிந்ததும் 'எங்கையடி அவன்?' என்று அதட்டினுன். பேந்தப் பேந்த முழித்துக் கொண்டு நின்ற நான், அவர் இல்லையென்றேன். 'யாரு வூட்டுக்குள்ளே?' அரைவாசித் தமிழில் பேசினுன் மற்றவன்.

'யாருமில்லை' யென்றேன். 'கானி என்ருன்.

குளறினேன்.........திமிறினேன். அவன் முரட்டுப் பிடியிலிருந்து விடுபட முடியவில்லை! தூக்கி வளர்த்தினுன். பின்பு......?

சொத்தையிழந்தேன், கணவனையிழந்தேன், தாயை இழந்தேன், பெற்ற பிள்ளையை இழந்தேன். இவைகளை விடப் பேணி வளர்த்த என் கற்பையுப் இழந்து விட்டேன். இனிமேல் எனக்கு இங்கு என்ன வேலையிருக்கிறது? இத்தனை அக்கிரமங்களுக்கும் பொறுப்பானவர் யார்? அவர்கள் எப்படியாகப் போகின்ருர்கள்? நீதி தேவதையே நீயே பதில் சொல்லு!

என் குடும்பத்திலுள்ள அத்தனை பேர்களும் போன வழியே நானும் போகின்றேன். இத்தனை காலமாகக் காதலில் தோல்விகண்டவர்களுக்கும் வாழ்வு கசந்தவர்களுக்கும் ஆறுதலளித்த கல்லடிப் பாலமே, தாய்மொழியின் பேரால் கற்பையிழந்த என்னையும் ஏற்று ஆறுதலளிக்கும் என்ற நம்பிக்கையோடு அங்கு போகின்றேன். அதுதான் என் ஒரேவழி!

### மனேதத்துவ...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கதையில் குறைகள் இருப்பினும், புதுமையான கதை ஆரம்பம் தொடக்கம் முடிவு வரை பார்ப்போரை பிணைத்து வைக்கிறது. வசனம் நன்ருக இருக்கிறது.

பாடல்கள் கண்ணதாசனுடையவை. இசையமைப்பு விஸ்வநாதன் ராமமூர்த்தியின் கைகளில். இசை இனிமையாக இருக்கின்றது. படத்தைச் சிறப்பிக்கின்றது.

ஒளிப்பதிவு, படப்பிடிப்பு தம்புவின் கையில். வெளிப்புறக் காட்சிகள் கண்ணைக் கவருகின்றன. பார்த்து அனுபவிக்கக் கூடியதாக அமைந்துள்ளன. சரோஜாதேவியின் எழிலை மேலும் துலங்க வைக்கிருர் தம்பு.

இயக்கும் பொறுப்பு சங்கருடையது. சங்கர்-தம்பு சோடியின் திறமைக்கு இப்படம் ஓர் எடுத்துக் காட்டு என்றே கூற வேண்டும்.

முன்னேற்றத்திற்கு இடமிருப்பினும் புதுமையான கதை, சிறந்த நடிப்பு, இனிமையான பாடல், அழகான ஒளிப்பதிவு ஆகியன இப்படத்தைச் சிறப்பாக்கியுள்ளன.

—மதி.

# சுப்பையா நடேசபிள்ளை அன்றும் இன்றும்

யூ.என்.பி. தனிச் சிங்களத்தை ஏற்ற பொழுது, மந்திரியாக இருந்த திரு.சுப்பையா நடேசபிள்ளை பதவியிலிருந்து இராஜிநாமா செய்தார். அப்போது அவர் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய கல்லையும் கனிந்துருக வைக்கும் பேச்சின் சில உணர்ச்சி ததும்பும் பகுதிகள்:

"தமிழ் மொழியோ பழம் பெரும் மொழி - கலாச்சார தனித்துவம் வாய்ந்த மொழி. அத்தகைய மொழியினை மற்ருெரு மொழியினுக்குக் குறைந்த நிலைக்குத் தாழ்த்துவதை எந்தத் தன்மானமுள்ள தமிழனும் சகிக்க மாட்டான்."

"திரு.சபாநாயகர் அவர்களே, இக்கட்டடத்திலிருந்து, தமிழ் மக்களுக்கு, இச் சபைக்குள்ளும் வெளியிலுமுள்ள அங்கத்தவர்களுக்கு, ஒரு வேண்டுகோளை சமர்ப்பிக்க விரும்புகிறேன். கடுமையாகப் பேசுவது எனது வழக்கமல்ல. நான், தமிழ் மக்களை அவர்களுடைய பரம்பரை நிதானத்திலிருந்து மாறும்படி கேட்கவில்லை. ஆனல் எங்கள விருப்பத்துக்கு மாருக எங்கள் மீது ஒரு மொழி திணிக்கப்படுமேயானல், அதை நாம் எதிர்க்க வேண்டும், எதிர்த்தே தீருவோம் என்பதை நான் இங்கு சொல்லி வைப்பதை என்னுல் தவிர்க்க முடியாது. சிறந்த ஆத்மீக எதிர்ப்பு முறைகளை அனுட்டித்து, நாம் தொடர்ந்து போராட்டத்தை நடாத்துவோம். எனக்குப் பலாத்காரத்தில் நம்பிக்கையில்லை. உணர்ச்சிகளைக் கிளறி விடும் வெறும் சுலோகங்களை உச்சரிப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனல், தமிழ் மக்கள் அடைய வேண்டிய திட்டவட்டமான ஓர் இலட்சியத்தையிட்டு ஆக்கபூர்வமான போராட்டம் இருக்க வேண்டுமென விரும்புகிருேம். இது ஒரு குருட்டுப்பாய்ச்சல் என்றெனக்குத் தெரியும். ஆனல், பரம்பொருளில் நம்பிக்கை வைத்து, அதை நாம் செய்ய வேண்டியே இருக்கிறது."

அன்று இவ்விதம் கூறிய திரு.நடேசபிள்ளை, பின்வழியாக செனெட்டில் புகுந்த பின் என்ன சொல்லியிருக்கிருரென்று பாருங்கள்:

### மட்டுநகர் மக்களுக்கு மாவட்ட நீதிபதி பாராட்டு

"மட்டுநகர் மக்கள் தமிழ் தமிழ்ப் பற்றும், கலைப்பற்றும் நிறைந்தவர்கள். அவர்களுடைய பண்பும், அன்பும் நிறைந்த உயர் தன்மைகளை என்னல் என்றுமே மறக்க முடியாது."

இவ்வாறு மட்டுநகர் சிறுவர் கலைக் கழகம் தமக்களித்த பிரிவுபசார வைபவத்தில் கண்டிக்கு மாற்றலாகிச் சென்ற மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை குறிப்பிட்டார். வைபவத்திற்குக் கழகப் போஷகர் திரு. மாஸ்டர் சிவலிங்கம் தலைமை தாங்கினுர்.

தொடர்ந்து அவர் பேசுகையில், சிறுவர்களுக்கு ஒரு கலைக் கழகமும், நடமாடும் நூல் நிலையமும் இலங்கையில் கிழக்கிலேதான் உருவாகியுள்ளன" என்ருர்.

செல்வி ரவீந்திரா இராசதுரையின் பேச்சையடுத்துச் செல்வி நளினி இராமச்சந்திரன் நீதிபதி அவர்களின் பொதுநல சேவையைப் பாராட்டி, பிரிவுபசாரப் பத்திரத்தைப் படித்தளித்தார்.

நீதிபதியை வாழ்த்திச் செல்விகள் வனஜா-பரம், வனித்தா-ஞானசூரியம், பவானி-குமாரசாமி, ஜெயலெட்சுமி-சிவசுப்பிரமணியம், தவமலர்-தம்பிப்பிள்ளை ஆகியோர் வாழ்த்துப் பாடல் பாடினர்.

தேநீர் விருந்துடன் வைபவம் இனிது முடிவுற்றது.

"பிரதமருடன் நான் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகள், சிங்களம் அரச கரும மொழியும் தமிழுக்கு நியாய பூர்வமான உபயோகமுமென்று இப்போதுள்ள சட்டத்தினை அடிப்படையாக வைத்து அதிலிருந்து தொடர்ந்து நடைபெறுவதாக வேயிருக்கும். எந்தச் சட்டமும். அதனை இயற்றுமுன் இருந்த நிலைக்குத் திரும்ப வேண்டுமென்று எவரும் எதிர்பார்க்க முடியாது. இந்தப் போக்கில்தான் இப் பிரச்சினையைத் தொடர வேண்டும்."


## உங்கள் பிரச்சனைகள் என்ன?

மந்திர சக்தியின் மூலம் கீழ்க்காணும் விஷயங்களும் செய்து கொடுக்கப்படும்: வேண்டியவர்களை வசியம் செய்துகொள்ளவே, குடும்பத்திலுள்ள பிரச்சனையோ, கணவன் மனைவி ஒற்றுமையுடனும் சந்தோஷமுடன் வாழ்வது வியாபாரம், வேளாண்மை, தொழில் வகைகள் ஆகியவற்றில் முன்னேற்றம் விருத்தி, உயர்வு உண்டாக, உத்தியோகங்களை மேல் நிலைமையாக்கிக் கொள்வது வழக்கு வெற்றியடைய பரீட்சை சித்தியடைய, நேர் முகமாக கண்டு பேசக் கூடிய விஷயங்களில் வெற்றியடைவது, ஆண், பெண், வசியங்கள் ராஜவசியம், சர்வ ஜன வசியம் கண்திஸ்டி, முகதிஸ்டி, விலக, சூனியம், நஞ்சு கிரக தோஷம் பேய் பிசாசு ராஷித தோஷம் கெட்ட கனவு காண்பதும் விலக்க, குழந்தைகள் பிறந்தவுடன் இறந்துபோதல் மலட்டு தன்மை ருது தோஷ பேய் பிசாசு சேஷ்டையும் கிரகதோஷம், நெஞ்சுக் கவலை தீர்ப்பதுடனும் நினைத்துப் போகும் காரியம் சித்தியடையவும், விவாகங்கள் கைகூடவும் காதலில் வெற்றியடையவும் யந்திர மந்திர வேலைகள் செய்து கொடுக்கப்படும்.

விசேஷமாக இரகசியங்கள் ஒருபோதும்வெளியிடப் பட மாட்டாது. ஜாதி மத வேறுபாடுகள் இல்லை.

சந்திக்கும்நாட்கள்:—ஞாயிற்றுக்கிழமை கம்பளையில் அருத எண்ணெய் தலைமைக் காரியாலயத்திலும், செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை கொழும்பு, டாம் வீதியில் 371-ம் இலக்கம், அருத எண்ணெய காரியாலயத்திலும் என்னை நேரில் சந்திக்கலாம்.

விலாசம்:—அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்கா**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா.
அருத எண்ணெய் தலைமைக் காரியாலயம், கம்பளை,
அல்லது
இலக்கம் 371, டாம் வீதி, கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பருத்தியடைப்பு

—இமையவன்—

"ஈழத்திலே சங்கீதம் பிறந்த இடம் எது?" என்று கேட்டால் "பருத்தியடைப்பு" என்று யாருமே தயங்காமல் சொல்லி விடுவார்கள். சங்கீதத் துறையில் அவ்வளவு பிரபல்யம் அடைந்திருக்கிறது எமது கிராமம். இன்று திருகோணமலையில் வசித்துக்கொண்டிருப்பவரான சங்கீத ஆசிரியர் திரு. தில்லையம்பலத்தின் சொந்த இடம் இதுவே. ரேடியோ புகழ் சங்கீத வித்துவான் வி. சிவராஜாவும், வயலின் வி. கே. குமாரசுவாமியும் இங்கேதான் வசிக்கிறார்கள். இவர்களைத் தவிர இன்னும் ஏராளமான சங்கீதக் கலைஞர்களும் இங்கிருக்கிறார்கள். ஆனாலும் முன்னையிலும் இதன் வளர்ச்சி தற்போது தேய்ந்துகொண்டேவருகிறது. கலைஞர் ம. கைலாயபிள்ளை போன்றோர் இதை அழிந்துவிடாமல் காப்பதில் முனைந்து கொண்டிருக்கிறார்கள்.

சுமார் ஆயிரம் மக்களைக் கொண்டுள்ள இக்கிராமம் பெரும்பாலும், மீன்பிடியிலும், கப்பலோட்டி வர்த்தகம் செய்வதிலும் வருமானத்தைப் பெறுகிறது. ஆனால் இன்றைய அரசாங்க பதவி போகத்தால் இத்துறையில் அவர்கள் நாட்டம் அருகிக் கொண்டிருக்கிறது. நமக்கு வழிகாட்டியாகத்திகழும் தமிழரசுக் கட்சி வட மாகாணத்தின் பொருளாதாரத்தை நிலைநாட்டுவதற்காக கிளையொன்று நிறுவி இத்துறையில் ஊக்கம் தருமென் எதிர்பார்க்கிறோம்.

இயற்கையிலே நீர் வளமற்ற இப் பிரதேசத்தில் பருத்தி மரங்கள் நிறைந்து காணப்பட்ட காரணத்தினால் இதற்குப் "பருத்தியடைப்பு" என்ற பெயர் ஏற்பட்டதாகப் பெரியோர்கள் கூறுவர். ஆனாலும் இன்று இங்கு ஓரிரு பருத்தி மரங்களைக் கூடக் காண்பது அரிதாக இருக்கிறது. இதன் மேற்குப் பக்கமாக ஒல்லாந்தரால் கட்டப்பட்டு இழந்து போன கோட்டை ஒன்று காணப்படுகிறது. இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் காளை மாடுகளைச் சோதனை செய்து உள்நாட்டில் விற்பனையாக்கும் மாட்டுக் காலையும், இங்குதான் உள்ளது.

இவ்வாறு பல்லாற்றானும் சிறப்புற்று விளங்கும் இக்கிராமம் இன்னும் புகழடைய வேண்டுமேயானால் சண்டைகளும், சச்சரவுகளும் பூசல்களும் ஒழிந்து தெளிந்த ஆற்று நீரன்ன தூய உள்ளம் கொண்ட கலைஞர்கள் தோன்ற வேண்டும்.

## இந்த ஊர் தெரியுமா?

செல்வகுமாரி,
ஜெகநாதன்.

1-ம் எழுத்து கடையில் உண்டு, வியாபாரியில் இல்லை.
2-ம் எழுத்து கல்லில் உண்டு, மண்ணில் இல்லை
3-ம் எழுத்து முகத்தில் உண்டு, பல்லில் இல்லை
4-ம் எழுத்து பனையில் உண்டு, கமுகில் இல்லை.

[illegible]

## ஈழத் தமிழரின் அறப்போர்

—தி. நித்தியானந்தன்,
மாவிட்டபுரம்—

தமிழர்கள் விழித்தெழுந்து விட்டார்கள். அவர்களுக்கெதிராகத் திட்டப்பட்ட திட்டங்கள் மட்டந்தட்டபபட்டு விட்டன. எங்கும் கம்பீரமான உரிமைக் குரல்! பாலகன் முதல் பாட்டன்வரை தோளோடு தோள் நின்று போர் புரியப் புறப்பட்டதைக் கண்ட எதிரிகளுக்கு நடுக்கம் பிடித்துவிட்டது! அச்சம் நீங்கி ஆண்மை வளர்கிறது தமிழ்ச் சமுதாயத்திலே!

விறற் கொடி நாட்டப் புறப்பட்ட தமிழரின் போக்கை எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. வெற்றிப் பாதையிலே வீறுநடை போட்டுச் செல்லும் ஏறனைய வீரத் தமிழரிடையே ஒற்றுமை மென்மேலும் வளர்கிறது. வடக்கும் கிழக்கும் திரண்டு விட்டன! இளைஞரது உள்ளம் கொதிக்கிறது, உடல் குமுறுகிறது, தமிழன்னையைக் காக்க! அறமும் அகிம்சையும் பொங்கி வழிகின்றன.

ஒருவனுக்கு உயிர், அவனது மொழி. உடல், பிறந்த நாடு. உயிரின்றேல் உடலில்லை. மொழிச் சுதந்திரம் இல்லாவிட்டால் நாடே கிடையாது. மொழியுரிமையற்றவன் நாடற்ற அனாதை. ஆம்; இன்றைய தமிழர், ஈழத்தின் முது பெருங்குடி. யாம் தமிழ்க் குடியின் வழித்தோன்றல்கள், அனாதைகளாவதா? அந்தோ! இது நியாயமா? இதைத் தெய்வம் ஏற்குமா? தமிழ்ப் பெருங்குடியை அனாதைகளாக்க முனைகிறார்கள் மாற்றார்கள். இதைக் கண்டு பொங்கியெழுந்தனர் தமிழ் மக்கள். தமிழர்களின் சோதனைக் காலத்தின் முதல் அத்தியாயம் ஆரம்பித்துவிட்டது. இதுவரை இருந்த பொறுமையும் வீரமும் தொடர்ந்து இருக்க வேண்டும். தமிழரிடையே ஒற்றுமை மேலும் வளர வேண்டும். உரிமை முழக்கம் எங்கும் ஒலிக்க வேண்டும்.

அறப்போர் என்பது மிக இலகுவான தொன்றல்ல. அல்லல்கள் அடுக்கடுக்காய் அறப்போரை நெருக்கும். எவ்வின்னல் வந்துற்றகாலையும் மனந்தளராது, பொறுமையுடன் செயலாற்றல் அவசியம். கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இருபதாம் நாள் தொடங்கிய சத்தியாக்கிரகத்தின்போது வந்துற்ற இன்னல்கள் எத்தனை! அடியும் உதையும் பெற்ற ஆண்மையாளர் எத்தனை! கொதிக்கும் வெய்யிலிலே வீர முழக்கமெழுப்பி நீண்டதூர ஊர்வலங்கள் நடத்திய தொண்டர்கள் எத்தனை! கரங்களிலே துப்பாக்கி தாங்கி, காலனைப்போல் வந்த இராணுவத்தைக் கண்டு அஞ்சாது அடியும் உதையும் பரிசு பெற்ற தமிழ்த் தலைவர்களினதும் தொண்டர்களினதும் பெருமை எழுதி முடியுமா? சொல்லி முடியுமா?



மேலே காணப்படு[illegible] அமெரிக்க குதிரைச் சவாரி [illegible] இவர் வருடத்துக்கு எவ்வளவு பணம் உழைக்கிறார் தெரியுமா? 90,000 டொலர்!

## மணி மொழிகள்

தொகுத்தவர்:
தமிழழகன்
ஊவாகட்டவளை.

அடக்கி ஆளுவதைவிட அன்பினால் ஆளுவதே மேல்.

—காந்திஜி

இரத்தத்தைச் சுரக்கும் என் இதயத்திற்கு அன்பைச் சுரக்க ஆணையிடு இறைவா!

—தாகூர்

எதை மறைத்தாலும் மறைக்கலாம் ஆனால் காதலையும், இருமலையும் மறைக்க முடியாது.

—ஜார்ஜ் ஹெர்பட்

தாயின் அன்பை வெளியிட உலகத்தில் எந்த மொழியிலும் போதிய வார்த்தைகள் இல்லை.

—சோபின்

இரவில் காணப்படும் நட்சத்திரங்கள் சூரியன் உதித்தவுடன் காணப்படுவதில்லை. அதனால் பகலில் வானில் நட்சத்திரங்கள் இல்லை எனலாமா? நாம் அஞ்ஞான திசையில் இருக்கையில் இறைவன் தெரிய மாட்டார். அதனால் இறைவன் இல்லையென்று கூறுதே.

—பரமஹம்சர்

## தம்பி! கவனி!

க. செல்வநாயகம், மாதகல்

சுறுசுறுப்பாயிரு!
ஆனால்—
படபடப்பாயிராதே!
பொறுமையாயிரு!
ஆனால்—
சோம்பேறியாயிராதே!
பற்றற்று இரு!
ஆனால்—
காட்டுக்குப் போய்விடாதே!
இல்லறத்தை நடத்து!
ஆனால்—
இளிச்சவாயனாகாதே!
அன்பாயிரு!
ஆனால்—
அடிமையாயிராதே!
கொடையாளியாயிரு!
ஆனால்—
ஓட்டாண்டியாய் விடாதே!
சிக்கனமாயிரு!
ஆனால்—
கருமியாயிராதே!
இரக்கம் காட்டு!
ஆனால்—
ஏமாந்து போகாதே!

## உங்களுக்குத் தெரியுமா?

தொகுத்தவர்:
செல்வி ஜெயராணி
சபாபதிப்பிள்ளை,
மல்லாகம்.

### கேள்விகள்

(1) அணிலுக்கு வால் எப்படியெப்படி உதவுகிறது?
(2) தண்ணீரில் ஏன் அதிக நேரம் எருமை கிடக்கிறது?
(3) நாய் களைத்தவுடன் வியர்வை எவ்வழியாக வெளி ஏறுகிறது?
(4) எப்பகுதி பறவைகளுக்கு இறக்கைகளாக மாறியுள்ளன?
(5) காகத்தை ஏன் "ஆகாயத் தோட்டி" என்று கூறுவர்?

### விடைகள்

(1) மரங்களிலிருந்து விழும்பொழுது ஆகாயக் குடை (பரசூட்) போன்று; அபாயம் வராமல் காக்கவும், சம நிலையில் பாய்வதற்கும் உதவுகிறது.
(2) சூரிய உஷ்ணத்தை தாங்க முடியாத காரணத்தால்.
(3) நாவின் வழியாக.
(4) முன்னங்கால்கள்.
(5) அழுகிய பொருட்களை உண்டு சுத்தம் செய்வதால்.



—க. இராணி நவமணி—

இங்கு நடந்த எல்லாவற்றையும் ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் நின்றான் சிறுவன். என்ன செய்வதென்றே அவனுக்குத் தோன்றவில்லை. கட்டி வைத்திருந்தவளைச் சவுக்கால் அடித்தபோது 'ஐயோ' வென்று தன்னை மறந்தே அலறிவிட்டான்!

இச்சத்தத்தைக் கேட்ட அந்த முரடன் 'யாரது?' என்று சுற்றும் முற்றும் பார்த்தான். சிறுவன் உடனே ஜன்னலை விட்டகன்று மறைந்து கொண்டான். அப்போது மற்றப் பெண்களும் அழுதுகொண்டிருந்தனர். அதனால் இவர்கள்தான் அலறியிருக்க வேண்டுமென்று நினைத்து 'அழுகிறீர்களா? நன்றாக அழுது புலம்புங்கள்!' என்று கூறிவிட்டு, முன் பக்கமாகப் போய்விட்டான்.

சிறுவன் மரத்தில் ஏறிக் கொண்டான்.

வெகு நேரத்தின் பின் குதிரையில் சென்றவர்கள் திரும்பினர். முன்போல் பொருட்களையும் கன்னியர்களையும் கடத்திவந்திருந்தனர். அதில் ஒருவன் குதிரை மேல் பிணமாக வந்திருந்தான். முதுகில் ஒரு அம்பு பாய்ச்சப்பட்டிருந்தது.

இதைக் கண்ட தலைவன், 'என்ன நடந்தது?' என்று பரபரப்புடன் கேட்டான்.

ஒருவன் நடந்தவற்றைக் கூறினான்: 'நாங்கள் கொள்ளையடித்துவிட்டு வரும்போது, எதிர்பாராதவிதமாக மக்கள் எங்களை வழி மறித்தனர். நாங்கள் நாலு பக்கத்தாலும் குதிரையைச் செலுத்திக்கொண்டு வேகமாக வந்தோம். இறந்தவனும் நானும் ஒரே தெருவில் வேகமாக வந்தோம். சாதாரண உடையில் இருந்த ஒருவன் இவன் மேல் அம்பைப் பாய்ச்சி விட்டான். அதன் பின்னும் இவன் வெகுதூரம் வேகமாக வந்தான். அருகில் வந்த பின்தான் உயிர் இவன் உடலை விட்டுப் பிரிந்தது' என்றான்.

'நல்ல வேளை! அவர்கள் கையில் அகப்பட்டு என்னைக் காட்டிக்கொடுக்காமல், எல்லோரும் வந்து சேர்ந்து விட்டீர்களே!' என்றான் தலைவன்.

'சாதாரண உடையில் வந்தவர் சாதாரண மனிதனல்ல. அவன் தான் அந்த நாட்டு அரசன். இனிமேல் தான் நாம் விழிப்பாக இருக்க வேண்டும். அவன் பொல்லாதவன். நாம் இங்கு இருப்பது அவனுக்குத் தெரிந்தால், உடனே வந்து, இருக்குமிடந் தெரியாமல் பூண்டோடு அழித்துவிடுவான். இப்போது நாட்டிற்குள் இருக்கும் சிலர்தான் இரவில் திருட்டு நடத்துகிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். ஆகையால் நீங்கள் காட்டிற்குள் நுழையும்போது யாராவது கண்டால் உடனே அவர்களைக் கொன்று விடுங்கள்' என்று ஒரு புதுச்சட்டத்தையும் பிறப்பித்தான்.

பின் எல்லோரும் வீட்டினுள் சென்றனர். சிறுவன் அன்றிரவை மரத்தில் கழித்தான். விடிந்ததும் தனது வீட்டிற்குப் பயணமானான். அவன் போகும் போது வழியெங்கும் அடையாளங்களை இட்டுக்கொண்டே போனான்.

அதிகாலையில் புறப்பட்ட அவன் மாலை மூன்று மணியளவில் வீட்டை அடைந்தான். அவன் தாய், அவனைக் கண்டதும், கண்ணிழந்தான் கண் பெற்றாற் போல, அன்புடன் அணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் உகுத்தாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### தொல்புரம் நாணய சங்கக் கூட்டம்

தொல்புரம் வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தின் 35-ம் ஆண்டுப் பொதுக்கூட்டம் 8-4-63 பிற்பகல் 6 மணியளவில் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. ப. முருகேசு தலைமையில் நடைபெற்றது. காரியதரிசி, தனதிகாரி, ஆகியோரின் அறிக்கைகள் வாசிக்கப்பட்டுச் சபையோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சங்கக் கடன் விநியோகம் பற்றியும் சங்க வளர்ச்சி பற்றியும் சங்கக் காரியதரிசி திரு. ச. கயிலாசபிள்ளை உரை நிகழ்த்தினர்.

அடுத்துப் புதுவருட உத்தியோகத்தராகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. செ. கந்தையா (இளைப்பாறிய கிராம அதிகாரி) காரியதரிசி: திரு. ச கயிலாசபிள்ளை, உப காரியதரிசி: திரு. க. பாலசுப்பிரமணியம், தனதிகாரி: திரு. மு. நடராசா.

### தமிழிசை நாடக மன்றம்

சென்ற 15-4-63-ல் கொச்சிக்கடை/ஆனைகால் என்னும் இடத்தில் திரு. எஸ். ஏ. பெருமாள் அவர்கள் தலைமையில் "தமிழிசை நாடக மன்றம்" ஆரம்ப விழா நடைபெற்றது.

பலர் பேசிய பின் கீழ்க் கண்டோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். உரிமையாளர்கள்: திருவாளர்கள் ஏ. எல். பெருமாள், ஏ.செல்வராஜ், செயலாளர்: திரு. ஏ.வி. செல்லையா. முதல் நாடகமாக தமிழகத்தில் புகழ் பெற்ற "கைதியின் தங்கை" என்னும் நாடகத்தை அரங்கேற்றுவதென்றும் அதன் டைரக்டராக திரு. எஸ். ஏ. பெருமாள் அவர்களை நியமிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. பின் "கைதியின் தங்கை" நாடகத்தின் ஒரு பகுதி ஒத்திகை பார்க்கப்பட்டது.

## மாணவர் திறமை வெளிப்பட ஆசிரியர்கள் உதவ வேண்டும்

### 'சுடரொளி' ஆண்டு மலர் வெளியீட்டு விழா

"நமது மாணவர்களிடம் பலவிதமான திறமைகள் இருக்கின்றன. அவற்றை இனங்கண்டு, சரியான முறையில் வளர்த்தால், எதிர்கால உலகம் அந்த மாணவர்களினால் பெரிதும் பயனடையும். இந்தப் பணியில் ஆசிரியர்களின் பங்கு மேலானது. இக் கல்லூரியின் அதிபரும் ஆசிரியர்களும் ஒவ்வொரு மாணவனிடமும் மாணவியிடமும் மறைந்திருக்கும் திறமையை வெளிக் கொணரப் பாடுபடுவதைப் பார்த்து, இக் கல்லூரியின் பழைய மாணவன் என்ற முறையில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். மாணவர்களின் சிந்தனையை நல்ல முறையில் வளர்க்க வேண்டும். தூய்மையான எண்ணங்கள் தோன்றும் போது அவற்றை எழுத்தில் வடித்தால், அவற்றால் மற்றையோரும் பயனடைவார்கள். இளம் மாணவர்களின் எழுத்தோவியங்களைக் கொண்டுள்ள "சுடரொளி" எழுத்தாளர்களை உருவாக்கும் பணியைச் செய்து வருகின்றது" என, இலங்கைப் பல்கலைக் கழகக் கல்வி விரிவுரையாளர் திரு. ச. முத்துலிங்கம், எம். ஏ. அவர்கள் யாழ்/திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி மாணவர் மன்றத்தினரின் "சுடரொளி" ஆண்டு மலரை வெளியிட்டு வைத்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

இவ்விழா, கல்லூரி அதிபர் திரு. நா. கணபதிப்பிள்ளை, பி. ஏ. பி. எஸ். ஸி. அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திரு. சி. சரவணபவன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

அடுத்துப் பேசிய கலையரசு க. சொர்ணலிங்கம் அவர்கள், சமூக நாடகம் என்ற பெயரில், இக் காலத்தில் தேவையற்ற பல குப்பைகள் அரங்கேறுகின்றன. நாடகத்தை மேடையிட்டுப் புகழ் பெற வேண்டும் என்ற ஆர்வம் வளர்ந்துள்ள அளவிற்கு நாடகங்களின் தரம் உயரவில்லை. சமூக நாடகங்களிலும் பார்க்கச் சரித்திர நாடகங்களைத் தயாரிப்பது மகா கஷ்டம். நாடகத்தின் பொதுப் பண்புகள் கவனிக்கப்பட வேண்டியதுடன், சரித்திர நாடகங்கள், அந்த நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலத்திற்கு ரசிகர்களை எடுத்துச் செல்லக் கூடியவையாகவும் இருக்கவேண்டும். சிரமசாத்தியமான இப் பொறுப்பைத் துணிவுடன் ஏற்றுள்ள இக் கல்லூரியின் ஆசிரியர்களையும் மாணவர்களையும் நான் பாராட்டுகின்றேன். சென்ற சில ஆண்டுகளாக, சிறந்த நாடகங்களை இக் கல்லூரியினர் அரங்கேற்றி வருகின்றனர். அவையெல்லாவற்றையும்விட இன்றைய நாடகம் சிறந்ததாக இருக்கும் என நம்புகிறேன்" என்று குறிப்பிட்டார்.

பின், செல்விகள் கி. கிருஷ்ணராணி, ஆ. விஜயலட்சுமி ஆகியோரின் நடனங்களும், மற்றைய மாணவிகளின் கும்மியும் நடைபெற்றதைத் தொடர்ந்து திரு. ம. சண்முகலிங்கம் நன்றியுரை கூறினர்.

ஈற்றில், "சிற்பி" அவர்களால் எழுதப் பெற்று, ம. சண்முகலிங்கம் அவர்களால் நட்டுவாங்கம் செய்யப் பெற்ற "மணப்பரிசு" என்ற சரித்திர நாடகம் மாணவர்களால் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

### செங்கலடி விடிவெள்ளி விளையாட்டுக் கழகம்

செங்கலடி விடிவெள்ளி விளையாட்டுக் கழகத்தினரால் ஆண்டுதோறும் நடாத்தப்பெற்றுவரும் புத்தாண்டு விளையாட்டுப் போட்டி இவ்வாண்டு மிகவும் சிறப்பாக வைத்திய அதிகாரி திரு. சிவஞானசுந்தரம் தலைமையில் கழக மைதானத்தில் நடைபெற்றது.

மட்டுநகரைச் சேர்ந்த மாஸ்டர் சிவலிங்கம் கோஷ்டியினரால் கந்தப்பன் என்னும் நாடகம் நடிக்கப் பெற்றது. கலைக் குரிசில் ஜீவா கோஷ்டியும், செல்வி. சாந்தினியும் இன்னிசை விருந்தளித்தனர்.

பின்வரும் போட்டிகள் இடம் பெற்றன: 32 மைல் துவிச்சக்கர வண்டிப் போட்டி, 2 மைல் கால் ஓட்டம், வயோதிபர் சுருட்டுப் பற்றவைத்தல், கைப் பந்தாட்டப் போட்டி.

ஏறாவூரிலே பலமிக்க கோஷ்டியான, வை. எம். எ. "எ" கோஷ்டிக்கும் டாக்டர் சொக்கலிங்கம் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சொக்கலிங்கம் கோஷ்டி மிக இலகுவாக வை. எம். எ. கோஷ்டியைத் தோற்கடித்தது.

வெற்றி பெற்றோருக்கு கல்குடா பாராளுமன்ற உறுப்பினரான திரு. மாணிக்கவாசகரால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

## போரில் மாண்ட....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன என்று இருந்து விடவில்லை. இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் சிறையில் அடைக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் நிவாரணம் அளிக்கும் பணியில் பலர் இறங்கினர். இவர்களை முன்னின்று நடாத்தியவர் காலஞ்சென்ற தோமஸ் கிளாக்கின் மனைவியாராவர்.

நிவாரணம் அளிக்கும் காரணத்திற்காகவும் நாட்டு விடுதலையைப் போராடிப் பெறுவதற்காகவும் சின்பின் இயக்கத்திற்குப் புத்துயிர் அளிக்கப் பலர் முற்பட்டனர். 1905ம் ஆண்டில் ஆதர் கிரிபித்தால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் சின் பீன். அ. கு. மன்றத்தின் இரகசிய நடவடிக்கைகளை விரும்பாத கிரிபித், ஆங்கில அரசருக்குக் கீழ்ப்படிந்த ஒரு சுதந்திர நாடாக அயர்நாடு திகழ வேண்டுமென விரும்பினர். அவர் தொடங்கிய சின் பீனும் அக்கொள்கையையே வற்புறுத்தியது. இருந்தும், ஈஸ்ரர் வாரப் புரட்சியைத் தொடர்ந்து ஆதர் கிரிபித்தும் கைது செய்யப்பட்டு விட்டார். அவருடைய அனுமதியின்றியே சின் பீனைப் புனருத்தாரணம் செய்ய மக்கள் விரும்பியதன் காரணம் சின் பீன் என்ற பெயர்தான். புதிய சின் பீனின் அடிப்படைக் கொள்கை, ஆங்கில ஆட்சியை உதாசினம்செய்து அயர் குடியரசை நிறுவுவதே. அவசியம் ஏற்படின் ஆயுதம் ஏந்தவும் வேண்டும் என்று அவ்வியக்கம் கூறியது.

அயர்நாடு ஈன்றெடுத்த தவப் புதல்வர்களில்பதினைந்துபேர் படுகொலை செய்யப்பட்ட சில தினங்களிலேயே சின் பீன் இயக்கத்திற்குத் திரும்பவும் உயிரூட்டப் பொது மக்கள் துணிந்தார்கள் என்றால், மரணத்திலும் பார்க்க நாட்டின் விடுதலையையே அவர்கள் மேலாக மதிக்கிறார்கள் என்றுதான் அது பொருள்படும்.

கைது செய்யப்பட்ட 3500க்கு மேற்பட்ட ஆண்களில் ஏறத்தாழ 1000 பேரும் 79 பெண்களில் 75 பேரும் ...

பட்டனர். ஏனையோரை இங்கிலாந்திற்குக் கொண்டு செல்வதற்கான ஒழுங்குகள் பூர்த்தியாகின. தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஈரிருவராக விலங்கிடப்பட்டும் மற்றவர்கள் விலங்கிடப்படாமலும் டப்ளின் துறைமுகத்திற்கு நடத்திச் செல்லப்பட்டனர். அக்கைதிகள் வழி நெடுகே கண்ட காட்சி அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. எந்த மக்கள் அவர்களைப் புரட்சியாளர்கள், குழப்பக்காரர்கள், தொல்லை தருபவர்கள், அடி வாங்கித் தருபவர்கள் என்று திட்டினார்களோ, எந்த மக்கள் ஆங்கில ஆட்சியினருக்கு ஆலவட்டம் பிடித்தார்களோ, அதே மக்கள், ஆயிரக்கணக்கில், எள் போட்டால் எண்ணெய் எனும் வண்ணம், கலங்கிய கண்களுடன் நின்று, அவர்களை— தமது வீரச் சகோதர சகோதரிகளை, வாழ்த்தி வழியனுப்ப வந்திருந்தார்கள்; கைதிகளின் கைகளில் பொருட்களை அன்பளிப்பாக இறைத்தார்கள்.

அன்று அயர்நாடு இருந்த நிலையென்ன? மொழி உரிமைக்காக, குடி உரிமைக்காக, நில உரிமைக்காக, தம்மைத் தாமே ஆளும் உரிமைக்காக மக்களில் ஒரு பகுதியினர் போர்க்கொடி உயர்த்தினார்கள். அவர்கள் பணத்தை மதிக்கவில்லை; பதவியை எண்ணவில்லை; குடும்பத்தை நினைக்கவில்லை. "சுதந்திரம் நமது பிறப்புரிமை" என்று கூறிக் குமுறி எழுந்தனர். அதன் விளைவுதான்............ காணும் இடமெல்லாம் மனித அங்கங்கள், முண்டங்கள், கரமிழந்தவர்கள், கால்களை இழந்தவர்கள், காதுகள் சின்னாபின்னம் அடைந்தவர்கள், கண்களைப் பறிகொடுத்தவர்கள், பெற்றோரை இழந்தவர்கள், புதல்வர்களைப் பறிகொடுத்தவர்கள், கணவன்மாரைக் காண முடியாது தத்தளித்தவர்கள், சகோதரர்களைச் சவக்குவியலில் கண்டவர்கள்—பார்க்கும் இடமெல்லாம் பிணக்குவியல், செல்லும் இடமெல்லாம் இரத்த வெள்ளம், இதை நினைக்கும் பொழுது............

## மக்கள் குரல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்பு எனக்குத் தமிழில், விண்ணப்பப் படிவம் கொடுத்துள்ளனர். தமிழில் செய்ய வசதியிருந்தும் ஆங்கிலத்திலேயே செய்விக்க விரும்புவது ஓர் சாதுரியமான செயல்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள வங்கி உத்தியோகத்தர்கள் ஆங்கிலத்தில் செய்விக்க விரும்புகின்றனர். எனது கணக்கு எண் 645. இக்கிளையில் கணக்கு வைத்திருப்போர் எத்தனை பேரென்று, எனது கணக்கு இலக்கத்தால் அறியலாம். எம்மிற்பலர் தமிழிற் செய்ய வசதியிருந்தும், ஆங்கிலத்துடன் சாகின்றனர். தமிழிற் செய்துதமிழைக்காக்க வேண்டிய,எம் தமிழ் சகோதரர்கள் இன்றைய நிலையை உணர்ந்துதானும் தமிழ் மொழியில் எமது அலுவலைச் செய்ய முன்வராததேனோ அறியேன். கணக்கு இலக்கம் 645. இத்தனை பேருள்ள இந்த வங்கியில் யான் ஒருவன்தான் தமிழிற் செய்கிறேனோ வேறுமுண்டோ எனச் சந்தேகப்படுகிறேன். யாம் எல்லோரும் தமிழிற் செய்தால், எமது அருமைத் தமிழ் காக்கப்படுகின்றது. முகாமையாளர் தமிழர் ஒருவருக்கு இடமளிப்போம். இங்கிருக்கும் எழுதுவினைஞர்கள் தமிழராகவே தொடர்ந்து இருக்கவும் உதவிபுரிந்தோராவோம். யான் எனது காசோலையைத் தமிழ் மொழியில் எழுதி அனுப்புவதில் [illegible] ... இன்றேன்.

— பொ. தம்பு, வரணி.

## நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ன இருந்தாலும் நான் ஆச்சிரியச் சம்மதிக்க வைப்பன்!......"

"அப்ப உங்க அண்ணை ஒத்துக் கொள்வாரா..."

அவனுக்கு என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை; அண்ணன் அவனுடைய விருப்பத்திற்கு ஒத்துக்கொள்ள மாட்டானா!

"தம்பி!..." என்றழைக்கிறான், நடராசா.

"என்னண்ணை?..." என்று கேட்கிறான், ராஜகோபால்.

"நீ ஏதோ, பள்ளிக்கூடத்திலை சுற்றுப் பயணம் போறதெண்டு சொன்னயே? எப்ப போறாய்......? எப்ப காசு கொடுக்க வேணும்...? உனக்குப் போக விருப்பந்தானே...?"

"போக விருப்பந்தான், அண்ணை! ஆனா, நாற்பது ருபாவல்லே வேணும்...?"

"அதுக்கென்ன...? நீ பெயரைக் கொடு! நாளைக்குக் காசு கொடுக்கலாம்!..."

அண்ணன் கூறியபடி, அடுத்த நாள், எங்கேயோ மாறிப் பணந் தந்தான். ராஜகோபாலின் விருப்பத்திற்காக அவன் எதையும் செய்வான். ஆனால்—

'அது பணம்...! இது வாழ்வல்லவா...?'

பணத்தைத் தரத் தயங்காத அண்ணன், அவனுக்கு விரும்பிய வாழ்வைத் தர மறுப்பானா? சிலவேளை...கனகத்தில் ஏற்பட்ட வடு, இவள் விஷயத்திலும் தலையிடுமோ?

'புவனம்! அண்ணை நிச்சயமாக ஒப்புக்கொள்வான்! என் அண்ணனை எனக்குத் தெரியாதா? நிச்சயமாக ஒத்துக்கொள்வான்...!'

'நான் பாக்கியசாலி!...' என்கிறாள், புவனம்.

'இனியும் நிற்கக்கூடாது, ராஜ்! நீங்க வீட்டை போங்க...! ஆராவது உங்களைப் படுக்கையிலை பாத்துட்டுத் தேடினா...? பிறகு ஆபத்து! நான் வாறன்...'

அவள் வீட்டை நோக்கி நடக்கிறாள், புவனின் நடை அவனுக்கு நினைவு வருகிறது.

'போய் வா, குஞ்சு!......' அவன் விடை கொடுக்கிறான்.

* *

வேப்பமரத்தின் நிழல் சுருங்கிச் சிறுத்து விட்டது; கூதல் காற்றும் சற்றுப் பலமாக வீசுகிறது. அவன் வேலிக்குக் கீழே இருந்த 'பொட்டு'க்குள்ளால், தன்னுடைய வளவிற்குள் நுழைகிறான். கைகளிலிருந்த மண்ணைத் தட்டிவிட்டு எழுந்து நிமிரும் போது, தரையின் மேல் 'சீறீக்' கொண்டிருந்த கல்லொன்று அவன் வலக்கால் பெருவிரலைப் பதம்பார்த்து விடுகிறது.

'ஆ...!' காலைத் தூக்கிப் பார்க்கிறான்; பெருவிரலின் தடித்த தோல் பிளந்து, 'விண்'ணென்று வலிக்கிறது.

'நாளைக்குச் சப்பாத்தும் போட முடியாது!'

மெதுவாக நடந்து வீட்டை நெருங்குகிறான்; திண்ணையைக் கடந்து, தன்னுடைய அறைக்குள் காலை வைக்கும் போது—

'எங்கை போயிட்டு வாறாய்?...' என்ற கேள்வி எழுகிறது.

அண்ணன் குரலது.

அறைக்குள் நுழையக் காலெடுத்து வைத்த [illegible] இதயம், ஒரு கணம் செயலற்று நிற்கிறது.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை)

மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி (இரத்தினபுரி) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)



சென்னையில் நான்கு படமாளிகைகளில் 100 வது நாள் விழா கொண்டாடிய சிறந்த திரைச் சித்திரம்!

உள்ளத்தைத் தொடும் உருக்கமான குடும்பப் படம்!
உணர்ச்சியின் விளிம்பைத் தொடும் சம்பவங்கள்!
குறும்புத்தனம், குதூகலம், குமுறல், கொந்தளிப்பு
அத்தனையும் பின்னிய அருமையான கதை!

**சிவாஜி கணேசன்—பி. சரோஜாதேவி**
எஸ். எஸ். ராஜேந்திரன்-ஆர். விஜயகுமாரி-எம். ஆர். ராதா
எம். வி. ராஜம்மா-வி. நாகையா-டி. ஆர். ராமச்சந்திரன்
புஷ்பலதா மற்றும் பலர் நடித்த

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
டைரக்ஷன் கே. சங்கர்
பின்னணி: சௌந்தரராஜன்-கோவிந்தராஜன் சுசீலா-ஜானகி

பி.எஸ்.வி. பிக்சர்ஸ்

# ஆலயமணி

---


## 3-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

**எல்பின்ஸ்டன்** (மருதானை)

கிங்ஸ் (பதுளை) வின்ஸர் (யாழ்ப்பாணம்)

நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டக்களப்பு)

சிவாஜி கணேசன், சாவித்திரி, எம்.என்.ராஜம், எஸ்.வி.சுப்பையா, வி. கே. ராமசாமி, ஏ. கருணாநிதி, வி. ஆர். ராஜகோபால், எஸ். வரலட்சுமி, முத்துலட்சுமி, மனோரமா தோன்றும் உன்னத சித்திரம்




**8 வது வாரமாக கெயிட்டி திரையில்!**

சிவாஜி கணேசன்—சாவித்திரி
சந்திரபாபு—எம். ஆர். ராதா
நடிக்கும்

## பாத காணிக்கை

---

# 3-வது வெற்றி வாரம்!

175 நாட்களுக்குமேல் ஓடிய, இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கம் பெற்ற, ஒரே ஒரு தமிழ்ப் படம்.

**சென்ட்ரல்** (மருதானை) **ரொக்ஸி** (வெள்ளவத்தை)

ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருகோணமலை) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு)

மற்றும் ஆறு திரைகளில்

இசை: விஸ்வநாதன் - ராமமூர்த்தி



ஸ்ரீதரின்

# நெஞ்சில் ஓர் ஆலயம்

* சிறந்த கதை * நிறைந்த கருத்து
* உயர்ந்த நடிப்பு * உணர்ச்சித் துடிப்பு

- காதலுக்கும் கடமைக்கும் இடையில் ஏற்படும் மோதல்.
- குறைந்த காலத்தில் சிறப்புடன் தயாராகித் தென்னகத் திரைவானில் தனிக்கொடி நாட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஏப்ரல் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.